விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.
Email.Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி 26 செவ்வாய்க்கிழமை (13.10.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 298

# தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டம்

## விடுதலையை வலியுறுத்தி

(கொழும்பு)

**எவ்வித விசாரணையுமின்றி சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளை அரசு விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி தமிழ் அரசியல் கைதிகள் நேற்று திங்கட்கிழமை முதல் காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.**

இலங்கையின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் எந்தவித விசாரணையும் இன்றி தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தங்களுக்குப் பொதுமன்னிப்பளித்து விடுதலை செய்யக் கோரியே இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்

இந்தப் போராட்டம் தொடர்பாக தமிழ் அரசியல் கைதிகளின உறவினர்கள் அறிக்கையொன்றை விடுத்துள்ளனர்.

இவ் அறிக்கையின் முழுவிபரம வருமாறு,

கொழும்பு, மகசின், பூசா, அநுராதபுரம், தும்பறை, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய சிறைகளில் பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தங்கள் 23ஆம் பக்கம் பார்க்க....

### இராணுவத்தை காக்க அரசாங்கம் திட்டம்



(கொழும்பு)

போர்க்குற்றச்சாட்டுகளில் இருந்து இலங்கை இராணுவத்தை காப்பாற்றுவதே அரசாங்கத்தின் பிரதான இலக்கு என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். 23ஆம் பக்கம் பார்க்க....

### கடும் கோபத்தில் புதுடில்லி!

(புதுடில்லி)

முழங்காவில் பகுதியில் இந்திய வீடமைப்புத் திட்ட உதவியைப் பெறுவதற்கு, பெண்களிடம் பாலியல் இலஞ்சம் கோரப்படுவதாக செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகள், புதுடெல்லிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன், இதுகுறித்து இலங்கைக்கு கடும் அழுத்தங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

முழங்காவில் பகுதியில், இந்திய வீடமைப்புத் திட்ட உதவியைப் பெறும் பயனாளிகளிடம், திட்டத்தை 23ஆம் பக்கம் பார்க்க....

## வன்முறைக் கும்பலை கலைப்பதற்கு சட்டத்துக்கு இடமளிக்க வேண்டாம்

### நீதிபதி இளஞ்செழியன் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வன்முறைகளில் அல்லது வன்செயல்களில் ஈடுபடுகின்ற குழுவினரை, சம்பவ இடத்திற்கு நேரடியாகச் சென்று பொலிஸார் அல்லது படையினரின் உதவிகொண்டு கலைப்பதற்கு 24ஆம் பக்கம் பார்க்க....



## இலங்கை உயர்மட்ட குழு தென்னாபிரிக்கா பயணம்

### பொறுப்புக் கூறல் குறித்து ஆராய

(கொழும்பு)

போரின் போது இடம்பெற்ற மீறல்களுக்குப் பொறுப்புக்கூறும் பொறிமுறையின் ஒரு அங்கமான உண்மை நல்லிணக்க ஆணைக் குழுவை அமைப்பது தொடர்பாக ஆராய இலங்கை அரசின் உயர்மட்டக் குழுவொன்று அடுத்த வாரம் தென்னாபிரிக்கா செல்லவுள்ளது.

தென்னாபிரிக்காவில் நிறவெறி ஆட்சி ஒழிக்கப்பட்ட பின்னர், அமைக் 23ஆம் பக்கம் பார்க்க....

# தமிழ்க் கைதிகளின் விடுதலைக்கு கருணையுடன் உதவ வேண்டும்!

### ஜனாதிபதிக்கு வடக்கு முதல்வர் அவசர கடிதம்

(யாழ்ப்பாணம்)

சிறைகளில் நேற்று திங்கட்கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் கைதிகள் தொடர்பில் பல்வேறு பரிந்துரைகளை முன்வைத்து வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

நீண்டகாலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்க் கைதிகள் தற்போது தொடங்கியுள்ள



உண்ணாவிரதப் போராட்டம், கடந்த காலங்களைப் போல சிறை அதிகாரிகளால் வன்முறைத் தனமாக கையாளப்படக்கூடும் என்ற கவலைகள் உள்ளதாகவும் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

பல ஆண்டுகளாக வழக்குகள் தொடரப்படாமல் தடுத்துவைக்கபட்டுள்ள "இந்த துரதிர்ஷ்டவசமான மனிதர்களின்" பிரச்சினையை கருணையுடனும் பச்சாதாபத்துடனும் அணுகப்பட வேண்டும் எனறும் வடக்கு மாகாண முதலமைச்சர் கூறியுள்ளார். 24ஆம் பக்கம் பார்க்க....

## கீரிமலை கடற்படை முகாம் முற்றாக அகற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வலிவடக்கு பிரதேசத்தில் இராணுவம் ஆக்கிரமித்திருந்த இடங்களை அண்மைக்காலமாக விடுவிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஓர் அங்கமாக கீரிமலையில் அமைந்திருந்த கடற்படை முகாம் நேற்று அகற்றப்பட்டுள்ளதுடன் உரிய வீடுகளும் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கீரிமலை கேணிக்கு அண்மையாக மூன்று வீடுகளில் கடற்படையினர் நிலை கொண்டிருந்தனர்.

இதில்ஒரு வீடு ஏற்கெனவே உரியவர்களிடம் கையளிக்கப்பட்ட நிலையில் மிகுதியாகவுள்ள இரண்டு வீடுகளிலும் கடற்படையினர் நிலை கொண்டு இருந்தார்கள்.

இந் நிலையில் நேற்று திங்கட்கிழமை 23ஆம் பக்கம் பார்க்க....

### தொடர் விசாரணையில் பிள்ளையான்

(கொழும்பு)

குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையானை தடுத்து வைத்து தொடர்ந்து விசாரணை மேற்கொள்வதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2005ஆம் ஆண்டு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் வாக்குமூலம் ஒன்று பெற்றுக்கொள்வதற்காக பிள்ளையான் குற்றப். புலனாய்வு 23ஆம் பக்கம் பார்க்க....

### வெட்டுப்புள்ளிகளை மாற்றும் தீர்மானம் இல்லை

(கொழும்பு)

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை வெட்டுப் புள்ளிகளை குறைப்பதற்கு எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லை என பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யு. எம்.என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்ட ரீதியில் மாணவர்களுக்கான வெட்டுப் புள்ளி விபரங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

இந்த மாவட்ட ரீதியான வெட்டுப் புள்ளிகளில் எவ்வித மாற்றமும கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார். 23ஆம் பக்கம் பார்க்க....

### நீதிமன்ற வளாக வீதி மக்கள் பாவனைக்கு தடை

(யாழ்ப்பாணம்)

யாழ் நீதிமன்ற வளாகத்துக்கு முன்னேயுள்ள வீதியினை பொது மக்களின் பாவனைக்கோ அல்லது பொது போக்குவரத்துக்கோ பயன்படுத்த முடியாது என யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்

யாழ.நீதிமன்ற கட்டடத் தொகுதி மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பான பிணை 23ஆம் பக்கம் பார்க்க....

## ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் யாழ்.மறைமாவட்ட ஆயராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மறைமாவட்ட ஆயராக அருட்தந்தை ஜஸ்ரின் பி.ஞானப்பிரகாசம் பாப்பாண்டவரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரின் நியமனம் குறித்த அறிவிப்பு இன்று பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்.ஆயர் இல்லத்தில் வைத்து யாழ்.ஆயர் மேதகு தோமஸ் 23ஆம் பக்கம் பார்க்க....



# டிலான் நஞ்சுதான் ஆனால் விஷமில்லை!

கடந்த பொதுத் தேர்தல் நேரத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் விஷ போத்தல்களை எடுத்து வந்தமைக்கான காரணத்தை ராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா விளக்கியுள்ளார்.

பதுளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நான் தேர்தல் காலத்தில் கட்சியின் மீது ஊடகங்களின் கவனத்தை திருப்புவதற்காக விஷத்தை எடுத்துச் சென்றேன். டிலான் நஞ்சு ஆனால் விஷமில்லை.

நாங்கள் மகிந்தவின் காலத்தில் கட்சி என்ற வகையில் முன்னோக்கி வந்தோம்.

தற்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமைத்துவத்தின் கீழ் கட்சியை கட்டியெழுப்ப வேண்டும். அவர் எமது கட்சியின் தலைவர்.

அவருடன் பணியாற்ற நாம் பழகிக் கொள்ள வேண்டும் என ராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா குறிப்பிட்டுள்ளார். (எ-12)

# பதில் பிரதம நீதியரசர் சத்தியப்பிரமாணம்



சிரேஷ்ட உச்ச நீதிமன்ற நீதிபதி ஈவா வணசுந்தர பதில் பிரதம நீதியரசராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில நேற்று சத்தியப்பிரமாணம் செய்தார்.

தற்போது வெளிநாடு சென்றுள்ள பிரதம நீதியரசர் கே.சிறிபவன் நாடு திரும்பும் வரையில் நீதிபதி வணசுந்தர பதில் பிரதம நீதிபதியாக கடமை புரிவார்.

இவர் 2012-ல் இலங்கை உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக நியமிக்கப்பட முன்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தில் சட்டமா அதிபராகவும் கடமை புரிந்துள்ளார்.

இவர் முதலாவது பெண் சிரேஷ்ட அரச சட்டத்தரணியாகவும் இலங்கையின் முதலாவது பெண் சட்டமா அதிபராகவும் முதலாவது மேலதிக பெண் சொலிசிட்டர் ஜெனரலாகவும கடமை புரிந்துள்ளார். இவர் சட்டமா அதிபரா நியமிக்கப்பட முன்னர் 16 தடவைகள் பதில் சட்டமா அதிபராக கடமை புரிந்துள்ளார்.

இவர் வெளிநாடுகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பல மாநாடுகளில் கலந்து கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (எ-11)

## நாடாளுமன்றில் பாம்பு கண்டுபிடிப்பு

நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் இருந்து விரியன் பாம்பு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமையன்று இது கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற நூலகத்துக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்தும் பொது மின்தூக்கிக்கும் இடையிலுள்ள பூச்சாடி ஒன்றுக்குள் இருந்து இது கண்டுபிடிக்கப்பட்டது.

அதிரடிப்படையினர் வழமையாக மேற்கொள்ளும் சோதனை நடவடிக்கையின் போது இந்த பாம்பு கண்டுபிடிக்கப்பட்டது.

ஏற்கெனவே இரண்டு தடவைகள் நாடாளுமன்றத்துக்குள் பாம்புகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதில்ஒருதடவையில் மூன்றாம் மாடியில் உள்ள எதிர்க் கட்சி தலைவர் அலுவலகத்தில் இருந்து பாம்பு ஒன்று மீட்கப்பட்டது. (எ-11)


# மரண அறிவித்தல்

## பார்வதிப்பிள்ளை கதிரித்தம்பி

வரணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பார்வதிப்பிள்ளை கதிரித்தம்பி நேற்று காலமாகி கொடிக்கட்டு இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டார்.

அன்னார் ஓய்வுபெற்ற ஆசிரியர் காலஞ்சென்ற கதிரித்தம்பியின் மனைவியும் காலஞ்சென்ற கற்பாத்தைப்பிள்ளை மற்றும் க.வாரித்தம்பி (ஓய்வுபெற்ற நீதிமன்ற பதிவாளர்) ஆகியோரின் சகோதரியும் உமா மகேஸ்வரி, மனோன்மணி ஆகியோரின் தாயாரும், சி.துரைராசா (முன்னாள் சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர்), வீ.சிவராசசிங்கம் (ஓய்வுபெற்ற நீதிமன்ற பதிவாளர்) ஆகியோரின் மாமியும், து.திருக்குமார், து.செந்தில்குமரன், Dr.சியாமளா தாமோதரன், து.இளங்குமரன் (விரிவுரையாளர், கல்வியியற் கல்லூரி-யாழ்ப்பாணம்), து.குன்றக்குமரன், து.இராசக்குமரன், சி.காண்டீபன் (பொறியியலாளர்), சி.சேயோன்(பொறியியலாளர்), சி.முகுந்தன் (பொறியியலாளர்), சி.கஜேந்திரன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-2446)

தகவல்:
சி.துரைராசா
(முன்னாள் சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர்)



# நன்றிகள் பல



J/215 அளவெட்டி வடக்கு கிராம அலுவலர் பிரிவின் கிராமச் செயலகம் 11.10.2015 அன்று திறப்பு விழா நடைபெற்ற வேளை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ் அரசாங்க அதிபர் திரு.நா.வேதநாயகன் அவர்கள், சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட திரு.க. ஸ்ரீமோகனன் (தெல்லிப்பழை, பிரதேச செயலர்) மற்றும் திரு.சு.முரளிதரன் (மேலதிக அரசாங்க அதிபர், காணி மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்), திரு.சோ.சுகிர்தன் (முன்னாள் தவிசாளர், வலிகாமம் வடக்கு), திரு.ப.இராஜகோபாலன் (தலைவர், அளவெட்டி அபிவிருத்தி மன்றம்), திரு.சுந்தரலிங்கம் அன்றூ (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், வலிகாமம் வடக்கு) ஆகியோருக்கும் பிரதேச செயலக அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் ஆசியுரை, வாழ்த்துரை வழங்கியோருக்கும் இக் கட்டிடத்துக்காக பெறுமதியான 4 பரப்புக் காணியை நன்கொடை வழங்கிய திரு.செல்லத்துரை சிவபாலன் அவர்கட்கும், இக் கட்டிடம் அழகுற அமைய அனுசரணையாளராக இருந்து செயற்பட்டும் அன்றைய நிகழ்வையும் நடாத்திய அளவெட்டி அபிவிருத்தி மன்ற நிர்வாகத்தினருக்கும் பல வழிகளிலும் உதவிகள் பல புரிந்தவர்களுக்கும் மற்றும் பெரும் திரளாக வந்து சிறப்பித்த பொதுமக்களுக்கும் எம் இனிய நன்றிகள் உரித்தாகட்டும். (C-2443)

J/215 அளவெட்டி, வடக்கு.

கிராம அலுவலர், வாழ்வின் எழுச்சி அலுவலர், அபிவிருத்தி உத்தியோகத்தர், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் அலோசியஸ் மரியடிசோன்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்ததுடன், எமது பாடசாலைக்கும் பெருமை சேர்த்த இவரை இன்னும் பல பட்டங்களையும், கலைகளையும் கற்றுயர வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

(C-2442)

வாழ்த்துவோர் :
அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பாடசாலைச் சமூகம்
மு/சுதந்திரபுரம் அ.த.க. பாடசாலை, உடையார்கட்டு.



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலய
மாணவன்
**செல்வன் ஸ்ரீகிருஷ்ணகாந்தன் புதுமிகன்**
தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில்
**159 புள்ளிகள்** பெற்று சித்தியடைந்து எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.
மாணவனை நெறிப்படுத்திய ஆசிரியர்
திரு இ.இளங்கோ அவர்களையும் ஸ்ரீ.புதுமிகன் அவர்களையும் நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்ற
*க.சந்தோஷ்-146*
*வி.அஸ்வினி-127*
*வி.வித்யா- 124*
*தி. தமிழ்விழி-108*
ஆகியோரையும் மென்மேலும் கல்வியில் சிறந்த பல பட்டங்கள் பெற வேண்டுமென மனமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:-அதிபர், ஆசிரியர்கள்
யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்
வாதரவத்தை- புத்தூர்

# இவ்வருடத்தில் இதுவரை 4500காசநோயாளர்கள்

(கொழும்பு)

இந்த வருடத்தில் இதுவரை யான காலப்பகுதியில் 4,500 காச நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அநேகமான நோயாளர்கள் மேல்மாகாணத்தின் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே பதிவாகியுள்ளதாக காச நோய் மற்றும் ஒழிப்பு திட்டத்தின் உதவிப் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

சுவாச நோய்களை பரிசோதனை செய்வதற்கு நாடு முழுவதும் சுமார் 160 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

குறித்த நிலையங்களுக்கு சென்று மக்களால் பரிசோதனைகளை செய்துகொள்ள முடியும் என காச நோய் மற்றும் ஒழிப்பு திட்டத்தின் உதவி பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையங்களுக்கு செல்ல முடியாத பட்சத்தில் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு சென்று பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## மாத்தளையில் 32 மர்மக்கொலைகள்

மாத்தளை மாவட்டத்தில் 1994 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரை 32 பேர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிகார தெரிவித்துள்ளார்.

இது குறித்து பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்ககோனுக்கு அறிவித்துள்ளார்.

அரசியல் ரீதியான பழிவாங் கும் நோக்கில் 1994 ஆம் ஆண்டு முதல் 2000ஆம் ஆண்டு வரை இந்த கொலைகள் நடந்துள்ளதாக தகவல்கள் உள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

கொலை செய்யப்பட்டவர்களில் அதிகளவானோர் ஐக்கிய தேசியக் கட்சியினர் எனவும் இவ்வாறு கொலை செய்யப்பட்ட கட்சியினருக்கு நியாயம் கிடைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7-10)


USAID

"Civil Society Initiatives to Promote the Rule of Law in Sri Lanka"

உரிய தருணத்தில் இலவச சட்ட ஆலோசனை, சட்ட சேவை மற்றும் வழிகாட்டல்கள்

வாரத்தில் 5 நாட்கள் (திங்கள் - வெள்ளி) காலை 9.00 - மாலை 5.00 மணிவரை

எம்மிடம் கீழ்வரும் விடயம் சம்பந்தமாக நீங்கள் உதவி களைப் பெற்றுக்கொள்ள முடியும்

சிறுவர் துஷ்பிரயோகம்
பாலியல் வன்முறைகள்
குடும்ப வன்முறைகள்
ஏனைய நெருக்கீட்டு நிலைமைகள்

இலவச சட்ட சேவை பிரிவு
மகளிர் அபிவிருத்தி நிலையம்,
இல.07, இரட்னம் லேன்,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.:- 021 222 4398, 021 321 5144

மேலதிக இலவச சட்ட சேவை பிரிவுகள் - வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களில்.


# விடுதலைப்புலிகள் மீது அச்சம் குறையவில்லை!

## இலங்கை அரசின் நடவடிக்கைகள் குறித்து பழ.நெடுமாறன் கருத்து

(சென்னை)

**தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான அச்சத்தால், கூடுதலாக ஒரு இலட்சம் வீரர்களை தேர்ந்தெடுத்துள்ள இலங்கை அரசு, இந்தியா உதவியுடன் அவர்களுக்கு பயிற்சி அளிக்கத் திட்டமிட்டுள்ளதாக தமிழர் தேசிய முன்னணி தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.**



திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற முப்பெரும் விழா நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக வந்த அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை குறித்து நீதிவிசாரணை நடத்த வேண்டும் என அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள், கடந்த 3 ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வந்தன.

இதனிடையே, சீனாவின் ஆதரவாளரான மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியை இழந்து, அமெரிக்க ஆதரவாளரான மைத்திரி பொறுப்பேற்றதால், ஐநா சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் நீர்த்து போவதற்கு வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் மீது இலங்கை அரசுக்கு அச்சம் குறையவில்லை.

அதனால் தான், 3 இலட்சம் இராணுவ வீரர்கள் இருக்கும் நிலையிலும், கூடுதலாக ஒரு இலட்சம் பேரை தேர்வு செய்து, இந்திய இராணுவத்தின் மூலம் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்துள்ளனர். (இ-7-10)

## விளக்க கருத்தரங்கு

யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உணவுப்பொருட்கள் உட்பட ஏனைய பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய விரும்புகின்றவர்களுக்கு அதற்குரிய வாய்ப்புக்கள் மற்றும் சந்தைப்படுத்தும் உத்திகள் பற்றிய தெளிவூட்டல் விளக்க கருத்தரங் கொன்றை யாழ்.வணிகர் கழகம் நாளை புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அதன் பணிமனையில் நடத்தவுள்ளது. இந் நிகழ்வில் ஏற்றுமதி தொடர்பான அரச அதிகாரி மற்றும் மத்திய வங்கி உட்பட ஏனைய வங்கி அதிகாரிகளும் தெளிவூட்டல்களை வழங்கவுள்ளனர். எனவே உற்பத்தியாளர்களும், ஆர்வமுள்ளவர்களும் பங்குபற்றி பயன்பெறுமாறு வணிகர் கழகச் செயலாளர் இ.ஜனக்குமார் அறிவித்துள்ளார். (இ-5)

## சீனாவுடன் அதியுயர் உறவை விரும்பும் இலங்கை

சீனாவுடன் அதியுயர் ரீதியான உறவை விரும்புவதாக இலங்கை தெரிவித்துள்ளது.

வெளியுறவுத்துறை அமைச்சின் செய்திக்குறிப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் சீனாவின் விசேட பிரதிநிதி லியூ சென்மினுக்கும் இடையில் இலங்கையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின்பேரிலேயே சீனாவின் விசேட பிரதிநிதி இலங்கை வந்திருந்தார். பிரதிநிதி இலங்கையின் வெளியுறவு அமைச்சருடன் இரு நாட்டு உறவுகள் குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளார். (இ-7-10)

# கொட்டதெனியாவ மாணவன் மனிதவுரிமை ஆணைக்குழுவில்

கொட்டதெனியாவ சிறுமி சேயா கொலை தொடர்பில் சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டதாக, இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் மேலதிக விசாரணை நேற்று மனித உரிமை ஆணைக்குழுவில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதில் குறித்த மாணவன் மற்றும் மற்றுமொரு சந்தேகநபராக கைது செய்யப்பட்ட 33 வயதான ஒரு பிள்ளையின் தந்தையும் ஆணைக்குழுவில் ஆஜராகியிருந்தனர்.

இம்முறைப்பாடு நேற்று இலங்கை மனிதவுரிமை ஆணைக் குழுவின் தலைவர், முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி பிரியந்த பெர்னாண்டோ முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இம்முறைப்பாட்டின் பிரதி வாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்த கொட்டதெனியாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, அதன் உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு பதிலாக பொலிஸ் நீதி பிரிவின் உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் கால்லகே ஆகியோர் ஆணைக்குழுவில் ஆஜரானார்.

இந்நிலையில் மனித உரிமை ஆணைக்குழு முன்னிலையில், சேயாவின் கொலையாளிக்கு உரிய தண்டனை வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## ஊடகங்களுக்கு தடைவிதிப்பு


ஐ.நா.மனிதவுரிமைகள் ஆணைக் குழுவிற்கு அமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட பிரேரணை தொடர்பில் பேசுவதற்கு ஊடகங்களுக்கு தணிக்கை செய்யப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்காவின் ஜெனிவா பிரேரணை குறித்து பேசுவதற்கு ஊடகங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதனூடாக ஊடகங்களுக்கு தணிக்கை செய்யப்பட்டுள்ளது. அரசாங்கம் செய்வது சரியான ஒன்றாக இருக்குமாயின் எதிரான கருத்துக்களுக்கு தடையேற்படுத்தும் அவசியம் இருக்காது. அத்துடன் பயங்கரவாத தடுப்புச் சட்டம் இரத்துச் செய்யப்பட்டால் அச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள தீவிரவாதிகள் விடுதலையாகுவதற்கு வாய்ப்புள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# ஞானசார தேரரை கைதுசெய்யுங்கள்

### கொழும்பு நீதிபதி உத்தரவு



வழக்கு விசாரணை ஒன்றுக்காக ஆஜராகத் தவறியமை காரணமாக, பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்ட மூவரை கைது செய்யுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

புனித குரானுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தியமை மற்றும் ஜாதிக பலசேனா அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பில் அத்துமீறி நுழைந்து சர்ச்சையை ஏற்படுத்தியமை உள்ளிட்ட விடயங்களில் இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

குறித்த விடயங்கள் தொடர்பில் தொடரப்பட்டிருந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. இதன் போது குறித்த மூவரும் ஆஜராகத் தவறியமையால் இவர்களுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த வழக்கு விசாரணைகள் நவம்பர் 9ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# தோல்வி அடைந்த ஆட்டத்தைதான் மக்கள் நினைவில் வைத்திருப்பர்

## விரக்தியில் தோனி

இந்திய அணியின் தோல்விக்கு தான் பொறுப்பேற்றுக் கொள்வதாக அணித்தலைவர் தோனி தெரிவித்துள்ளார்.

இந்திய- தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையேயான முதல் ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் கான்பூரில் நடந்தது.

முதலில் விளையாடிய தென்னாபிரிக்கா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 303 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் விளையாடிய இந்திய அணியால் 50 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 298 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. இதனால் தென்னாபிரிக்கா 5 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

கடைசி ஓவரில் இந்திய அணியின் வெற்றிக்கு 11 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், தோனி களத்தில் இருந்தார். அவர் சிக்சரும், பவுண்டரியுமாய் ஆட்டத்தை முடிப்பார் என்று ரசிகர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் 4-வது பந்தில் அவர் ஆட்டம் இழந்தார்.

இந்திய அணியின் வெற்றிக்கு நல்ல வாய்ப்பு இருந்தும் கடைசி நேர சொதப்பலில் இந்திய அணி தோல்வியை தழுவியது ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

இந்த கடைசி நேர நெருக்கடி பற்றி இந்திய அணித்தலைவர் தோனி கூறுகையில், "தென்னாபிரிக்காவை 260 முதல் 270 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தி இருக்க வேண்டும். ஆனால் பந்து வீச்சு கடைசி நேரத்தில் சரியாக அமையவில்லை.

மேலும், நெருக்கடியான நிலையில் அதிக போட்டிகளில் வெற்றி தேடிக் கொடுத்திருக்கிறோம். இருப்பினும் தோல்வி அடைந்த ஆட்டத்தை தான் மக்கள் எப்போதும் நினைவில் வைத்திருப்பார்கள்.

பின் வரிசையில் களம் இறங்கும் போது பொறுப்பை ஏற்றுக் கொள்ள தயாராக இருக்க வேண்டும். இறுதி நேர ஆட்டம் சூதாட்டம் போன்றது.



சில நேரங்களில் கை கொடுக்கும். சில சமயம் கை கொடுக்காது. இருப்பினும் அணியின் இந்த பொறுப்பை நான் ஏற்று இருக்கிறேன்" என்று கூறியுள்ளார். (க)

## இம்ரான் தாகிரின் ஓவர் ஆட்டத்தை மாற்றியது





இம்ரான் தாகிரின் ஓவர்தான் தென்னாபிரிக்காவுக்கு திருப்புமுனையாக அமைந்தது என்று அணித்தலைவர் டி வில்லியர்ஸ் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் கான்பூரில் நடந்த இந்தியாவுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்கா 5 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் அதிக திருப்பங்கள் ஏற்பட்டன. இம்ரான் தாகிர் சிறப்பாக பந்து வீசினார். இவரின் ஓவர்கள் தான் திருப்பு முனையாக அமைந்தது.

கடைசி ஓவரை சிறப்பாக வீசிய ரபாடாவுக்கு நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது. அடுத்து வரும் போட்டிகளில் கவனம் செலுத்தி வெற்றி பெற தீவிரமாக போராடுவோம் என்று கூறியுள்ளார். (க)

## தோனி, ஹோலிக்கிடையில் பனிப்போர் அம்பலமானது தோல்விக்கான காரணம்



இந்திய அணித்தேர்வில் ஏற்பட்ட குழப்பமே முதல் ஒருநாள் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு காரணமாக அமைந்து விட்டது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இருபது -20 தொடரை இந்திய அணி 2-0 என்ற கணக்கில் தோற்றது. அப்போது இந்திய அணி தேர்வின் மீது விமர்சனங்கள் எழுந்தது.

மேலும், சிறந்த வீரரான ரஹானேவின் நீக்கம் தொடர்பாகவும் கேள்வி எழுந்தது. இது பற்றி முன்னாள் அணித்தலைவர் அசாருதீனும் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்நிலையில் முதல் ஒருநாள் போட்டியிலும் ஆடும் லெவினில் ரஹானே களமிறங்குவது கடினம் என்று தோனி கூறியிருந்தார். ஆனால் முதல் ஒருநாள் போட்டியில் ராயுடு, அக்சருக்கு பதிலாக ரஹானே, பின்னி இடம் பெற்றிருந்தனர்.

இதற்கு காரணம், முன்னதாக அணி ஆலோசனையில் ஈடுபட்ட போது, அணியின் இயக்குனர் ரவி சாஸ்திரி, இலங்கை தொடரில் சிறப்பாக செயல்பட்ட ரஹானேவை அணியில் சேர்த்துக் கொள்ள தோனிக்கு பரிந்துரை செய்துள்ளார்.

ஆனால் இதற்கு அவர் மறுப்பு தெரிவித்த நிலையில், ரவி சாஸ்திரியின் உத்தரவால் ஆடும் லெவினில் அவரை சேர்த்துக் கொள்வதாக உறுதியளித்துள்ளார்.

ஆனால் அதற்கு பதிலாக ஹோலி 4வது இடத்தில் களமிறங்க வேண்டும் என்று தோனி கூறியிருக்கிறார்.

ஆனால் தோனியின் முடிவுக்கு ஹோலி மறுப்பு தெரிவித்திருக்கிறார். இதனாலே 4-வது இடத்தில் களமிறங்கிய ஹோலியால் 11 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. இதுவும் இந்திய அணியின் தோல்விக்கு காரணமாக மாறிவிட்டது.

மேலும், ஹோலி ஆட்டமிழந்து வரும் போது ரசிகர்கள் அவரை கிண்டல் செய்தது அவருக்கு மிகுந்த எரிச்சலை ஏற்படுத்தியது.

அதே சமயம் 3வது இடத்தில் ஆடிய ரஹானே 60 ஓட்டங்கள் எடுத்தார். அவருக்கு தோனி பாராட்டும் தெரிவித்திருந்தார்.

ஒரு வீரராக துடுப்பாட்டத்தில் தடுமாறும் தோனி, அணித்தேர்வில் தலைவராகவும் தனது அதிகாரத்தை இழந்து வருவதையே இது காட்டுகிறது. (க)

## பஷன் ஷோவில் ரசிகர்களை மயக்கிய மரியா ஷரபோவா



கவர்ந்திழுக்கும் அழகால் ரசிகர்களின் இதயங்களில் இடம் பிடித்தவர் பிரபல டென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா.

ரஷ்யாவின் அழகுப் புயலாக வலம் வரும் மரியா, கடந்த 2005ம் ஆண்டு உலக தரவரிசையில் 'நம்பர்-1' இடத்தை பிடித்தார். இதுவரை 5 கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றுள்ள இவர், தற்போது 3வது இடத்தில் உள்ளார்.

தற்போது ஓய்வில் இருக்கும் மரியா, பாரிசில் நடந்த 'பஷன் ஷோவில்' பங்கேற்றார். அந்த நிகழ்ச்சியில் கறுப்பு, வெள்ளை நிறத்தில் அழகிய 'கவுன்' அணிந்து பங்கேற்றார்.

தனது சூப்பரான 'ஹேர் ஸ்டைல்', பளிச் சிரிப்பால் ரசிகர்களை மயக்கினார். இவர் அணிந்த உடைக்கும் மவுசு அதிகரிக்க மகிழ்ச்சியில் திளைத்தாராம்.

இது பற்றி அவர் கூறுகையில், "நான் வித விதமான ஆடைகள் வைத்திருக்கிறேன். ஆடை விடயத்தில் நல்லது, கெட்டது பார்க்க மாட்டேன். ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான ரசனை இருக்கும்.

மேலும், பிரான்ஸில் நடந்த பஷன் ஷோவில் பங்கேற்றது வித்தியாசமான அனுபவத்தை கொடுத்தது" என்று தெரிவித்துள்ளார். (க)

## காயத்தால் அஸ்வின் விலகல் களமிறங்குகிறார் ஹர்பஜன் சிங்

இந்திய- தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையேயான முதல் ஒரு நாள் போட்டியில் இந்திய சுழற்பந்து வீச்சாளர் அஸ்வினுக்கு காயம் ஏற்பட்டதால் அவருக்கு பதிலாக ஹர்பஜன் சிங் சேர்க்கப்பட்டுள்ளார்.

நடைபெற்ற ஒரு நாள் போட்டியில், தென்னாபிரிக்க அணி வீரர் டி வில்லியர்ஸ் அடித்த பந்தை அஸ்வின் விழுந்து தடுக்கையில், அவரது இடது பக்க இடுப்பில் காயம் ஏற்பட்டது.

வலி அதிகரித்ததால் போட்டியிலிருந்து வெளியேறினார், அவருக்கு காயம் ஏற்பட்டுள்ளதால் இந்திய அணியில் ஹர்பஜன் சிங் சேர்க்கப்பட்டுள்ளார்.

காயம் குறித்த முழு விவரம் கிடைத்தவுடன், அந்த காயத்தில் இருந்து அஸ்வின் மண்டு வர எவ்வளவு நாட்கள் ஆகும் என்பதை இந்திய கிரிக்கெட் அணியின் மருத்துவக்




குழு முடிவு செய்யும் என்று பி.சி.சி.ஐ. கூறியுள்ளது. (க)

# அரசியல் கைதிகள் என்று சிறைகளில் எவருமில்லை



## நீதி அமைச்சர் கூறுகிறார்

(கொழும்பு) –

**இலங்கையில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை. குற்றம் செய்தவர்களே சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்று நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார.**

தமிழ் தேசிய கூட்டமைப்பு உட்பட தமிழ் கட்சிகள் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டு மன்றும், அரசாங்கத்தை வலியுறுத்தி வருவதுடன் சிறையிலுள்ள தமிழ் கைதிகள் நேற்று உண்ணா விரதத்தை ஆரம்பித்துள்ள நிலையிலேயே அமைச்சர் விஜேதாஸ ராஜபகஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறையிலுள்ள தமிழ் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பில் நீதியமைச்சுக்கு தற்போது எந்த வகிபாகமும் கிடையாது. இந்த பொறுப்பு தற்போது சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு சட்டம்,ஒழுங்கு தொடர்பான அமைச்சிடமே உள்ளது.

இவர்களை விடுதலை செய்வது தொடர்பாக அரசாங்க மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அரச மட்டத்திலேயே இதற்கு தீர்வு காணப்பட வேண்டும். நீதிமன்றம் இவ்விடயத்தில் தலையிட முடியாது.

அதேவேளை தடுப்புக் காவலிலும், சிறைச்சாலைகளிலும் அரசியல் கைதிகள் என்று எவரும் கிடையாது. இதற்கு தமிழ் கைதிகளும் விதிவிலக்கல்ல. எனவே தமிழ் அரசியல் கைதிகள் இங்கு இல்லை.

கொலை, கொள்ளைகள் உள்ளிட்ட பலவேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டோரே சிறையில் கைதிகளாக உள்ளனர். எனவே இவ்விடயம் சட்ட ரீதியாகவே அணுகப்பட வேண்டும்.

வாசுதேவ நாணயக்கார எம்.பி. தமிழ் கைதிகளை விடுதலை செய்யுமாறு ஊடகங்களுக்கு கூறுகின்றார். ஆனால் இதே வாசு, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் புலிகளுக்கு அரசாங்கம் உதவுவதாக பாராளுமன்றத்திலும் வெளியிலும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து இனவாதத்தையே பரப்புகின்றனர்.

ஐ.நா. அறிக்கையிலும் இவ்விடயம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே அரச மட்டத்தில் இது ஆராயப்படும்.

ஐ.நா. அறிக்கை, ஜெனிவா பிரேரணை, உள்ளக விசாரணை தொடர்பாக அரசாங்க உயர் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றது. இது வரையில் உள்ளக பொறிமுறை தொடர்பில் முடிவுகள் எடுக்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)


**அமெரிக்க Green Card Lottery -2017**

அமெரிக்க **Green card Lottery**
விண்ணப்பத்தில் 13 வருட அனுபவமிக்க எமது நிறுவனத்தில் 2017 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களை ரூபா 15/- முத்திரையொட்டப்பட்டு சுய முகவரியிட்ட தபாலுறையை
**Bristol Cyber cafe.**
**No. 8/3/4, Bristol Street,**
**Colombo -01** எனும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.
(எமது நிறுவனத்திற்கு கிளை அலுவலகமோ அல்லது பிரதிநிதிகளோ இலங்கையின் எப்பாகத்திலும் இல்லை என்பதை அறியத் தருகின்றோம்.)
**Tel : 0112393919, 0774276579**
(C-2243)
W/A 44843 www.bristolcc.biz

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
இலங்கையில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. INTERNATIONAL CERTIFICATES பெறலாம். வெளிநாடொன்றில் இருக்கும்போது பிரெஞ், பேச தேவையான ஆற்றலை வழங்குகின்றோம்.
விரைவில் ஆரம்பம். உடன் பதிவை உறுதிப்படுத்துக.
**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

**மணமகள் தேவை**

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா:30
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L/வங்கியாளர்
தொ.இ: B/5082

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 49செவ் 7 ல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:பட்டதாரி/சொந்த தொழில்
தொ.இ: B/5083

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 22
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:O/L/சுவிஸ் PR
தொ.இ: B/5087

பிறப்பு:. 1978 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 18 செவ் 7 ல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்
தொ.இ: B/5088

**மணமகன் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம
கி.பா: 52சூரிசெவ் 8 ல்
உயரம்: 154cm
தகைமை/தொழில்:BA/கணக்காளர்
தொ.இ: G/2408

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 11 3/4 செவ் 2 ல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:O/L/சொந்ததொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/2412

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 48செவ் 8 ல்
உயரம்: 156cm
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: G/2419

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம் திருவோணம்
கி.பா: 18செவ் 4 ல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: G/2422

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-0217201005,0212215434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## ராசி பலன்

13.10.2015
(புரட்டாதி 26, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
பிரதமை முழுவதும்
சித்திரை பின்னிரவு 4.59 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
நவராத்திரி விரதாரம்பம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் பூரட்டாதி பகல் 3.56 இற்கு துலா-சந் | | |
| | | | குரு சுக் |
| | சனி | | சூரி, சந், ராகு, புத |

**மீனம்:** சிறப்பாக பணிகளைச் செய்து பாராட்டுப் பெற முயற்சிப்பீர்கள், நடக்கவிருந்த காரியம் மாலை நேரம் தடைப்படலாம், வழிபாட்டில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

**மேடம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வழிபாட்டால் சந்தோசம் காண வேண்டிய நாள்.

**இடபம்:** எதிர்கால நலன்கருதி முக்கிய திட்டங்கள் தீட்டுவீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மிதுனம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சுப செலவுகள் கூடும்.

**கும்பம்:** வரவும் செலவும் சமமாகும் நாள், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தடைப்பட்ட காரியங்கள் மாலை நேரம் கைகூடும்.

**கடகம்:** தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், தடைப்பட்ட காரியம் தானாகவே நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள்.

**மகரம்:** செய்யும் காரியங்களில் உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், நட்பு வட்டாரம் விரிவடையும், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், பயணங்கள் கைகூடும்.

**சிம்மம்:** சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும், உடன்பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும், தொழிலில் மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும்.

**தனுசு:** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், குடும்பத்தினர் உங்களைப் புரிந்து கொண்டு நடப்பர், பொது நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்:** உறவினர் உதவி செய்ய முன் வருவர், புதிய பொறுப்புக்களும் சுமைகளும் ஏற்படலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**கன்னி:** உடல் நலனில் கவனம் தேவை, குடும்பத்தினர் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, வரவுக்கேற்ப செலவுகள் உருவாகும், கௌரவமான நாள்.

# ஆன்மீக நல்லொழுக்க திருநாட்களாக நவராத்திரியை பிரகடனப்படுத்துங்கள்

## வீணாகான குருபீடம் மகஜர் ஊடாக வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**நவராத்திரி ஒன்பது தினங்களையும் நல்லொழுக்க திருநாட்களாக பிரகடனப்படுத்துமாறு கோரி வீணாகான குருபீடம் யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனிடம் மகஜர் ஒன்றை நேற்றைய தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் வைத்து கையளித்துள்ளது.**

கையளிக்கப்பட்ட அந்த மகஜரில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்மக்களிடம் ஒழுக்கம்- கட்டுப்பாடு- கல்வி - சமயப் பற்று முதலான வாழ்வியல் முறைகள் நன்கு இருந்தன. கடந்த கால யுத்தத்தி




னால் அதனைப் பெரும்பாலும் இழந்துவிட்ட நிலையில் தற்போது நாம் இருக்கின்றோம். யுத்தத்தின் வலியினால் துடித்த எம்மவருக்கு வாழ்வியல் பிறழ்வுகள் துன்பத்தின் வலியை இரட்டிப்பாக்கிவிட்டது. யுத்தத்தின் பயத்தினால் புலம்பெயர்வுகளை சந்தித்தோம். ஆனால் பண்பாட்டுப் பிறழ்வுக்கு அது தீர்வாக அமையாது. அதற்கு நாம் எம்மை வல்லமையுடையவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

அவ்வாறு இல்லையாயின் ஒரு தலைமுறையினரை நாம் இழக்க நேரிடும்.அவர்களை எம் பிள்ளைகள், எமது வாரிசுகள் என அடையாளப்படுத்த வெட்கப்படவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுவோம். அது மாத்திரமல்லாது அவர்களது வாழ்வை சீர் குலைத்த பெரும் பாவம் எம்மையே வந்து சேர்வதுடன் தமிழர் தம் வரலாற்றில் நாம் துரோகம் இழைத்தவர்களாகக்கருதப்படுவோம்.

ஆகையால் எமது குழந்தைகளையும் மாணவர்களையும் இளையவர்களையும் நல்வழிப்படுத்துவதும் பாதுகாப்பதும் எமது கடமையாகும்.

கல்விச்சாலைகள், பல்கலைக் கழகங்கள், குடிசைகள், மெத்தை மாடிகள், அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள், கோயில்கள் என ஒருமுக அனுஷ்டிக்கும் புனிதமானதும் பக்திபூர்வமானதும் இளையவர்களுக்குச் சிறப்பானதுமான நவராத்திரி விரத நன்நாட்களை அதாவது 13.10.2015 முதல் 21.10.2015 வரையிலான நவராத்திரி 9 தினங்களையும் எமது இனத்தின் இளையவர்களுக்கான ஆன்மீக நல்லொழுக்க திருநாட்களாக பிரகடனப்படுத்தி தொண்டாற்ற அனைவரையும் ஒன்றுசேர அழைக்கின்றோம்.

கல்வியின் ஒரு பகுதி நல்லொழுக்கமும் ஆன்மீகமும் ஆகும். எனவே இவ்விரத நன்னாளிலே இளையவர்களை நல்வழிப்படுத்தும் முகமாக அனைத்துத் தரப்பினரும் கருத்துரைகள், சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள், கவிதைகள், இசை நிகழ்வுகள் முதலான அனைத்து நிகழ்வுகளிலும் நல்லொழுக்கம், ஆன்மீக வாழ்வு என்பவற்றினை இணைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அமைத்துக்கொள்வோம்.

மேலும் மாணவர்களுக்கு சமூக சூழலில் இருக்கக்கூடிய சிக்கல்களையும் அதில் இருந்து பாதுகாக்கும் வழிமுறைகளையும் போதிப்பதோடு ஆலயங்களில் கட்டாயமாக மேற்படி கருத்துக்களை போதனை செய்யுமாறும் வேண்டுகின்றோம். சமூகத்தில் இருக்கும் ஒவ்வொரு அமைப்புக்களும் இது எமது பிரச்சினை என எண்ணி தமது சக்திக்கு உட்பட்ட விதத்தில் துண்டுப்பிரசுரம், பதாகைகள், விழிப்புணர்வு ஊர்வலங்கள், கண்காட்சிகள், நாடகங் கள் மூலமாக விழிப்புணர்வை ஏற் படுத்தி எமது சந்ததியினரை காப்பாற்ற இறைவன் பெயரால் அழைப்பு விடுக்கின்றோம் என அந்த மகஜரில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-9)

## யாழில் 12 நாட்களில் மட்டும் 41 டெங்கு நோயாளர்கள்!

(யாழ்ப்பாணம்)

கடந்த 12 நாட்களில் 41பேர் டெங்கு காய்ச்சல் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்திய சாலை புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ் எண்ணிக்கையானது கடந்த மாதத்திலும் பார்க்க இரட்டிப்புடையதாக காணப்படுவதாகவும் அப்புள்ளிவிபரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதத்தில் டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட 34பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் இம்மாதத்தில் நேற்று வரை டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு 41பேர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்திடீர் அதிகரிப்பு தற்போது கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழை காரணமாகவிருக்கலாம் என கருதப்படுகின்றது.

இம்மாதத்தில் நேற்று வரை அனுமதிக்கப்பட்ட 41டெங்கு நோயாளர்களில் 20பேர் எச்.டி.யூ சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுமுள்ளனர்.

தற்போது மழைகாலம் ஆரம்பித்திருப்பதனால் டெங்கு நுளம்பின் பெருக்கம் அதிகரித்து காணப்படுவதற்கான வாய்ப்புள்ளது.

இவ் அதிகரிப்பானது நோயாளர்கள் எண்ணிக்கையிலும் பாரிய அளவு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான சாத்தியங்கள் உள்ளன.

ஆகையினால் காய்ச்சல் ஏற்பட்டதும் உடனடியாக அரச வைத்தியசாலையொன்றை நாடி உரிய சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டுமென யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸ்ரீ பவானந்தராஜா அறிவுறுத்தியுள்ளார். (இ-4)

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

தேவரையாளி கண்ணகை அம்பாள் தேவஸ்தானத்தில் நவராத்திரிவிழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 22ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தினமும் நவராத்திரி பூஜை பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது.

22ஆம் திகதி வியாழக்கிழமை விஜயதசமி நிகழ்வு காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (இ-5-60)



இலங்கை வங்கி யாழ். ஸ்ரான்லி வீதி கிளையினால் யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலைக்கு அலுமாரி ஒன்று அன்பளிப்பாக அண்மையில் கையளிப்பு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் கிளை உத்தியோகத்தர்களான திருமதி சுகந்தி ஜெயச்சந்திரன், த.லக்கிராஜ், தே.லக்ஷன் ஆகியோர் இணைந்து அலுமாரியை அதிபர் அ.சூரியவதனியிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

## சிறப்புக்கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மெய்யியல் உளவியல் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உளநல வார சிறப்புக் கண் காட்சியான உளவியல் கண்காட்சி நாளை புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சி ஆசிரியர்கள், மாணவர்கள், உளவளத்துறையினர், யுவதிகள் மற்றும் இளைஞர்களுக்கு பயனுடையதாக அமையை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழக மெய்யியல் உளவியல்துறையினர் அறிவித்துள்ளனர்.

மேற்படி கண்காட்சி யாழ். பல்கலைக்கழக புதிய கலைப்பீட கட்டத் தொகுதியிலும் புதிய பரீட்சை மண்டபத்திலும் நடைபெறவுள்ளது. (இ-3-5)

## ஹென்றியரசர் கல்லூரியில் நூலக சான்றாதாரக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இளவாலை ஹென்றியரசர் கல்லூரியின் நூலக அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில், முப்பரிமாண நூலக சான்றாதாரக் கண்காட்சி இன்று தொடக்கம் 3 நாட்கள் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக பிரதம நூலகர் திருமதி. ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தத்தின்ஒழுங்கமைப்பில் இடம் பெறவுள்ள இக்கண்காட்சியில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி வி.மிகுந்தன் கலந்து கொள்வார்.

இன்று முதல் வியாழன் வரை காலை 8.30 முதல் பி.ப 3.30 வரை இலவச மாக இடம் பெறவுள்ள இக்கண்காட்சியை அனைத்துப் பாடசாலை மாணவர் களும் கண்டுகளித்து பயனடையும் வகையில் ஒழுங்கு கள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

யா/ஆனைப்பந்தி
மெ.மி.வித்தியாலயம்

கு.மிதுஷான்-173, வி.கம்சாயினி-170,ச.யனுசன்-162,பி.சுடரழகன்-160,பி.நிருபன்-156,வி.டயந்தினி-156,வ.விதுஷா-155,ரா.கரிஷன்-153,ஜெ.கஜானி-153.

யாழ். சிறுப்பிட்டி இந்து
தமிழ் கலவன் பாடசாலை

ச.யுகேதா- 169, பா.பாநுஷன்-160, யோ.கார்த்திகா-153

## தேசிய வாசிப்புமாத பொது அறிவுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அனலைதீவு பொது நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வாசகர்களுக்கான பொது அறிவுப் போட்டியொன்று எதிர்வரும் 20ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு பொது நூலக மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

எனவே மேற்படி போட்டியில் பங்குபற்ற ஆர்வமுள்ள வாசகர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு நூலகச் சமூகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-5)

## இளம் குடும்பஸ்தரின் மீது மூவர் கொண்ட குழு தாக்கு

### ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

தொழில் போட்டி காரணமாக இளம் குடும்பஸ்தர் மீது மூவர் கொண்ட குழு தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

இத்தாக்குதலில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் யாழ்.போதனா வைத்தியசாலையின் விபத்து அதி தீவிர சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

தாவடி ஐந்து வேம்படி பகுதியைச் சேர் ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான அருந்தவச் செல்வன் அருண்றொஜீவ் (வயது-33) என்பவரே மேற்படி தாக்குதலில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருபவராவார்.

கடந்த வியாழக்கிழமை இரவு 9மணியளவில் உப்புமட பிள்ளையார் கோவிலடியிலுள்ள ஒட்டுத் தொழில் கடையொன்றிலேயே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த கடைக்கு தாக்குதலுக்குள்ளான குடும்பஸ்தரை தந்திரமாக அழைத்த மூவர் அவர் மீது இரும்பு பைப்பினால் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதலில் படுகாயமடைந்து மயக்கமுற்ற குடும்பஸ்தரினை தாக்குதலாளிகளே யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்தவுடன் அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்றுள்ளனர்.

எனினும் வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவர்களது வாகன இலக்கத்தகடு மற்றும் பெயர்கள், அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை பதிவு செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாரிடம் குடும்பஸ்தர்களின் உறவினர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டதனை தொடர்ந்து யாழ்.போதனா வைத்தியசாலைத் தகவலடிப்படையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனினும் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சந்தேக நபர் நேற்று மதியம் வரை கைது செய்யப்படவில்லையெனவும் இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாரிடம் கேட்டால் எம்மை பிடித்து தருமாறு அலட்சியமாக கூறுவதாகவும் தாக்குதலுக்குள்ளான குடும்பஸ்தரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த சில மாதங்களாக இவ்வாறான தனிநபர்மீதான தாக்குதல்களும் கொலை முயற்சிகளும் அதிகரித்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# நலம் தரும் நவராத்திரி


ஆத்தாளை, எங்கள் அபிராம வல்லியை, அண்டம் எல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூ நிறத்தாளை, புவி அடங்கக்
காத்தாளை, ஐங்கணைப் பாசங்குசமும் கருப்புவில்லும்
சேர்த்தாளை, முக்கண்ணியைத், தொழுவார்க்கு ஒரு தீங்கு இல்லையே.

புரட்டாதி மாதப் பிரதமை தொடங்கி நவமி வரை வரும் ஒன்பது தினங்கள் நவராத்திரி விரத காலமாகும். அதில் முக்குண ங்களுக்கும் மூலமான சர்வ லோக நாயகியை ஒன்பது நாட்களும் பூஜித்து வழிபடும் போது, முதல் மூன்று நாட்கள் ஸ்ரீதுர்க்கா பரமேஸ்வரியை வீரத்தையும், தைரியத்தையும் வேண்டியும், அடுத்த மூன்று நாட்கள் ஸ்ரீ மகாலட்சுமியை சகல செல்வங்களை யும் (தனம்) வேண்டியும், கடைசி மூன்று நாட்கள் ஸ்ரீ சரஸ்வதியை கல்வி, அறிவு, சகல கலை ஞான ங்கள் என்பவற்றை வேண்டியும் வணங்குகின்றோம்.

புரட்டாதி மாதத்தில் நவக்கிரக ங்களில் நாயகமாக உள்ள சூரியன், கன்னி இராசியில் சஞ்சரிக்கும் காலம் தட்சணாயண காலமாகும். இக்காலம் தேவர்களுக்கு இராக்கா லம் என வரலாறு கூறுகிறது. உத்தராயணத்தில் வசந்த நவராத் திரியும் தட்சணாயன காலத்தில் சாரதா நவராத்திரியும் தேவியைப் பூசிக்கச் சிறந்த காலமாகும்.

இவை இரண்டிலும் புரட்டாதி மாதத்தில் அனுஷ்டிக்கப்படும் சாரதா நவராத்திரியையே நாம் எல்லோரும் கொண்டாடுகிறோம். கன்னி ராசிக்கு அதிபதியானவன் புதன் வித்யாகாரகன் என்று அழைக்கப்படுகிறான். கல்வி, புத்தி, தொழில் ஸ்தானம் சரியாக அமைய இந்த புதனின் பார்வை மிகவும் முக்கியமானது. எனவே தான் இந்தக் காலத்தில் நவராத்திரி கொண்டாடுவது மிகவும் சிறந்தது என கருதுகின்றனர்.

நவராத்திரி என்றாலே சக்தியை வழிபடுவது என்பது தான் அர்த்தம். உலகம் அனைத்தும் சக்தி மயம் என்பதை விளக்குவதே நவராத்திரியின் முக்கிய தத்துவம் ஆகும். பராசக்தியே சர்வ வல்லமை படைத்தவர் ஆவார். இந்த விரதத்தை அனுஷ்டித்தால் சகல சொபாக்கியங்களும் கிடைப்பது உறுதி.



**நவராத்திரி கொண்டாடப்படுவதன் காரணம்!**

அகிலம் அனைத்தையும் படைத்தவளும், அதை ரட்சிப்பவளும் சாட்சாத் அந்த ஆதிபராசக்தியே ! பொற்கரங்கள் பதினெட்டும், ஒளி வீசும் திருமுகமும் துலங்க, எல்லோருடைய அதிதேவதையாகவும் திகழும் அந்த துர்க்காதேவியே மகிஷாசுரமர்த்தினியாகவும் சண்டிகாவாகவும்... இன்னும் பற்பல திருநாமங்களில் திருவடிவங்களில் நம்மைக் காக்க அவதாரம் எடுத்து வந்தாள என்கின்றன புராணங்கள்.

வரமுனி என்றொரு முனிவர் கர்வத்தின் காரணமாக கடும் சாபம் பெற்று மகிஷனாக மாறினார். இந்திரன் முதலான தேவர்களை பலவாறு துன்புறுத்திய மகிஷன், அவர்களை விரட்டியடித்துவிட்டு தேவ லோகத்தைக் கைப்பற்றினான். பரிதவித்துப்போன இந்திரன், பிரம்மதேவரை சந்தித்து அவருடன் சென்று சிவனாரிடமும், மகாவிஷ்ணுவிடமும் சரணடைந்தான். மும்மூர்த்தியரின் சக்திகளும் ஒன்றுகூடி உருவானவளே துர்க்கை.

தனது திருக்கரங்களில் ஈசனின் சூலம், விஷ்ணுவின் சக்ராயுதம், பிரம்மனின் கமண்டலம், இந்திரனின் வஜ்ராயுதம், அக்னிவருணன் ஆகியோரின் சக்தி, வாயு பகவானின் வில், ஐராவதத்தின் மணி, எமதருமனின் தண்டம், நிருதி தேவனின் பாசம், காலனின் கத்தி கேடயம் ஆகியவற்றை ஏந்தி நின்றாள் தேவி. அத்துடன், சமுத்திர தேவன் தாமரை மலரையும், குபேரன் பாணங்கள் நிறைந்த பாத்திரத்தையும், ஹிமவான் சக்தி மிக்க சிம்மத்தை வாகனமாகவும், சூரிய தேவன் தேக காந்தியையும், இன்னும பிற தேவர்கள் பல்வேறு ஆடை ஆபரணங்களையும் அளித்ததால், சர்வலங்கார பூஷணியாக திகழ்ந்தாள் ஸ்ரீதுர்க்கா.

மகிஷாசுரன் பெற்றிருந்த வரத்தின்படி அந்த அசுரன் எந்தப் பெண்ணை மோகிக்கிறானோ, அவளால்தான் அவனுக்கு மரணம் நிகழும். துர்க்கா தேவி அசுரனைத் தேடி அவனது இருப்பிடத்துக்குச் சென்றாள். அவளது அழகைக் கண்டு மோகித்தான் மகிஷன். தன்னை மணக்கும்படி வேண்டினான். யுத்தத்தில் என்னை ஜெயித்தால், உன்னை மணக்கிறேன் என நிபந்தனை விதித்தாள் தேவி. யுத்தம் தொடங்கியது. ஒன்பது நாட்கள் நிகழ்ந்த யுத்தத்தின் முடிவில், மகிஷாசுரன் கொல்லப்பட்டான். மகிஷனின் தலையின் மீது ஏறி நின்று, மகிஷனாக வந்த வர முனிக்கும், தேவர்களுக்கும் திருவருள் புரிந்தாள் தேவி. தேவி துர்க்கையின் வெற்றியைக் கொண்டாடிய திருநாளே விஜய தசமி. அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டிய துர்க்கையின் மகாத்மியத்தைப் போற்றுவதே நவராத்திரி வைபவம்.

முதல் மூன்று நாட்கள் துர்க்கா தேவியையும், அடுத்த மூன்று நாட்கள் மகாலட்சுமியையும், கடைசி மூன்று நாட்கள் சரஸ்வதியையும் வழிபடுவார்கள். புரட்டாதி மாதம், வளர்பிறை பிரதமை தொடங்கி 9 நாட்கள் கொண்டாடப்படுகிறது நவராத்திரி. கடைசி நாள் விஜயதசமி! இந்த நிகழ்வுகளையெல்லாம் பொம்மைகளாக வைத்து சித்திரிப்பதே கொலு வைபவமாகப் பரிணமித்தது.

கன்னி பெண்களுக்கு திருமண பாக்கியம், சுமங்கலி பெண்கள் மாங்கல்ய பலம் கிடைப்பதால் மகிழ்ச்சி அடைகின்றனர். ஆகவே, இந்நாட்களில் வழிபட்டால் எல்லா பருவத்து பெண்களும் பரிபூரண அருளை பெறலாம். ஐம்பூதங்களில் ஒன்றான மண்ணால் ஆன பொம்மையால் என்னை பூஜை செய்பவர்களுக்கு சகல ஐஸ்வர்யங்களையும் மாங்கல்ய சௌபாக்கியத்தையும் அளிப்பேன் என்று தேவி புராணத்தில் அம்பிகை கூறி உள்ளார்.

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரம் கண்ணகியம்மன் ஆலயத்தில் நவராத்திரி விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

22 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் ஒரு மணிக்கு பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வாழைவெட்டு நிகழ்வு என்பன இடம்பெறும். (இ-5)

✦ ✦ ✦ ✦ ✦

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் நவராத்திரிவிழா இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 22ஆம் திகதி வரை சின்மயா மிஷன் ஞானவேல் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணி வரை நவராத்திரி கால பூஜை, பஜனை மற்றும் சத்சங்கம் மற்றும் கலை நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன.

இதேவேளை 22ஆம் திகதி வியாழக்கிழமை அன்று முற்பகல் 11 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை விஜயதசமி நிகழ்வு, ஏடு தொடக்குதல் நிகழ்வு என்பன நடைபெறவுள்ளது.

ஏடு தொடக்குதல் நிகழ்வில் கலந்து கொள்வோர் முன்கூட்டியே தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு சின்மயா மிஷன் அறிவித்துள்ளது. (இ-5)

## சரஸ்வதி சிலை இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்சுவேலி இடைக்காடு மகா வித்தியாலயத்தில் பாடசாலை வளாக முன்றிலில் நிறுவப்பட்டுள்ள சரஸ்வதி சிலை திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 7.45 மணிக்கு வித்தியாலய அதிபர் கு.வாகீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரத்தினம், வித்தியாலய முன்னாள் அதிபர் அ.அருந்தவநேசன், வளலாய் சித்தி விநாயகர் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ. க.ஜெயராமக்குருக்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. தங்கராசா ரஞ்சன்
ஆசிரியர், வ/ஒலுமடு அ.த.க. கல்லூரி

06.10.2015 அன்று கல்வி அமைச்சின் உயர் விருதான "பிரதீபா பிரபா" விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட ஆசிரியர் தங்கராசா ரஞ்சன் அவர்களை அவரது பணி மென்மேலும் சிறந்தோங்க வாழ்க வாழ்க என இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துபவர்கள்:- திரு. திருமதி ஸ்ரீகாந்தா, திரு. திருமதி ஸ்ரீகுமரன்
மாணவர்கள்- நரேந்திரன், சிந்துஜன்

வீரத்தினை எதிர்நோக்கி...

மலைமகளின் பதம் பணிந்து
மகிழ்வுடனே ஒளியேற்றி
மறுமலர்ச்சி எதிர்நோக்கி
பெரு வீரம் தரவேண்டி
துர்க்கை தனை கொலுவிருத்தி
திரு வீரம் நாம் வேண்டி
திரி நாட்கள் நோன்பிருப்போம்
துயரம் நிறை உலகெல்லாம்
தூய வீரம் பெறுதற்காக!

பா.தர்சன்
தரம்-12 கலைப்பிரிவு
(இடைக்காடு மகா வித்தியாலயம்)



## 24 கிராமசேவகர் பிரிவுகளுக்கு

# நிரந்தரமாக கிராமசேவகர்கள் நியமிக்கப்படவில்லை

### பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை

(மல்லாவி)

**முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் ஆகிய மூன்று பிரதேச செயலக பிரிவுகளிலும் 62 கிராம சேவகர் பிரிவுகள் உள்ள நிலையில் 24 கிராம சேவகர் பிரிவுகளுக்கு நிரந்தர கிராமசேவகர்கள் நியமிக்கப்படாமையால் அயல்கிராமங்களைச் சேர்ந்த கிராமசேவகர்கள் பதில் கடமையாற்றி வருகின்றனர். இந்நிலையில் அவர்களைத் தேடி கிராமசேவ கர்களின் அலுவலகங்கள், வீடுகள் ஆகியவற்றிற்கு தமது தேவைகளை நிறைவேற்றுவதற்கு அலைந்து திரிவதாக பாதிக்கப்பட்ட கிராமமக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.**

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மக்களின் இடப்பெயர்வின் பின்னர் மக்கள் மீள்குடியேறியுள்ள துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 20 கிராம சேவகர் பிரிவுகள் உள்ள நிலையில் ஏழு கிராமசேவகர் பிரிவுகளுக்கு நிரந்தர கிராமசேவையாளர் நியமிக்கப்படாமல் காணப்படுகின்றது.

இதேபோல் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் 15 கிராமசேவகர் பிரிவுகள் உள்ள நிலையில் ஏழு கிராமசேவகர் பிரிவுகளுக்கு நிரந்தர கிராமசேவகர்கள் நியமிக்கப்படவில்லை.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் 27 கிராமசேவகர் பிரிவுகள் உள்ள நிலையில் பத்து கிராமசேவகர் பிரிவுகளுக்கு நிரந்தர கிராமசேவகர்கள் நியமிக்கப்படவில்லை.

இது தொடர்பில் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களின் பொது அமைப்புக்களின் பிரதிநிதியொருவர் கருத்து தெரிவிக்கையில்,

இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேறி வாழ்கின்ற கிராமங்களுக்கு நிரந்தர கிராமசேவகர்கள் நியமிக்கப்படாமையால் தமது ஆவணங்களை உறுதிப்படுத்தி கையொப்பம் இட்டு பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களினால் மக்களுக்கு வழங்கப்படும் வாழ்வாதார உதவிகள் உட்பட பல்வேறு நலத்திட்டங்களை பெற்றுக் கொள்வதற்கும் கிராமசேவகரின் உறுதிப்படுத்தலை உரிய நேரத்தில் பெற முடியாமையால் பல உதவித் திட்டங்களை இழந்துள்ளதாகவும் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர், துறைசார்ந்த அமைச்சுக்கள் இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு நிரந்தர கிராமசேவகர்களை நியமிக்க வேண்டுமென கோரிக்கையொன்றை முன் வைத்துள்ளனர். (2-15)

## வடக்கு மாகாண அழகக சங்கத்திற்கு விரைவில் காணி வழங்க நடவடிக்கை

### வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

(குருமன்காடு)

வடக்கு மாகாண அழகக சங்க சமாசத்திற்கு காணி பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாக வடக்கு மாகாண மீன்பிடி, வர்த்தக, போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் உறுதியளித்துள்ளார்.

வடக்கு மாகாண அழகக சங்கங்களின் சம்மேளனத்துக்கான விசேட ஒன்றுகூடல் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி - கூட்டுறவுசபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களும் இணைந்து இவ்வாறு ஒற்றுமைப்பட்டு ஒருமித்து இயங்குவதையிட்டு பெருமைகொள்வதாகவும் சம்மேளனத்தின் அங்கத்தவர்களின் அபிவிருத்திகள் தொடர்பில் எதிர்வரும் ஆண்டுகளில் தாம் கவனம் செலுத்தவுள்ளதாகவும், அனைத்து சங்கங்களும் சம்மேளனத்தின் ஒழுக்க விதிகளுக்கு அமைவாக தமது நிர்வாகங்களை சிறப்பாக நடத்துவதன் மூலம் மக்களுக்கு தூய்மையான சேவையை வழங்க முடிவதோடு சங்க அங்கத்தவர்களின் நலனும் காக்கப்படும் என குறிப்பிட்டார்.


அத்தோடு சம்மேளனத்தின் தேவைக்கு உகந்த காணியை தாம் விரைவில் பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்தார்.

அத்துடன் எதிர்காலத்தில் வர்த்தக வாணிபத்தினூடாக சங்கங்களுக்கு தம்மால் இயன்ற உதவித் திட்டங்களை வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் மிகவும் வறுமையில் உள்ள சங்க அங்கத்தவர்களை இனங்கண்டு அவர்களுக்கு வாழ்வாதாரத்தை உயர்த்தும் ஓர் செயற்றிட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இவ்விசேட ஒன்றுகூடலில் சம்மேளனம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப் பட்டது. இதில் சம்மேளனத்துக்கு ஒரு பொது மண்டபமும் அதனை நிறுவுவதற்காக ஒரு காணியும் தமக்கு அவசிய தேவையாக உள்ளது என்றும் தெரிவித்தனர். (2-250)




## அடிப்படை வசதிகளற்ற நிலையில் நெளுக்குளம் இந்து மயானம்



வவுனியா நெளுக்குளம் இந்து மயானம் சடலங்களை எரியூட்டுவதற்கான அடிப்படை வசதிகள் இன்றியும் மயானத்தை சுற்றி பற்றைகள் சூழ்ந்தும் காணப்படுவதாகவும் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வவு/ நெளுக்குளம் மகாவித்தியாலயத்திற்கு அண்மையாக காணப்படும் வீதியில் குறித்த மயானம் உள்ளது. பல கிராமங்களைச் சேர்ந்த இந்து மதத்தவர்கள் இறந்தவர்களின் சடலங்களை எரியூட்டுவதற்கு பயன்படுத்தி வருகின்றனர்.

ஆனால் அங்கு எரியூட்டல் கொட்டகை, கிணறு என்பன அமைக்கப்படவில்லை. அமைக்கப்பட்டுள்ள பொதுமண்டபம் இடிந்த நிலையில் பராமரிப்பு இன்றியும் சடலத்தை வைத்து தகனம் செய்வதற்கு கேடர்கள் கூட அமைக்கப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

மழைக்காலங்களில் சடலங்களை எரியூட்டுவதற்கு எரியூட்டல் கொட்டகைகள் அமைக்கப்படாமையால் பல்வேறு சிரமங்களின் மத்தியிலேயே சடலங்களை எரியூட்டுவதாக பாதிக்கப்பட்ட கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

விசஜந்துகளின் நடமாட்டம் அதிகமாக காணப்படுவதால் சடலங்களை எரியூட்டச் செய்வோர் அச்சத்துடன் நிற்பதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே, வவுனியா நகரசபை உறுப்பினர்கள், கிராம அலுவலர்கள், கிராம அபிவிருத்தி சங்கத்தினர், பொது அமைப்புக்கள் ஆகியோர் மயானத்தை ஒரு தடவை சென்று பார்வையிட்டதன் பின்னர் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-27)

## 'முத்தான வியர்வை' விற்பனை கண்காட்சி

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் முத்தான வியர்வை எனும் வாழ்வின் எழுச்சி விற்பனை கண்காட்சி இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் தர்மபுரம் கிழக்கு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

இதற்கான ஆரம்ப நிகழ்வு இன்று காலை 9.30மணிக்கு கண்டாவளை பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலக வாழ்வின் எழுச்சி திணைக்களப் பணிப்பாளர் திருமதி ஆரணி தவபாலன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இக்கண்காட்சியில் வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் ஊடாக வாழ்வாதார உதவித் திட்டங்களைப்பெற்றுக்கொண்ட பயனாளிகள் தமது உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்துவதுடன் விற்பனையையும் மேற்கொள்ளவுள்ளனர்.

எனவே ஆர்வலர்கள், பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (2-263)

## அரசியல் கைதிகளின் விடுதலையை அரசு இனியும் தாமதிக்கக்கூடாது

### செல்வம் எம்.பி.தெரிவிப்பு

சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலையை இனியும் தாமதிக்காது, அவர்களை விடுவிக்க ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதி அவைத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல்வேறு சிறைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் இன்று (நேற்று) முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்து வரும் நிலையில் அவர்களுக்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பு முழுமையான ஆதரவை வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

கொழும்பு, மெகசின், சீ.ஆர்.பி அநுராதபுரம், தும்பறை, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய சிறைகளில் சுமார் 20 வருடங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 250 இற்கு அதிகமான அரசியல் கைதிகள் இன்று முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தமிழ் தேசியக்கூட்டமைப்பு தொடர்ச்சியாக பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வந்தது. குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் குறித்த அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக இந்த அரசாங்கத்திற்கு பல்வேறு அழுத்தங்களை கொடுத்த நிலையில் ஆர்ப்பாட்டங்கள் மூலமாகவும் அவர்களின் விடுதலைக்காக குரல் கொடுத்தோம்.

குறிப்பாக வடக்கு கிழக்கில் சமூக அமைப்புக்கள் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் மேற்கொண்ட சகல போராட்டங்களுக்கும் தமிழ் தேசியக்கூட்டமைப்பு முழுமையான ஆதரவை வழங்கியதோடு தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு அரசியல் கைதிகளின் விடுதலைக்காக குரல் கொடுத்தோம். ஆனால் மகிந்த அரசாங்கம் மௌனம் காத்தது. இந்த நிலையில் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

ஆனால் தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், காணாமற் போனவர்கள் மற்றும் அரசியல் கைதிகளின் நிலை குறித்து மக்கள் தொடர்ச்சியாக தற்போதைய ஜனாதிபதியிடம் முறையிட்டு வருகின்றனர். ஆனாலும் எவ்வித பலனும் இல்லை.

அரசியல் கைதிகளின் பிள்ளைகள் பாரிய மன அழுத்தத்தில் உள்ளதோடு அவர்களின் குடும்பம் சோகத்தில் ஆழ்ந்துள்ளது. அவர்களின் விடுதலைக்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது.

இதனால் பொறுமை இழந்த அரசியல் கைதிகள் சாகும் வரையிலான உண்ணாவிரத போராட்டத்தில் குதித்துள்ளனர். இந்நிலையில், இவர்களின் போராட்டத்திற்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பு முழு ஆதரவை வழங்குவதுடன், அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி அரசாங்கத்திற்கு மீண்டும் அழுத்தம் கொடுக்கவுள்ளது எனவும் குறிப்பிட்டார். (2-250)

# பேருந்து உரிமையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும்

## வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் உறுதி

(கிளிநொச்சி)

**எதிர்காலத்தில் போக்குவரத்து தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளையும் பேருந்து உரிமையாளர்கள் எதிர்கொள்கின்ற வழி அனுமதிப்பத்திரம் தொடர்பான பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்கு அமைச்சரின் பூரண ஒத்துழைப்பு சம்மேளனத்திற்கு வழங்கப்படும் என வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாணத்தில் மாவட்டங்களுக்கு இடையில் பேருந்து சேவைகளை வழங்குகின்ற பேருந்து உரிமையாளர்களுக்கு இடையிலான சம்மேளன உருவாக்கம் நேற்று முன்தினம் முற்பகல் 11மணியளவில் கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இச்சம்மேளன உருவாக்கத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த காலங்களில் நடந்தவை கடந்தவையாக இருக்கட்டும். எதிர்காலத்தில் தரமான பாதுகாப்பான பேருந்து சேவைகளை வழங்க வேண்டும்.

அதே சந்தர்ப்பத்தில் பேருந்து உரிமையாளர்களின் நலன்களை பாதுகாப்பதற்கு மேற்படி சம்மேளனம் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்.

அதுமட்டுமல்லாது எதிர்காலத்தில் போக்குவரத்து தொடர்பாகவுள்ள பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் உரிமையாளர்கள் எதிர்நோக்குகின்ற வழி அனுமதிப்பத்திரம் தொடர்பாகவும் ஏற்படும் பிரச்சினைகளுக்கு அமைச்சின் பூரண ஒத்துழைப்பு சம்மேளனத்திற்கு வழங்கப்படும்.

அத்துடன் வடக்கு மாகாணத்தில் இ.போ. சபையினருக்கும் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கும் இடையில் நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருந்துவருகின்ற 60:40 என்றசேவை விகிதாசாரத்தினையும் புதிதாக தயாரிக்கப்பட்டிருக்கின்ற நேர அட்டவணையையும் விரைவில் அமுல்படுத்துவதற்கான சந்தர்ப்பம் தற்போது எட்டியுள்ளது.

இன்றையதினம் (நேற்று முன்தினம்) சமுகமளிக்காத ஒருசில வெளிமாவட்டங்களுக்கு இடையில் பேருந்து சேவைகளை வழங்கி வருகின்ற உரிமையாளர்கள் மிகவிரைவாக மேற்படி சம்மேளனத்தில் அங்கத்தவர்களாக இணைந்து கொண்டு தங்களது உரிமைகளை பாதுகாத்துக்கொள்வது மட்டுமல்லாது பொதுநோக்கோடு பொதுமக்களுக்கு பாதுகாப்பான பேருந்து சேவைகளை வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (2-9)




## வைத்தியராக வரவேண்டும் என்பதே எனது இலட்சியம்



(கிளிநொச்சி)

எனது தந்தையின் எதிர்கால கனவு ஒரு சிறந்த கல்விமான்களாக எங்களை உருவாக்க வேண்டும் என்பதாகும்.

அதேபோன்று ஒரு வைத்தியராக உருவாகவேண்டும் என்ற இலட்சியத்துடன் படித்து கிளிநொச்சி மாவட்டத்தில் 184 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்திற்கு வந்தேன் என கிளி/விவேகானந்தா வித்தியாலய மாணவன் சந்திரகுமார் டதுசன் தெரிவித்துள்ளார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் சித்தி குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

நான் இந்நிலைக்கு வருவதற்கு எனது விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் பெற்றோரின் ஊக்குவிப்பும் பாடசாலை அதிபரின் வழிகாட்டலும் ஆசிரியரின் அர்ப்பணிப்பும் காரணமாக இருந்தன.

பாடசாலையில் கற்பிக்கப்படும் பாடங்களை இரவுவேளைகளிலும் அதிகாலையிலும் படிப்பேன்.

என்னைப்போன்று எதிர்வரும் ஆண்டுகளில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் கற்று வந்தால் அதிகூடிய புள்ளிகளைப்பெற முடியும். அத்துடன் தமது இலக்கையும் அடைய முடியும் என்று கூறினார். (2-271)



வவுனியா காப்பகங்களில் கடந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து சிறுவர்களையும் ஒன்றிணைத்த சிறுவர் தின நிகழ்வு "**நாமே உலகம்**" எனும் தொனிப்பொருளில் தாய் மடி சிறுவர்கள் காப்பகத்தில் அண்மையில் வரோட் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்தந்தை அல்பிரேட்ஜே அருள்ராஜா தலைமையில் இடம்பெற்றன. வவுனியா இந்து அன்பகம், பூவரசங்குளம் அறூப் இல்லம் கிளராட், விடிவெள்ளி ஆண்கள் நிலையம் கிளாரட் பெண்கள் அருளோதயம் ஆகிய சிறுவர் இல்லங்கைளச் சேர்ந்த குழந்தைகள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்த சிறுவர் தின நிகழ்வில் சுமார் 150 சிறுவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:பனிக்கன்குளம் செய்தியாளர்)

## விவசாயிகளுக்கான மானிய உரம் விநியோகம் இன்று முதல் ஆரம்பம்

(மல்லாவி)

ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கீழ் 2015-2016 கால போக நெற்செய்கையாக 34 சிறுகுளங்களின் கீழ் 2 ஆயிரத்து 237 1/2 ஏக்கரில் நெல் விதைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த நெல் விதைப்பினை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளுக்கான முதலாம் கட்ட மானிய உரம் விநியோகமானது இன்று செவ்வாய்க்கிழமை ஒலுமடு கமநல சேவை நிலையத்தில் வைத்து மாங்குளம் கமக்கார அமைப்பு, மாங்குளம் வடக்கு கமக்கார அமைப்பு ஆகியவற்றிற்கு வழங்கப்படவுள்ளது.

நாளை புதன்கிழமை அம்பகாமம் கமக்கார அமைப்பிற்கும் நாளை மறுதினம் வியாழக்கிழமை திருமுறிகண்டி, இந்துபுரம் ஆகிய கமக்கார அமைப்புக்களுக்கும் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தச்சடம்பன், மணவாளன் பட்டமுறிப்பு ஆகிய கமக்கார அமைப்புக்களுக்கும் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை ஒலுமடு கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகளுக்கும் மானிய உரம் விநியோகம் நடைபெறவுள்ளது. (2-15)

## குரங்குகள் அட்டகாசம்; பயிர்வகைகள் நாசம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி செல்வாபுரம் கிராமத்தில் காகில்ஸ் நிறுவனத்தின் உதவியுடன் தமது சொந்த முயற்சியினால் பல விவசாயிகள் பசன்புரூட், உப-உணவுப்பொருட்கள் ஆகியவற்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுடைய பயிர்களை சேதமடையச் செய்யும் வகையில் குரங்குகளின் அட்டகாசம் நாளுக்குநாள் அதிகரித்து காணப்படுகின்றது.

அத்துடன் கால்நடைகளை வளர்ப்போர் அவற்றை கட்டிவைத்து பராமரிக்காமல் கட்டாக்காலிகளாக நடமாட விடுவதால் பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகள் தமது பயிர்கள் நாசப்படுத்தப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே அப்பகுதி கிராம அலுவலர், கமக்கார அமைப்பினர்,கமநலசேவை திணைக்களத்தினர், வனவிலங்கு பாதுகாப்பு பிரிவினர் இவ்விடயத்தில் கூடிய கவனமெடுத்து தமது வாழ்வாதாரப் பயிர்கள் அழிவுறுவதில் இருந்து பாதுகாக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (2-254)

# ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் ஆயிரம் முறைப்பாடுகள் பதிவு

## செயலாளர் லெசில் தகவல்

**(கொழும்பு)— பாரிய நிதிக் குற்றச் செயல்கள், மோசடிகள் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவிடம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் லெசில் டி சில்வா தெரிவித்துள்ளார்.**

கடந்த அரசாங்க ஆட்சிக்காலத்தில் அரச நிறுவனங்களில் இடம் பெற்ற பாரியளவிலான மோசடிகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

பெயர் குறிப்பிட்டும் பெயர் குறிப்பிடாமலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்தி, சாட்சியங்களை திரட்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஆணைக் குழுவின் செயலாளர் லெசில் டி சில்வா தெரிவித்துள்ளார்.


இந்த முறைப்பாடுகள் தொடர்பில் பெரும் எண்ணிக்கையிலானவர்களிடம் ஏற்கனவே வாக்குமூலங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் விசாரணைகளும் நடத்தப்பட்டுள்ளன.



கடந்த அரசாங்க ஆட்சிக்காலத்தில் அரச நிறுவனங்களில் இடம் பெற்ற மோசடிகள், குற்றச்செயல்கள் தொடர்பில் தகவல்கள் தெரிந்தால் பெயர் குறிப்பிட்டோ அல்லது அநாமதேய அடிப்படையிலோ முறைப்பாடு செய்ய முடியும் என அவர் தெரிவித்துள்ளார். செயலாளர், பாரிய மோசடிகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு, புளொக் 5, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம், பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 7 என்ற முகவரிக்கோ அல்லது 0112669135 என்ற தொலைபேசி இலக்கம் அல்லது 0112697420 தொலைநகல் இலக்கம் அல்லது prcilac@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாகவோ அறிவிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# தனது குடும்பத்தை அவமதிக்க குறிப்பிட்ட சிலர் முயற்சியாம்

## நாமல் ராஜபக்ஷ ஆதங்கம்



வெளிநாட்டு வங்கிகளில் கணக்குகள் உள்ளதாக கூறி தன்னையும் தனது குடும்பத்தையும் அவமதிப்பதற்கு முயற்சியொன்றினை குறிப்பிட்ட சிலர் மேற்கொண்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆதங்கப்பட்டுள்ளார்.

இலங்கை அரசியல் முக்கியஸ்தர் ஒருவரின் மகனால் துபாயில் வங்கி கணக்கில் வைப்பு செய்யப்பட்ட 650 அமெரிக்க டொலர் கணக்கினை தடை செய்வதற்கு அந்நாட்டு நீதிமன்றம் செயற்படுகின்றது.

இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கமையவே துபாய் நீதிமன்றம் இந் நடவடிக்கையை மேற்கொள்கின்றதாக ஊடகங்களில் செய்தி வெளியாகின.

இதற்கிடையில் வெளிநாட்டு வங்கிகளில் கணக்குகள் உள்ளதாக கூறி தன்னையும் தனது குடும்பத்தையும் அவமதிப்பதற்கு முயற்சியொன்றினை குறிப்பிட்ட சிலர் மேற்கொண்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனக்கும் தனது சகோதரர்களுக்கு எவ்வித வெளிநாட்டு வங்கி கணக்குகளும் இல்லை என அவர் கூறியுள்ளார்.

உலங்கு வானூர்திகள், லம்போகினி வாகனங்கள் மற்றும் விலையுயர்ந்த குதிரைகள் தங்களிடம் உள்ளதாக கடந்த காலங்களில் பல்வேறு பிரசாரம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் குறித்த பிரசாரங்கள் அனைத்தும் போலியானதென தற்போது உறுதியாகியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# கடற்படை ரோந்து கப்பலுக்குள் இருநாட்டு அதிகாரிகள் சந்திப்பு

(சென்னை)

இந்திய-இலங்கை கடற்படை அதிகாரிகள் அண்மையில் இரண்டு நாட்டு எல்லைப்புறத்தில் வைத்து கடற்படை ரோந்து கப்பலுக்குள் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

இதன்போது தமது நடவடிக்கைகள் தொடர்பில் இரண்டு நாட்டு அதிகாரிகளும் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது இந்திய தரப்புக்கு தமிழ்நாடு பாண்டிச்சேரிக்கு பொறுப்பான கொமடோர் ஆலோக் பட் நாகர் தலைமை தாங்கினார்.

இலங்கை தரப்புக்கு வடமாகாண பிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் பியால் டி சில்வா தலைமை தாங்கினார்.

இது வருடாவருடம் நடைபெறும் ஒரு வழமையான சந்திப்பு என்று இரண்டு தரப்பிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# உத்தியோகபூர்வ இல்லம் இன்னும் வழங்கவில்லை

## புதிய எம்.பிக்கள் விசனம்

(கொழும்பு)

உத்தியோகபூர்வ இல்லங்கள் வழங்கப்படவில்லை என புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

தமக்கு வழங்கப்பட வேண்டிய உத்தியோகபூர்வ இல்லங்கள் இதுவரையில் வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளனர்.

இம்முறை 67 நாடாளுமன்ற உறுப்பினர்கள் புதிதாக நாடாளுமன்றிற்கு தெரிவாகியுள்ளனர். நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெறும் தினங்களில் கொழும்பை அண்டிய தனியார் இடங்களில் தங்கியிருக்க நேரிட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், சபாநாயகர் மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் தெரிவித்துள்ளனர்.

மாதிவெலயில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இதனால் குறித்த காலம் வரையில் வேறும் மூன்று நிறுவனங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறைகள் ஒதுக்கப்பட உள்ளதாக நாடாளுமன்ற நிர்வாகம் அறிவித்துள்ளது.

நவம்பர் மாதம் வரவு செலவுத் திட்டம் குறித்த விவாதம் நடைபெறுவதற்கு முன்னதாக, புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் இருப்பிட பிரச்சினைக்கு தீர்வு காண படும் என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் உறுதியளித் துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7-10)

# பிரதமராகும் கனவிலேயே வீரவன்ச குழப்பங்களை விளைவிக்கின்றார்

## அஜித் பீ பெரேரா குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரதமராகும் கனவை நனவாக்கிக் கொள்ளும் நோக்கில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, குழப்பங்களை விளைவித்து வருவதாக பிரதி அமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ச எல்லாக் காலங்களிலும் யாருடைய தோளிலேனும் ஏறியே அரசியல் செய்து வருகின்றார். பிரதமராகும் கனவு அவருக்கும் இருக்கும்.

அதற்கு தேவையான முயற்சிகளில் ஒன்றாகவே தற்போது நாடாளுமன்றில் குழப்பங்களை விளைவித்து வருவதனை கருத வேண்டும்.

ஜே.வி.பியில் இருந்த காலத்தில் ஜே.வி.பி லேபளில் பிரபல்யம் அடைந்து பின்னர் கட்சியை காலால் உதைத்து விட்டு வெளியேறினார்.

பின்னர் மகிந்தவின் கரத்தைப் பலப்படுத்துவதாகத் தெரிவித்து அவரின் தோள் மீது ஏறி அரசியல் செய்தார்.

எப்போதும் விமல் வீரவன்சவிற்கு தனக்கு என ஓர் அரசியல் நிலைப்பாடு இருக்கவில்லை.

தற்போது அவ்வாறான ஓர் தனி நிலைப்பாட்டை உருவாக்கிக் கொள்ளும் முயற்சியில் விமல் வீரவன்ச ஈடுபட்டுள்ளார்.

அவ்வாறான ஓர் விடயம் இருக்கவில்லை என உணர்ந்து கொண்ட விமல், தற்போது அந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

எனினும், துரதிஷ்டவசமாக விமல் வீரவன்சவை மக்கள் ஓர் கோமாளியாகவே அடையாளம் கண்டுள்ளனர்.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்புரிமையையும் விமல் வீரவன்ச இழக்கும் நிலைமையே காணப்படுகின்றது என பிரதி அமைச்சர் அஜித் பீ பெரேரா கொழும்பு ஊடகமொன்றுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார். (இ-7-10)

# காத்தான்குடியில் குண்டுவெடிப்பு

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஏ.எல்.எஸ்.மாவத்தையில் நேற்று பகல் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏ.எல்.எஸ்.மாவத்தையில் 58 ஆம் இலக்க வீட்டின் அருகாமையிலுள்ள வெற்று வளவு ஒன்றை) சுட்டி துப்புரவு செய்து கொண்டிருந்த போது குப்பைக்குள்ளிருந்த குண்டே வெடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# முகநூல் தொடர்பில் 2000 முறைப்பாடுகள்

சமூகவலைத்தளமான முகநூல் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்திருப்பதாகவும், செப்டெம்பர் மாத இறுதிவரை 2000இற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும் கணனி அவசர தயார்நிலை இணைப்பு நிலையத்தின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ரொஷான் சந்திரகுப்த தெரிவித்தார்.

இந்த முறைப்பாடுகளில் 80 வீதமானவை வேறு நபர்களின் பெயரில் போலியான கணக்குகளை ஆரம்பித்தமை தொடர்பானது என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு போலியான கணக்குகள் தொடர்பில் முகநூல்களில் கணக்குகளைக் கொண்டிருக்காதவர்கள் கூட பேஸ்புக் நிறுவனத்துக்கு குறித்த போலிக் கணக்குத் தொடர்பான முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

இது மாத்திரமன்றி வேறு இடங்களில் பயன்படுத்தப்பட்ட புகைப்படங்கள் முகநூல்களில் பயன்படுத்தப்படுவது தொடர்பிலும் கணிசமான முறைப்பாடுகள் பதிவாகியிருப்பதாகவும், இவ்வாறான விடயங்கள் தொடர்பில் நேரடியாக பேஸ்புக் நிறுவனத்துக்கு தெரியப்படுத்தினால் அவர்கள் அந்தப் படங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# இன்று விஸ்வப்பிரம்மாவின் திவ்ய திருநாள்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளாம் விஸ்வப்பிரம்மாவின் திவ்ய திருநாள் இன்றாகும்.பஞ்ச கிருத்தியத்துக்கும் உலக இயக்கத்துக்கும் பூரண காரண கர்த்தாவாக விளங்கும் இந்த விஸ்வப் பிரம்ம தினம் புரட்டாதி மாதச் சித்திரை நட்சத்திர நாளாகும்.

பஞ்சகம்மாளர் எனப்படுகின்ற ஐந்து குலத்தவர்களுக்கும் கடவுளாக விளங்குகின்ற இந்த விஸ்வப்பிரம்மா ஒரு தனிப்பெருந் தெய்வமாகும். உலகத்தின் தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் காரண காரியராக விளங்கும் இந்த விஸ்வப் பிரம்மாவினால் தான் இந்தப் பூமியானது சுழல்கிறது. ஸ்ரீ விராட் விஸ்வகர்ம பரப்பிரம்மமாகத் திகழும் இவர் சானக ரிஷி மூலமாக மனு என்றும் சனாதன ரிஷி மூலமாக மயன் என்றும் அபூவனஸ ரிஷி மூலமாக துவஷ்டா என்றும் பிரத்தனஸ ரிஷி மூலமாக சிற்பி என்றும் ஸமபர்னஸ ரிஷி மூலமாக விஸ்வக்ஞர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

இந்த விஸ்வசர்மா ஆனவர் விஸ்வப் பிரம்ம குல பஞ்சகம்மாளரும் மனு, மய துவஷ்டா, சிற்பி, விஸ்வக்ஞ எனப்படும் பஞ்ச குலத்தவர்களும் சேர்ந்தே ஐந்து முகங்களுடன் அம்சமாகி அனைத்து உலக இயக்கத்துக்கும் தாமே பிரம்மம் என்று சொல்லாமல் சொல்லி நிற்கின்றார்.

இந்த அருள்மிகு விஸ்வப்பிரம்மாவுக்கு யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் ஒரு சிறு கோயில் கட்டி அவரது உருவச்சிலை விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு விசேட பூசை ஆராதனை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.



இந்த வையகத்தில் மானிடர்கள் மங்களகரமாகவும் சுபீட்சமாகவும் மகிழ்ச்சியாகவும் மகோன்னதமாகவும் வாழ்வதற்கு இந்த விஸ்வப்பிரம்மாவே திருவுளமிரங்கித் திருவருள் புரிகின்றார். மனு,மய,துவஷ்டி சிற்பி, விஸ்வக்ஞஆகியஐந்துஅம்சங்களும் உலக சிருஷ்டிகர்த்தராகிய ஆதி விஸ்வகர்மாவின் தோற்றங்களாகும்.

இந்த ஐந்துமே பஞ்ச கம்மாளர்களாகப் போற்றித் துதிக்கப்படுகின்றன என்பது ஆன்றோர் நம்பிக்கை. இந்தப் பஞ்சகம்மாளர்கள் செயற்படாவிட்டால் இந்த முழு உலகமும் இயங்கமாட்டாது.

இந்த விஸ்வப்பிரம்மாவின் தோற்றம் மிகவும் அழகானதும் கவர்ச்சியானதுமாகவிளங்குவதோடுஅருள் கொழிக்கும் ஆனந்த கோலாகலம் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது.

இவர் ஐந்து திருமுகங்களும் பத்துத்திருக்கரங்களையும் உடையவர். நினைத்த மாத்திரத்திலே நிர்மாணிக்கும் வல்லமை படைத்தவர். ஐந்தொழிலும் பூவுலகில் நிகழ ஐந்து முகங்களிலிருந்தும் ஐவர் உற்பத்தியாகினர்.

இரும்பு சம்பந்தமான கருவிகள் செய்பவர் மனு என்றும் மரம் சம்பந்தமான தொழில் செய்பவர் மய என்றும் செம்பு, பித்தளை சம்பந்தமான தொழில் செய்பவர் துவஷ்டா என்றும் கோயில் மற்றும் விக்கிரகங்கள் நிர்மாணிப்பவர் சிற்பி என்றும் தங்கம், பொன் என்பனவற்றில் ஆபரணங்கள் செய்பவர் விஸ்வக்ஞ என்றும் அழைக்கப்பட்டனர். அதாவது மனு-கொல்லர் என்றும் மய-தச்சர் என்றும் துவஷ்டா-கன்னார் என்றும் சிற்பி-ஸ்தபதி என் றும் ஆசாரி என்றும் விஸ்வக்ஞ-தட்டார் என்றும் கொள்ளப்பட்டனர்.

ஸ்ரீ காயத்திரிதேவியின் பதியான விஸ்வப் பிரம்மா அதாவது விஸ்வகர்மா தான் உலகத்தில் முதன்முதலாக வாஸ்து சாத்திரத்தை உருவாக்கியவர். இவருடைய மைந்தன் மயன்.

இத்தனை பெருமையும் கீர்த்தியும் கொண்ட விஸ்வப்பிரம்மாவை சைவமக்கள் ஒவ்வொருவரும் வணங்கி மகிழ வேண்டும். இன்றைய அவருடைய புனித புண்ணிய நல்லநாளில் வணங்கி வாழ்த்தி மகிழ்வதோடு சிந்தித்து வந்தித்துச் சேவித்து நின்று உய்தி பெறுவோமாக.

“கலாபூஷணம்”
இராசையா ஸ்ரீதரன்

# மழைக்கால நோய்கள்...

## தடுக்கும் வழிகள்

மழைக்காலம் ஆரம்பம் என்றாலே, சாதாரண சளி, காய்ச்சல் முதல் டெங்குக்காய்ச்சல், தொற்று நோய்கள் வரை படையெடுக்க ஆரம்பித்துவிடும். நோய்க்கிருமிகள் பரவ, மிகவும் சாதகமாக இருக்கும் குளிர்ச்சி யான மற்றும் ஈரப்பதமான சூழ்நிலைதான்



இதற்குக் காரணம்.

ஆங்காங்கே நீர் தேங்குவதால், கொசு மற்றும் ஈக்கள் மூலம் பரவும் பாதிப்புகளும் அதிகரித்து விடுகின்றன. மழைக்காலப் பாதிப்பில் இருந்து தப்புவதே ஒவ்வோர் ஆண்டும் மிகப்பெரிய சவால். இந்த நேரத்தில் வரக்கூடிய நோய்கள் என்னென்ன? அவை ஏன் வருகின்றன? அவற்றை எப்படித் தவிர்ப்பது? எனப் பார்க்கலாம்.

### சளி, இருமல்

பருவநிலையில் மாற்றம் ஏற்பட்டு, காற்றில் ஈரப்பதம் அதிகரிப்பதால், குளிர்ச்சியான சூழ்நிலை சிலருக்கு அலர்ஜியை உண்டாக்கும் சளி மற்றும் இருமல் பிரச்சினைகளால் அவதிப்படுவார்கள்.

இப் பிரச்சினை இன்ஃப்ளுவன்சா வைரஸ் காரணமாக வரும். இந்தப் பிரச்சினைகள் வராமல் இருக்க, வெளி இடங்களில் சுகாதாரமற்ற தண்ணீர் மற்றும் குளிர்பானங்கள் அருந்துவதையும் ஐஸ்கிறீம் சாப்பிடுவதையும் தவிர்க்க வேண்டும். அடிக்கடி ஆவி பிடிப்பது, மூச்சுப் பயிற்சியில் ஈடுபடுவதன் மூலம் சளி, இருமல் பிரச்சினைகளில் இருந்து தப்பிக்கலாம்.

## மருத்துவ உலகம்

Health Care — உங்கள் நலம் உங்கள் கைகளில்

### நுரையீரல் தொந்தரவுகள்

மழைக்காலம் மற்றும் குளிர் காலங்களில் உலர்ந்த மற்றும் குளிர்ந்த காற்றை மாறி மாறி சுவாசிக்கும்போது, நுரையீரல் மற்றும் தொண்டைப் பகுதிகளில் எரிச்சல் ஏற்படும். இதனால், தொண்டைக் கரகரப்பு வரலாம், நெஞ்சுச்சளி கட்டிக்கொள்ளும். ஆஸ்துமா, நாள்பட்ட மூச்சுக்குழாய் அடைப்பு நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூச்சுவிட மிகவும் சிரமமாக இருக்கும். நெற்றி மற்றும் கன்னங்களில் இருக்கும் சைனஸ் அறைகள், தொற்று காரணமாக பாதிக்கப்படும் வாய்ப்பு அதிகம். இதனால், சைனஸ் தலைவலி வரலாம்.

காலையில் படுக்கையில் இருந்து எழும்பும்போது, பயங்கரமாக தும்மல் வரும். கன்னங்களில் வலி இருக்கும். நுரையீரலில் ஏற்படும் வைரஸ், பக்றீரியா, பூஞ்சைத்தொற்று போன்றவற்றால், நிமோனியா காய்ச்சல் வரலாம். நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த குழந்தைகள், முதியவர்களுக்கு இந்த காய்ச்சல் வருவதற்கான வாய்ப்பு அதிகமாகக் காணப்படுகின்றது.

### கொசு

நீர் நிலைகள் இருக்கும் இடத்தில் கொசுக்கள் கட்டாயம் இருக்கும். அதுவும் மழைக்காலத்தில், எல்லா இடங்களிலும் தண்ணீர் தேங்கி கொசுக்கள் உற்பத்திக்கு உதவுகின்றன. இதில், முக்கியமானது மலேரியா காய்ச்சலை உருவாக்கும் கொசு.

‘அனோபீலஸ்’ என்ற பெண்



கொசுதான் மலேரியா காய்ச்சலுக்கு மிக முக்கிய காரணம். இந்தக் கொசு ஒருவரைக் கடித்து, மற்றொருவரைக் கடிக்கும்போது, அதன் எச்சில் வழியாக கிருமிகள் பரவி, மலேரியா காய்ச்சல் ஏற்படுகிறது. மலேரியா காய்ச்சலை ஏற்படுத்தும் ஒட்டுண்ணி, உடலுக்குள் சென்று, சாதகமான காலம் வரும் வரை காத்திருக்கும். நோய் எதிர்ப்பு சக்தி குறைந்ததும் காய்ச்சல் வரும்.

மலேரியாவுக்கு அடுத்தபடியாக நாட்டையே பயமுறுத்தும் கொசு, டெங்குவைப் பரப்பும் ‘ஏடிஸ் எஜிப்டி’. இந்தக் கொசு, அசுத்தமான நீர் நிலைகளில் வாழாது.

எனவே, சாக்கடைகளில் இந்தக் கொசு உற்பத்தி ஆவது இல்லை. வீட்டைச் சுற்றி இருக்கும் தேங்காய்ச் சிரட்டைகள், பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் தண்ணீர் பொட்டி ல்கள் போன்றவற்றில் தேங்கும் மழைத் தண்ணீரில் இருந்துதான் இந்தக் கொசுக்கள் உற்பத்தியாகின்றன. வீட்டைச் சுற்றி தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொண் டாலே, டெங்கு காய்ச்சலைத் தவிர்க்க முடியும்.

‘ப்ளேவி வைரஸ்’ என்ற வைரஸ் காரணமாக ஏற்படும் நோய், ‘யெல்லோ ஃபீவர்’ஆகும். இதுவும் ஏடிஸ் எஜிப்டி கொசு மூலம்தான் பரவுகிறது. இதன் அறிகுறிகளாக காய்ச்சல், தலைவலி, தசைகள் வலி மற்றும் வாந்தி எடுக்கும்போது இரத்தம் வருவது போன்றவை ஆகும்.

சிக்குன்குனியா காய்ச்சல் வருவதற்கும் ஏடிஸ் எஜிப்டி வகை கொசுதான் காரணமாக இருக்கிறது. சிக்குன்குனியா வந்தால், காய்ச்சல் மற்றும் உடலில் உள்ள மூட்டு இணைப்புகளில் கடுமையான வலி போன்றவை ஏற்படும். எலியின் சிறுநீர் வழியாக எலிக்காய்ச்சல் பரவுகிறது. இந்தக் கிருமித்தொற்று உள்ள சிறுநீர், மழை நீரில் கலக்கும்போது, அது மனிதர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.


இதனால், வெளியே சென்று வீடு திரும்பியதும், வெது வெதுப்பான நீரில் கால்களை நன்கு கழுவ வேண்டும். வீட்டைச் சுற்றி நடப்பதாக இருந்தாலும், காலணி அணியாமல் செல்லக் கூடாது.

### மெட்ராஸ் ஐ

‘மெட்ராஸ் ஐ’ என அழைக்கப்படும் கண்நோய் மழை சீசனில் அதிகமாகப் பரவும். கண்ணுக்குள் இருக்கும் ‘கஞ்சக்டைவா’ எனும் பகுதியை அடினோ வைரஸ் தாக்குவதால் கண் சிவந்துவிடும். இதனால், சில நேரங்களில் கண்ணீர் கசிந்துகொண்டே இருக்கும். அடினோ வைரஸ் எளிதில் மற்றவர்களுக்கும் பரவும். (தொடரும்)

# அதி நவீன எமத் ஏவுகணையை ஈரான் வெற்றிகரமாக சோதனை

## உலக நாடுகள் அதிர்ச்சியில்



**(டெக்ரான்)**

**ஈரான் அதிநவீன ஏவுகணைச் சோதனை ஒன்றை வெற்றிகரமாக நடத்தியுள்ளது. இது உலக நாடுகளுக்கு அதிர்ச்சியாக அமைந்துள்ளது. ஈரானின் இந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதுடன் அதிர்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளன.**

கடந்த ஜூலை மாதம் 14ஆம் திகதி, ஆஸ்திரியா நாட்டின் தலைநகரான வியன்னாவில், அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய வல்லரசு நாடுகளுடன் அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை ஈரான் செய்து கொண்டது.

இது வரலாற்று சிறப்புமிக்க ஒப்பந்தம் என வர்ணிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி, ஈரான் அணு ஆயுதங்கள் தயாரிக்காது என்றும், அதற்கு பதிலாக அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத்தடைகள் விலக்கிக் கொள்ளப்படும் என்றும் கூறப்பட்டது.

இந்த நிலையில் ஈரான் அதிரடியாக தொலைதூரத்திற்கு சென்று எதிரியின் இலக்கை மிகத்துல்லியமாக வீழ்த்தக்கூடிய ஏவுகணை சோதனை ஒன்றை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது. இந்த ஏவுகணை எமத் ஏவுகணை என்று அழைக்கப்படுகிறது.

750 கிலோ எடையுள்ள வெடி பொருட்களுடன்; 1,700 கி.மீ. தொலைவுக்கு பாய்ந்து சென்று, எதிரியின் இலக்கை இது துவம்சம் செய்து விடும். இந்த ஏவுகணைச் சோதனை வெற்றி அடைந்திருப்பதை டெக்ரானில் ஈரான் இராணுவ அமைச்சர் பிரிகேடியர் ஜெனரல் உசேன் டெக்கான் நேற்று முன்தினம் நிருபர்களிடம் அறிவித்தார். அப்போது அவர் கூறியதாவது,

ஈரான் பாதுகாப்பு துறையின் கீழ் செயற்படுகிற ஈரான் விண்வெளி தொழில் அமைப்பு உருவாக்கிய எமத் ஏவுகணை தரையில் இருந்து சென்று தரையில் உள்ள இலக்கை அழிக்கும். இந்த ஏவுகணை முழுக்க முழுக்க உள்நாட்டில் தயாரிக்கப்பட்டதாகும்.

மிகத்துல்லியமான வகையில் எதிரியின் இலக்கை நிர்மூலமாக்கும் தொழில்நுட்பத்துடன் கூடிய தொலைதூர ஏவுகணை ஒன்றை ஈரான் வெற்றிகரமாக சோதித்திருப்பது இதுவே முதல்முறை ஆகும்.

எங்கள் பாதுகாப்பு பலத்தை அதிகரிப்பது தொடர்பாகவோ, ஏவுகணை சோதனை நடத்துவது குறித்தோ யாரிடமும் அனுமதி கேட்கவில்லை. எங்கள் பாதுகாப்பு திட்டத்தின்கீழ்தான் நாங்கள் செயற்படுகிறோம். குறிப்பாக ஏவுகணை திட்டத்தின் கீழ் செயற்படுகிறோம் என தெரிவித்துள்ளார்.




ஈரானின் இந்த ஏவுகணை சோதனை உலக நாடுகளுக்கு அதிர்ச்சி அளித்துள்ளது. எமத் ஏவுகணை சோதனை குறித்து இஸ்ரேல் ஏவுகணை வல்லுனர் உஜி ருபின் கூறும்போது, "எமத் ஏவுகணை துல்லியம் என்ற வகையில பார்த்தால் மிகவும் நவீனமானது. நவீனவழிகாட்டும் கட்டுப்படுத்தும் அமைப்பினை இந்த ஏவுகணை மூக்கு நுனியில் கொண் டுள்ளது" என்றார்.

எமத் ஏவுகணை, எதிர்காலத் தில் ஈரானின் ஏவுகணைப்பிரிவில் சேர்க்கப்படும் என இராணுவ அமை ச்சர் உசேன் டெக்கான் கூறி இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (3-7)

## "ஒசாமாவின் மரணம் ஒரு துயரமான சம்பவம்" சர்ச்சையில் சிக்கியுள்ள பிரித்தானிய பிரதமர்



அல்-கொய்தா தீவிரவாதி தலைவரான ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டது ஒரு துயரமான சம்பவம் என பிரித்தானிய பிரதமர் பேசியதாக வெளியாகியுள்ள வீடியோ பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சில தினங்களுக்கு முன்னர் பிரித்தானிய எதிர்க்கட்சி தலைவரான ஜெருமி கொர்பின் ஒரு பரபரப்பான தகவலை வெளியிட்டிருந்தார்.

அதில், அல்-கொயதா தீவிரவாத தலைவரான ஒசாமா பின்லேடனை உயிருடன் கைது செய்வதற்கான முயற்சிகள் எதுவும் நடைபெற்றதாக தெரியவில்லை.

அவரை விசாரணைக்கு உட்படுத்தும் நடவடிக்கையில உலக நாடுகள் ஈடுபடவில்லை. மாறாக, ஒசாமா பின்லேடனை உடனடியாக கொன்று விடும் முயறசி மட்டுமே மேற்கொள்ளப்பட்டது.

எனவே, ஒசாமா பின்லேடனை கைது செய்து விசாரணை நடத்தாதது ஒரு துயரமான சம்பவம் என ஜெருமி கொர்பின் கருத்து தெரிவித்திருந் தார்.

ஆனால், இந்த கருத்தினை தவறாக புரிந்துகொண்ட பிரதமரான டேவிட் கமரூன் தனது கன்சர்வேடிவ் கட்சி மாநாட்டில் வேறுவிதமாக பேசியுள்ளார்.

அதாவது, எதிர்க்கட்சி தலைவரான ஜெருமி கொர்பினிற்கு ஒசாமா பின்லேடன் மீது இரக்கம் ஏற்பட்டுள்ளது. அவரது மரணத்திற்கு வேதனைப்படும் இவர் எப்படி எதிர்க்கட்சி தலைவராக இருக்க முடியும்? ஒரு தீவிரவாத தலைவன் கொல்லப்பட்டதற்கு இரக்கம் காட்டும் ஜெருமி கொர்பின் பிரித்தானிய நாட்டின் ஒட்டு மொத்த தேசிய பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக இருக்கிறார் என கண்டனம் தெரிவித்து பேசியுள்ளார்.

பிரதமரின் இந்த உரையில், 'ஒசாமா பின்லேடனின் மரணம் ஒரு துயரமான சம்பவம்' என்ற பகுதியை மட்டும் பிரித்தெடுத்த ஜெருமி கொர்பினின் ஆதரவாளர்கள், அதனை இணையத்தளங்களில் பரப்பி வருகின்றனர்.

'ஒசாமா பின்லேடனின் மரணத்திற்கு பிரித்தானிய பிரதமர் வருத்தம் தெரிவித்துள்ளது தேசிய பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாகும்' என கருத்து தெரிவித்து அந்த வீடியோவை சமூக வலைத்தளங்களில் பரப்பி வருவது பிரதமர் கமரூனிற்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. (3-7)

## சாட்டில் குண்டுவெடிப்பு 41 பேர் உயிரிழப்பு

சாட் நாட்டில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற 3 குண்டு வெடிப்பு சம்பவங்களில் குறைந்தது 41 பேர் பலியாகியுள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் கடந்த ஞாயிற்றுக் கிழமை தெரிவித்துள்ளது.

போகோஹறாம் தீவிரவாதிகளால் நடத்தப்பட்டதாக நம்பப்படும் மேற்படி தாக்குதல்களில் மேலும் 48 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முதலாவது குண்டு வெடிப்பானது பகா சோலா பிராந்தியத்திலுள்ள மீன் சந்தையொன்றில் இடம் பெற்றுள்ளது. அடுத்த இரு குண்டு வெடிப்புகள் அந்தப் பிராந்தியத்துக்கு வெளியிலுள்ள அகதிகள் முகாமொன்றில் இடம் பெற்றுள்ளன. (3-7)

## இந்தோ. ஹெலிகொப்டர் 5 பேருடன் நேற்று மாயம்



இந்தோனேசியாவில் விமானங்கள், ஹெலிகொப்டர்கள் அடிக்கடி மாயமாகி வருவது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், 5 பேருடன் சென்ற இந்தோனேசிய ஹெலிகொப்டர் ஒன்று சுமாத்திராவில் மாயமாகி உள்ளது. ஒற்றை என்ஜின் கொண்ட யூரோகாப்டர் ஈ.சி.-130 என்ற அந்த ஹெலிகொப்டர் பி.டி.பெனர்பன்கன் அங்காசா நிறுவனத்திற்கு சொந்தமானது. நேற்று மதியம் 12.20 மணியள வில் சுமாத்திரா சமோசர் தீவிலிருந்து மெடான்சிட்டி குவாலா நாமு விமான நிலையத்திற்கு சென்று கொண்டி ருந்த அந்த ஹெலிகொப்டர் பறக்க தொடங்கிய ஒரு மணி நேரத்திற்கு பின் திடீரென விமான கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது. அந்த ஹெலிகொப்டரில் ஒரு விமானி, ஒரு என்ஜினியர், 3 பயணிகளும் இருந்தனர். குவாலா நாமுவிமான நிலையத்தில் தரையிறங்க 10 நிமிடங்களே இருந்த நிலையில் மாயமாகியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஹெலி கொப்டரை தேடும் முயற்சியில் மீட்புபடையினர் ஈடுபட்டு வருகின்றனர்

இந்தோனேசியாவில் தொடர்ந்து விமான விபத்துகள் நிகழ்ந்து வருகின்றன. கடந்த டிசெம்பர் மாதம் 162 பேருடன் சென்ற ஏர் ஏசியா விமானம் மாயமானது. இந்த மாத தொடக்கத்தில் சுலா வெசி தீவில் குட்டிரக பயணிகள் விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் 10 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

## 6000 கைதிகளை விடுதலை செய்கிறது அமெ.

(வோஷிங்டன்)

இந்தமாத இறுதியில் இருந்து 6000 சிறைக்கைதிகளை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக அமெரிக்க நீதித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக 1980கள் மற்றும் 1990 கள் காலப்பகுதியில் போதைவஸ்து குற்றங்கள் தொடர்பாக கைதான போதைவஸ்து விநியோகஸ்தர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டிருந்தன.

இவர்களையே இவ்வாறு விடுதலை செய்வதற்கான முயற்சியை அமெரிக்க நீதித்துறை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

அமெரிக்க வரலாற்றில் இந்த எண்ணிக்கையில் கைதிகளை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)


பிரபல திரைப்பட நடிகை மனோரமாவின் இறுதி ஊர்வலம் நேற்று முன்தினம் நடைபெற்ற போது...

# ஐ.நா.பாதுகாப்பு சபையில் இந்தியா ஜோர்தான் மன்னர் பூரண ஆதரவு

(அம்மான்)

**ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா நிரந்தர உறுப்பினராவதற்கு ஜோர்தான் மன்னர் தனது ஆதரவை இந்தியாவுக்கு வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.**

ஜோர்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, வர்த்தகம் மற்றும் தொழில் முதலீடுகள் குறித்து அந்த நாட்டு மன்னருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.




ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, மேற்கு ஆசிய நாடுகளான ஜோர்தான், பாலஸ்தீனம், இஸ்ரேல் நாடுகளுக்கு 6 நாள் சுற்றுப் பயணமாக நேற்று முன்தினம் புறப்பட்டு சென்றார். இதில் முதல்கட்டமாக ஜோர்தான் சென்றடைந்த அவருக்கு, தலைநகர் அம்மானில் அமைந்துள்ள உசேனியா மாளிகையில் மன்னர் 2 ஆம் அப்துல்லா சிறப்பான வரவேற்பு அளித்தார்.

பின்னர் இரு தரப்பு உறவுகள் குறித்து இரு தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்தினர். குறிப்பாக வர்த்தகம், முதலீடு மற்றும் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து விரிவாக பேசசுவார்த்தை நடைபெற்றுள்ளது.

இந்த பேச்சுவார்த்தையின் போது, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா நிரந்தர உறுப்பினர் ஆவதற்கு தங்கள் ஆதரவை ஜோர்தான் வழங்கியுள்ளது. '


மேலும் ஜோர்தானில் இந்திய தொழிலா ளர்கள் சந்தித்து வரும் பிரச்சி னைகளை சமாளிக்க சிறப்பு நட வடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மன்னர் 2 ஆம் அப்துல்லா உறுதியளித்துள்ளார்.

ஜோர்தானில் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு பிரணாப் முகர்ஜி நேற்று பாலஸ்தீனம் புறப்பட்டு சென்றார். (3-7)




## 2 ஆயிரம் ஆண்டு பழைமையான புத்தர் சிலையை இந்தியாவிடம் திருப்பியளிக்கும் அவுஸ்திரேலியா

ஜேர்மனி அரசாங்கம் பழைமையான துர்க்கா சிலையை இந்தியாவுக்கு திருப்பி அளிக்க முன் வந்த நிலையில், 2 ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த புத்தர் சிலை ஒன்றை இந்தியாவிடம் திருப்பி அளிக்க அவுஸ்திரேலிய நாட்டை சேர்ந்த கலைக்கூடம் ஒன்று ஒப்புதல் வழங்கியுள்ளது. இது பற்றி இந்திய தொல்லியல் ஆய்வு அமைப்பின் அதிகாரிகள் கூறும்போது, உத்தர பிரதேசத்தின் மதுரா நகரை சேர்ந் தது என கண்டறியப்பட்டுள்ள அமர் ந்த நிலையில் உள்ள புத்தர் சிலை ஒன்று அவுஸ்தி ரேலியாவின் கான்பெ ர்ரா நகரில் உளள தேசிய கலைக கூடம் வசமுள ளது என்று தெரிவித்தனர்.



இது பற்றி இந்திய தொல்லியல் ஆய்வு அமைப்பின் அதிகாரிகள் செய்தியாளர்களிடம் கூறும்போது, மத்திய கலாசார அமைச்சகத்தை கடந்த வாரம் தொடர்பு கொண்ட அவுஸ்திரேலிய கலைக்கூடம், சிலையை திரும்ப ஒப்படைக்க உள்ளதாக தெரிவித்துள்ளது. இந்த சிற்பம் மதுரா பகுதியில் தனித்துவம் வாய்ந்தது எனவும் கூறியுள்ளனர்.

கான்பெர்ரா நகரை சேர்ந்த கலைக்கூடம் ஒப்புதல் வழங்கிய நிலையில், முதலாம் நூற்றாண்டை சேர்ந்தது என கண்டறியப்பட்டுள்ள பழம்பொருள் சேகரிப்பு வகையை சேர்ந்த சிலையை ஆய்வு செய்வதற்காக அலுவலக குழு ஒன்றை அனுப்பி வைக்கும்படி மத்திய கலாசார துறையிடம் இந்திய தொல்லியல் ஆய்வு அமைப்பு கோரியுள்ளது. அந்த சிலையை திருப்பி அளிக்க அவுஸ்திரேலிய கலைக்கூடம் ஒப்புதல் அளித்துள்ளது. அதனை பற்றி உண்மை தன்மையை அறிவது எங்களுக்கு தேவையான ஒன்று என கூறியுள்ள அவர்கள், பொருளை திரும்ப பெறும்பொழுது மேற்கொள்ள வேண்டிய முறைகளில் இதுவும் ஒன்று என கூறியுள்ளனர்.

சிலை காணாமற் போனது குறித்து இந்தியாவில் வழக்கு எதுவும் பதிவு செய்யப்பட்டு உள்ளனவா? என கேட்கப்பட்டதற்கு, பொலிஸில் புகார் குறித்த தகவல் எதுவும் தற்பொழுது வரை இல்லை என பதிலளித்துள்ளனர். எனினும், சிலை வடிவமைப்பு, பல்வேறு நூற்றாண்டுகளுக்கு முன்பு ஒரு முக்கிய புத்த மையமாக இருந்த மதுராவுடன் தொடர்பு கொண்டுள்ளது என அவரகள் கூறியுள்ளனர். அதனுடன், உத்தர பிரதேசத்தில் உள்ள மாநில தொல்லியல் மியூசியம் ஒன்று இதே போன்ற புத்தர் சிலைகளை கொண்டுள்ளது. அவை, இந்த சிலை மதுராவுடன் தொடர்புடையது என்பதற்கான அடையாளத்தை காட்டுகிறது என அவர்கள் கூறியுள்ளனர்.

இந்தியாவில் இருந்து இந்த சிலையை இந்திய கலைப்பொருள் விற்பனையாளர் சுபாஷ் கபூர் இந்தியாவில் இருந்து கடத்தி வெளிநாடு கொணடு சென்றிருக்க கூடும் என இந்திய தொல்லியல் ஆய்வு அமைப்பு சந்தேகம் அடைந்துள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன. (3-7)

## திருப்பதி வனப்பகுதியில் 89 தமிழர்கள் கைது

சேஷாசலம் வனப்பகுதிக்கு செம்மரங்களை வெட்ட சென்றதாக திருவண்ணாமலை, சேலம், தர்மபுரி மாவட்டங்களை சேர்ந்த 89 தமிழக கூலித்தொழிலாளிகளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சித்தூரில் இருந்து கர்நாடக மாநில அரசு போக்குவரத்துக்கழகத்துக்கு சொந்தமான பேருந்து ஒனறு நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் திருப்பதியை அடுத்த பாக்ரா பேட்டை சேஷாசலம் வனப் பகுதியை நோக்கி சென்று கொண்டிருந்தது. அந்த பேருந்து திருப்பதியை அடுத்த நேந்தர குண்டா என்ற பகுதியில் சென்று கொண்டிருந்த போது திருப்பதி செம்மர கடத்தல் தடுப்புப்பிரிவு பொலிஸார் பேருந்தை நிறுத்தி சோதனை செய்தனர்.

அப்போது பேருந்தில் பயணம் செய்த 89 பேர். சந்தேகப்படும் படியாக அமர்ந்திருந்தனர். அவர்களிடம் மூட்டை முடிச்சுகள் இருந்தன. அதில் அவர்களுடைய துணி மணிகள், அரிசி, பருப்பு, ஏராளமான தண்ணீர் போத்தல்கள், அரிவாள், ரம்பம் ஆகியவை இருந்தன.

அதைத்தொடர்ந்து பொலிஸார் அவர்களை பேருந்தில் இருந்து கீழே இறக்கி விசாரணை நடத்தினர். அதில் 89 பேரும் சேலம், தர்மபுரி, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த கூலித்தொழிலாளிகள் என்பது தெரிய வந்தது. அவர்கள் அனைவரும் வேலூர் வழியாக சித்தூர் வந்துள்ளனர். சித்தூரில் இருந்து கர்நாடக மாநில அரசு பேருந்து மூலம் பாக்ராப்பேட்டை சேஷாசலம் வனப்பகுதிக்கு செம்மரங்களை வெட்டி கடத்தும் வேலைக்காக சென்றது தெரியவந்தது. இதையடுத்து பிடிபட்ட 89 பேரும் பாக்ராப்பேட்டை பொலிஸில் ஒப்படைகப்பட்டனர். இது குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து 89 பேரை கைது செய்தனர்.

மேலும் அவர்களிடம் செம்மரங்களை வெட்டுவதற்கு தேவையான அரிவாள், கத்தி, கோடரி, ரம்பம் உள்ளிட்ட ஆயுதங்களையும், அரிசி, பருப்பு, மண்ணெண்ணெய, ஸ்டவ் அடுப்பு, தண்ணீர் போத்தல்கள் ஆகியவற்றையும் பறிமுதல் செய்துள்ளனர். (3-7)

# புலிகள் சரணடைவதாகக் கூறி தாக்குதல் நடத்த திட்டமிட்டனர்

## இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன? கோத்தபாய ராஜபக்ஷ விளக்கம்



சர்வதேச சமூகத்தின் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகள் சரணடைய எத்தனித்தனர் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சரணடைதல் விவகாரம் தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் எவ்வித நேரடி இணக்கப்பாடுகளும் எட்டப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் சரணடைந்த போது, கொலை செய்யப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. குறிப்பாக வெள்ளைக கொடி ஏந்தி வந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பிரதானமாக குற்றம் சுமத்தப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இலங்கைக்கான நோர்வே தூதுவராக கடமையாற்றிய டோர் ஹாட்ரெமிடம் இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தப்பட முடியும் என அவர் தெரிவித்தார்.

2007 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையில் ஹாட்ரெம் இலங்கைக்கான நோர்வே தூதுவராக கடமையாற்றியிருந்தார்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி ஹாட்ரெம், பௌத்தலோக்க மாவத்தையில் அமைந்துள்ள தமது உத்தியோகபூர்வ இல்லத்திற்கு வந்ததாகவும், புலிகள் சரணடைய விரும்புவதாக கூறியதாகவும் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

"தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தம்மைத் தொடர்பு கொண்டு, சரணடைய விரும்புவதாக கூறினார்" என ஹாட்ரெம் கூறியதாக குறிப்பிட்டுள்ளார்.

புலித்தேவனும் சில உறுப்பினர்களும் அவர்களது குடும்பங்களும் சரணடைய விரும்புவதாக புலித்தேவன் கூறினார் என்ற தகவலை ஹட்ரெம் என்னிடம் பரிமாறிக் கொண்டார் என கோத்தபாய குறிப்பிட்டுள்ளார்.

புலித்தேவனுடன், ஹாட்ரெம் தொலைபேசி ஊடாக தொடர்புகளைப் பேணி வந்தார் என அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், சரணடைவதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்து கொடுக்க முடியவில்லை. யார் சரணடைய விரும்புகின்றார்கள் என்பது பற்றிய ஆள் அடையாள விபரங்களை புலித்தேவனைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள ஹாட்ரெமினால் முடியாமல் போய்விட்டது என கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஏதேனும் ஓர் நீதிமன்றப் பொறிமுறைமை அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டால் அதன் முதன்மை நோக்கம் அனைத்து குற்றச்சாட்டுக்களையும் சரியான முறையில் விசாரணை செய்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆள் அடையாளத்தை உறுதி செய்து சரணடையச் செய்ய வேண்டும் என்பது தம்முடைய தீர்மானம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலித்தேவனை தொடர்பு கொள்ள முடியவில்லை என ஹட்ரெம் குறுஞ் செய்தியொன்றை தமக்கு அனுப்பி வைத்திருந்தார் எனவும், இதனால் சரணடையும் முயற்சி தோல்வியடைந்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சில மணித்தியாலங்களின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக இறுதி முயற்சியை மேற்கொண்டனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகள் சரணடைவதாகக் கூறி எம்மீது இறுதித் தாக்குதல் ஒன்றை நடத்த திட்டமிட்டிருந்தனர் என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியமான உறுப்பினர்கள் சரணடைய முயற்சித்த விவகாரம் தொடர்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அப்போதைய இலங்கைக் கிளைத் தலைவர் போல் கெஸ்டெல்லாவிடமும் தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

சரணடைவதற்காக, முன்னரங்கப் பகுதிகளின் பாதுகாப்பு கட்டமைப்புக்களை தளர்த்துவோம் என தமிழீழ விடுதலைப் புலிகள் கருதியதாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இலங்கைத் தூதரகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட கேபிள் தகவல்களின் அடிப்படையில் விக்கிலீக்ஸும் இந்த விடயம் பற்றிய தகவல்களை வெளியிட்டிருந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலிகள் சரணடைவது தொடர்பில் இலங்கையுடன் தொடர்புகளைப் பேணிய வெளிநாட்டு தரப்புக்கள் பற்றிய அனைத்து விபரங்களை விக்கிலீக்ஸ் வெளியிட்டிருந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பில் ஹாட்ரெமிடம் விபரங்களை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை யுத்தம் தொடர்பிலான பல்வேறு தகவல்களை விக்கிலீக்ஸ் வெளியிட்டிருந்தது எனவும், விக்கிலீக்ஸ் தகவல்களை விசாரணை செய்யும் நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளுமா என்பது கேள்விக்குறியே என அவர் தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி, ஹாட்ரெம், பசில் ராஜபக்ஷவிற்கு குறிப்பு ஒன்றை அனுப்பி வைத்திருந்தார் எனவும், அதில் வன்னி கிழக்கு களமுனையில் பொதுமக்கள் சிக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களை விடுவிக்காது தடுத்து வைத்திருப்பதாகவும் ஹாட்ரெம், பசிலுக்கு அறிவித்திருந்தார் என தெரிவித்துள்ளார்.

புலிகள், சிக்கியுள்ள பொதுமக்களை தற்போதைக்கு விடுவிப்பார்கள் என்ற நம்பிக்கையில்லை எனவும் அது வருத்தமளிப்பதாகவும் ஹாட்ரெம் கையொப்பமிட்டு பசிலுக்கு அனுப்பிய குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களை புலிகள் பணயமாக வைத்திருந்த போது யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தி அரசாங்கத்துடன் தொடர்புகளைப் பேணிய சர்வதேச சமூகத்தின் எவரும், பொதுமக்களை விடுவிப்பதற்காக குரல் கொடுக்கவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பொதுமக்களை விடுதலை செய்யுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் எந்தவொரு சர்வதேச தரப்பும் கோரவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில், யுத்த காலத்தில் இலங்கையில் கடமையாற்றிய ஐக்கிய நாடுகள் அமைப்பு அதிகாரிகள் சாட்சியமளிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களை விடுதலை செய்ய முயற்சித்த தமிழ் பேசும் ஐக்கிய நாடுகள் உத்தியோகத்தர்களை புலிகள் சிறைபிடித்தனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது ஐ.நா பணியாளர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனப் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை யுத்த வலயத்திலிருந்து மீட்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் முயற்சியை புலிகள் முறியடித்திருந்தர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டவர்களை அழைத்து விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும், ஆள் அடையாளத்தை மூடி மறைத்து விசாரணை நடத்தப்படக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது தாம் ஆட்சி அதிகாரத்தில் இல்லை என்பதனால், அச்சுறுத்தல் என்ற காரணியை முன்வைத்து தப்பித்துக்கொள்ளாது, குற்றம் சுமத்துபவர்கள் யார் என்பதனை தெரியப்படுத்த வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

புலம்பெயர் தமிழர்கள் குற்றச்சாட்டுக்களை நேரடியாக சுமத்தி அவற்றை முடிந்தால் நிரூபிக்கட்டும் என அவர் சவால் விடுத்துள்ளார்.

அரசாங்கத்திற்கு சார்பான எந்தவொரு விடயங்களையும் ஐக்கிய நாடுகள் விசாரணை அறிக்கை கவனத்திற்கொள்ளவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சரணடைந்த விடுதலைப் புலிகளை கொலை செய்யவில்லை என யுத்த காலத்தில் கடமையாற்றிய அமெரிக்கத் தூதுரக பாதுகாப்பு அதிகாரி லெப்டினன் கேணல் லோரன்ஸ் ஸ்மித் வெளியிட்ட அறிக்கை கண்டுகொள்ளப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

திட்டமிட்ட வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் சரணடைய முயற்சிக்கவில்லை என லோரன்ஸ் கூறியிருந்தார் எனவும், 2011 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்த அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் விசாரணை அறிக்கையோ அல்லது தீர்மானமோ லோரன்ஸின் கருத்துக்கள் பற்றி கவனம் செலுத்த தயாரில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமாதான முயற்சிகள் தோல்வியடைந்ததனைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்தார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தில் உயிரிழந்தவர்கள் பற்றிய புள்ளி விபரங்கள் தொடாபில் ஒவ்வொரு தரப்பினரும் ஒவ்வொரு விதமான எண்ணிக்கை விபரங்களை வெளியிட்டிருந்தனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானிய பாராளுமன்றில் பொதுமக்களும், போராளிகளுமாக ஒரு இலட்சம் பேர் உயிரிழந்தாகவும், சனல் 4 மற்றும் தாருஸ்மான் அறிக்கையில் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும, சர்வதேச மன்னிப்புச் சபை 10 ஆயிரம பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அனுப்பி வைக்கப்பட்ட இரகசிய ஆவணமொன்றில் உயிரிழந்தவர் எண்ணிக்கை 7700 என குறிப்பிட்டிருந்தது எனவும் இவ்வாறு மாறுபட்ட உயிர் இழப்பு விபரங்களே வெளியிடப்பட்டன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் உயிர்களை பாதுகாக்க வேண்டுமென கருதியிருக்காவிட்டால் படையினர் துரித கதியில் யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வந்திருப்பர் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கூறியதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டிருந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நான்காம் கட்ட ஈழப்போரில் 6000 உத்தியோகத்தர்களும் படையினரும் கொல்லப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

எதிர்கால விசாரணைகளின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் உயிரிழப்பு விபரங்களை உறுதி செய்து கொள்ள முடியும் என நம்புவதாக கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் விசாரணை அறிக்கை மற்றும் தீரமானம் தொடர்பிலான நம்பகத்தன்மை தமக்குக் கிடையாது என கோத்தபாய ராஜபக்ஷ கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு யுத்தக் குற்றச் செயல் விசாரணை தொடர்பில் அளித்த பிரத்தியேக செவ்வியில் தெரிவித்துள்ளார்.

குளோபல் தமிழ்

# இலங்கையை இப்போதாவது இந்தியா புரிந்துகொள்ளுமா?

## கலைஞர் கருணாநிதி கேள்வி



(சென்னை)

**இலங்கையை இப்போதாவது இந்தியா புரிநது கொள்ளுமா? என தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழ்நாட்டிலிருந்து தொழிலுக்குச் செல்லும் மீனவர்களை இலங்கை கடற்படையினரும் சிங்கள மீனவர்களும் மிரட்டி, தாக்கி, கைது செய்து கொண்டு போய்ச் சிறையிலே அடைப்பதும், மீன்பிடிச் சாதனங்களையும், படகுகளையும் சேதப்படுத்துவதும் உடனடியாக மத்திய அரசுக்கு தமிழக முதலமைச்சர் எப்போதும் போல் கடிதம் எழுதுகிறாரோ இல்லையோ, பத்திரிகைகளில் அதைப் பெரிதாகச் செய்தி வெளியிடச் செய்து கொள்வதும் அதன் வாயிலாக மீனவர் பிரச்சினை தீர்ந்து விட்டதாக வெறும் கற்பனை செய்து கொள்வதும் தான் வழக்கமாக நடைபெறுகிறதே தவிர தமிழக முதலமைச்சரின் கடிதங்களைப் பற்றி இந்திய அரசும், இலங்கை அரசும் சிறிதேனும் கண்டு கொள்வதாகவோ கவலைப்படுவதாகவோ தெரியவில்லை.

மாறாக, இலங்கை அரசே அவர்கள் விரும்பும் போது, மீனவர்களை விடுதலை செய்து அனுப்புகிறார்களே தவிர, கைது செய்த மீனவர்களை இந்திய அரசின் வேண்டுகோளை ஏற்று விடுவிப்பதில்லை.

அண்மையில் கூட தமிழ்நாட்டைச் சேர்ந்த 19 மீனவர்களை எல்லை தாண்டியதாக இலங்கை கடற்படையினர் சிறை பிடித்துச் சென்று, யாழ்ப்பாணம் சிறையிலே அடைத்து வைத்துள்ளார்கள்.

இலங்கைக் கடற்பகுதியில் தமிழக மீனவர்கள் ஆண்டுக்கு 65 நாட்கள் மீன் பிடிக்க அனுமதிக்க வேண்டும், எல்லை தாண்டும் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தக் கூடாது. என்ற இந்திய அரசின் பரிந்துரைகளை இலங்கை அரசு நிராகரித்து விட்டதாக நாளேடுகளில் செய்தி வந்துள்ளது.

இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர், சம்பந்தன் அங்கே பேசும் போது இந்திய இலங்கை மீனவர்கள் எல்லை தாண்டும் பிரச்சினை இரண்டு நாட்டு மக்களிடையே பகையை ஏற்படுத்துகிறது.

இதனைத் தீர்க்க இரண்டு நாட்டு அரசுகளும் இதற்கு முன் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி அடைந்து விட்டன.

இந்தப் பிரச்சினைக்கு ஒரே தீர்வு இலங்கை கடற்படை, இந்திய கடற்படை, மற்றும் கடலோரப் பாதுகாப்பு படையுடன் இணைந்து ரோந்து பணியிலே ஈடுபட வேண்டும். இதன் மூலம் தமிழக மீனவர்கள் இலங்கை கடற் பகுதிக்குள் நுழைவதைத் தடுக்க முடியும். மேலும் இரண்டு நாட்டு மீனவர்களும் ஆழ்கடல் பகுதியில் மீன் பிடிக்கும் வகையில் தங்கள் படகுகளை மேம்படுத்திக் கொள்ள அரசு உதவ வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# தாஜுடீனின் மரணம் தொடர்பில் மௌனம் சாதிக்கின்றது சி.ஐ.டி.

றகர் விளையாட்டு அணியின் முன்னாள் தலைவரான வசிம் தாஜுடீனின் கொலை தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் பற்றிய தகவல்களை வெளியிட குற்ற விசாரணைத் திணைக்களம் ( சி.ஐ.டி.) மறுப்புத் தெரிவித்து வருகின்றது.

தாஜுடீனின் கருகிய உடல் கடந்த 2012 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி கொழும்பு - நாரஹேன்பிட்டி, கிருல வீதியி லுள்ள சாலிக்கா மைதானத்தில் நின்ற அவரது காருக்குள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

அது திட்டமிட்ட ஒரு கொலை எனத் தெரிந்தும் நாரஹேன்பிட்டி பொலிஸார் அது தொடர்பில் பூரண விசாரணையை மேற்கொள்ளவில்லை.மகிந்த ராஜபக்ஷ அரசில் ஏதோவொரு காரணத்துக்காக மூடி மறைக்கப்பட்ட இந்தச் சம்பவம் 2015 இல் அந்த அரசின் தோல்வியையடுத்து கிளறி எடுக்கப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது.வசிம் தாஜுடீனின் ஜனாஸாவும் நீதிமன்றதின் உத்தரவுக்கமைய தோண்டி எடுக்கப்பட்டு பரிசோதனையின் பின்னர் மீண்டும் புதைக்கப்பட்டது.

கடந்த செப்டெம்பர் மாதம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது தாஜுடீனின் தொலைபேசியின் பதிவுகள் தொடர்பில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு தயாரித்திருந்த அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

எனினும், அன்று முதல் இன்று வரை அந்தத் தொலைபேசியிலிருந்த பதிவுகள் தொடர்பான விபரங்களையோ அது தொடர்பில் மேற் கொள்ளப்பட்ட விசாரணைகளின் முடிவுகளையோ குற்ற விசாரணைத்திணைக்களம் வெளியிட மறுத்து வருகின்றது.

எனினும், இவ்வழக்கு இம்மாதம் 22 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படும் வரை தொலைபேசிப் பதிவுகள் பற்றிய விபரங்கள் வெளியிடப்பட மாட்டாதென குற்றப் புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் மேலும் தெரிவித் துள்ளார். (இ-7-10)

### ஊடகவியலாளர்களுக்கான

# விசேட நலன்புரித் திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசு திட்டம்

ஊடகவியலாளர்களுக்கான விசேட நலன்புரித் திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார். ஊடகவியலாளர்களுக்கான வீடமைப்புத் திட்டம் தொடர்பில் அமைச்சரவைக்குத் தாம் சமர்ப்பித்த பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாகக் குறிப்பிட்ட அமைச்சர் இறக்குமதித் தீர்வையுடனான மோட்டார் சைக்கிள் வழ்ங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றும் தெரிவித்தார்.

இலங்கை பத்திரிகைப் பேரவையின் 60வது நிறைவு விழா கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடைபெற்ற போது அங்கு உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆட்சிக்காலத்தில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் எதிர்கொள்ள நேர்ந்த அசௌகரியங்கள் அனைவரும் அறிந்ததே. கடந்த ஜனவரி 8ம் திகதி இந்த நாட்டை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுப்பேற்ற போது நாட்டில் ஊடக சுதந்திரம் பெரும் சவாலை எதிர்நோக்கியிருந்தது என்பதை சகலரும் அறிவர்.

ஊடக சுதந்திரம் அதள பாதாளத்தில் தள்ளப்பட்டு கறுப்புக்கறை படிந்ததாகக் காணப்பட்ட யுகம் அது. தற்போது ஊடகங்களோடு எப்போதும் சுமுகமான தொடர்பைக் கொண்டிருந்த ஜனாதிபதி நாட்டின் தலைவராக உள்ளார்.இப்போது வெள்ளை வான் விவகாரம் நாட்டில் கிடையாது. ஊடகவியலாளர் தாக்கப்படுவதில்லை. அல்லது படுகொலை செய்யப்படுவதில்லை.

அச்சுறுத்தல் தாங்காமல் ஊடகவியலாளர்கள் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றுள்ளனர் என்ற செய்திக்கும் இடமில்லை. பேனையை சுதந்திரமாக உபயோகிக்கும் சூழல் நாட்டில் நிலவுவதால் வெளிநாடுகளிலிருந்தவர்கள் மீள நாடு திரும்புவதையே காண முடிகிறது. ஊடக அமைச்சரிடமிருந்து தொலைபேசி மூலம் ஏதாவது அழுத்தம் கொடுக்கப்படுவதாகக் கூட அறிய முடியவில்லை. அத்தகைய சூழல் நாட்டில் நிலவுகிறது.நாம் ஊடகவியலாளர்களின் நலன்புரித் திட்டங்கள் பலதை நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளோம். ஊடகவியலாளரின் கனவுகளில் வீடு முக்கியமானது. சில ஊடகவியலாளர்கள் விடுதிகளிலும், விகாரைகளிலும் தங்கியிருந்து பணிபுரிவதைக் காண முடிகிறது. அவர்களுக்கு வீடுகளை பெற்றுக்கொடுக்கும் திட்டம் தொடர்பில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

அமைச்சரவையில் இது தொடர்பான பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அடுத்த கட்ட நடவடிக்கைகளை நாம் ஆரம்பிக்கவுள்ளோம். அதேபோன்று இறக்குமதி வரியற்ற ரீதியில் மோட்டார் சைக்கிள்களை வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## சாபங்களை வரங்களாக்குவோம்!

எல்லாமே நமக்கு சாதகமாக அமைந்து விட்டால் வாழ்க்கையில் சிக்கல்கள் இல்லைதான். ஆனால் பாதகமான நிகழ்ச்சிகள் ஏற்படாமலேயே வாழ்க்கை நடத்த யாரால் முடிகிறது? அதை விதி என்று விபரிக்கின்றது நமது சமயம். ஆனால் அந்தப் பாதகமான ஒவ்வொரு நிகழ்விலும் நமக்கு சாதகமான ஏதோ ஒன்று இருக்கிறது என்று உறுதியாக எடுத்துக் கொண்டால் இருக்கத்தான் செய்கிறது.

குந்தியின் மகனாய் பிறந்தாலும் வெளி உலகிற்கு விளங்காமல் பிறந்தவர் கர்ணன். பெற்ற அன்றே பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டாள் அவள். கிழட்டுத் தேரோட்டியின் வளர்ப்புப் பிள்ளையானான் அவன். தேரோட்டக் கற்றுக் கொண்டு அரசனுக்கு ஊழியம் செய்யச் சொன்னான் கிழட்டுத் தந்தை. மறுதலித்தான் மகன். வில்வித்தை கற்று வேந்தன் நிலை பெறுவேன். அரசனை எனக்குத் தேரோட்ட வைப்பேனேயொழிய நான் தேரோட்டியாக மாட்டேன் என்பது கர்ணனின் கனவு.

எந்தக் குருவிடத்தில் வித்தை கற்பது? குலம் கோத்திரம் தெரியாத ஒருவனுக்கு அரச வித்தைகளை அப்பியசிக்க ஆள் கிடைக்கவில்லை. ராஜ அம்சம் இருந்தாலும் ராஜ வம்சம் இல்லையென்றால் வில்வித்தை கற்க முடியாத ஜாதிக்காலம் அந்தக் காலம்.

அவனது நல்லநேரம் பரசுராமனின் பார்வையில்பட்டான். அவர் அதிசய அந்தணர். ஷத்திரியனுக்கே உரிய வில்வித்தையை ஷத்திரியனுக்குச் சொல்லித் தருவதில்லை என்று முடிவு செய்தவர். சிவந்தமேனி, ஒளியான விழிகள், கல்வியில் ஆர்வம்... இத்துடன் இருந்த கர்ணனைக் கண்டதும் பிராமணனாய் இருக்கக்கூடும் என்ற எண்ணத்துடன் வித்தைகளைத் தொடங்கினார். சகல வித்தைகளும் அவனிடம் சரண் புகுந்தன.

ஒருநாள்... பாடம் நடத்திய களைப்பில் குரு பரசுராமர் மாணவன் மடியில் தலைவைத்துப் படுத்திருந்தார். கர்ணன் அவருக்குக் காற்று வீசிக்கொண்டு கடமையுணர்வுடன் காத்திருந்தான். கர்ணன் அஸ்திர பலம் பெறுவதைப் பொறுக்கமுடியாத இந்திரன் வண்டின் வடிவெடுத்தான். கர்ணன் மடியில் உறங்கும் பரசுராமர் தூக்கம் தடைப்படவேண்டும். பாதியில் எழுந்து கோபத்தால் அவர் சாபம் கொடுத்து, கர்ணன் கல்வி கரைய வேண்டும் என்று எண்ணி இந்திர வண்டு கர்ணன் தொடையைத் துளைத்து எடுத்தது! வலியைப் பொறுத்துக்கொண்டிருந்தான் கர்ணன். காலை அசைக்கக் கூட இல்லை. குருநாதர் தூக்கம் கலையக் கூடாதே என்ற கவலை.

இரத்தம் கசிந்து பரசுராமர் உடலை நனைத்தது. தூக்கம் கலைந்து சினந்து எழுந்தார் குருநாதர். குருதி வடியும் கர்ணன் தொடையைக் கண்டார். வண்டு துளைத்தும்கூட வலியால் பாதிக்கப்படாத வதனம் கண்டார். வலியைத் தாங்கும் தேகவளம் கண்டார். கையை உயர்த்தி அலறினார். அடப்பாவி என்னை ஏமாற்றி விட்டாயே? இவ்வளவு துன்பத்தை உன் தேகம் பொறுத்திருக்க வேண்டும் என்றால் நீ அந்தணனாக இருக்கமுடியாது. அந்தணருக்குத் தேக பலம் குறைவு;. மனோபலம் அதிகம். பொய் சொல்லிக் கல்வி கற்றுவிட்டாய். நீ ஷத்திரியன். ஷத்திரியன்... என்னிடம் கற்ற வித்தை உனக்கு உரிய காலத்தில் பயன்படாமல் போகட்டும் என்று கோபத்தைச் சாபமாக உருப்பெயர்த்தார்.

எத்தனை பெரிய இழப்பு. கற்றவித்தை பயன்படாமல் போய் விடும். கர்ணன் கவலைப்படவில்லை. நன்றியுடன் குருவை வணங்கினான். உள்ளே ஒரு மகிழ்ச்சி மின்னல். சாபத்தில் என்ன சந்தோஷம்? நீ ஷத்திரியன் நீ ஷத்திரியன் என்ற வார்த்தைகள் அவனுக்குள் எதிரொலித்தன. குலம் கோத்திரம் எதுவும் தெரியாத என்னைச் ஷத்திரியன் என்று குரு சொல்லிவிட்டார். குருவின் வார்த்தை பொய்யாகாது. என் நெடுநாள் அவலம் இன்றோடு நீங்கியது என்று கர்ணன் மகிழ்ந்தான். அந்தச் சாபம் அவனுக்கு வரமாக இருந்தது.

கர்ணன் பிறவி எதிரி அருச்சுனன். அவனுக்கும் அப்படி ஓர் அனுபவம். அஸ்திரங்கள் வேண்டித் தவம் இருந்தான் அருச்சுனன். சூதாடி நாடிழந்த பிறகு காட்டில் இருந்த சமயம் வியாசர் சொன்ன யோசனையால் அவன் தவம் இருந்தான். இந்திரன் தந்தை அல்லவா? மகன் அருச்சுனனைச் சோதித்து வரம் பல வழங்கி சிவனருளையும் பெற்றுத் தந்தான். அதன்பின் இந்திர உலகம் அழைத்துச்சென்று விருந்தினனாகத் தங்க வைத்திருந்தான்.

இரண்டாவது இந்திரனாக ஒளிவீசிய அருச்சுனன் இருந்த சபைக்கு ஊர்வசி வந்து நடனமாடினாள். ஏது கருதியோ அவளை நோக்கினான் அருச்சுனன். இந்திரன் தன்னைப்போலவே மகனை நினைந்தான். மருவத் துடிக்கிறது மகனது மனம் என்று நினைந்து அருச்சுனன் அரண்மனைக்குச் சென்று, தங்கி அவனை அணைந்து மகிழ்வுறும்படி ஊர்வசிக்கு உத்தரவும் இட்டான். அருச்சுனன் இளைஞன். பாவையர் பலரை மணந்த மாவீரன். ஊர்வசி உள்ளம் உருகி அவன் இல்லம் வந்தாள். என்ன அதிசயம்!

தாயே... என்று ஊர்வசி பாதங்களை வணங்கினான் அருச்சுனன். மையலால் மனமகிழ்ந்து நின்ற ஊர்வசியால் இந்த அதிர்ச்சியைத் தாங்கமுடியவில்லை. தந்தை இந்திரனின் காதலுக்கு உரியவள் என்ற முறைமையால் தாயே என்றான் அருச்சுனன். நடனக்கலைமீது உள்ள நாட்டத்தால் மட்டுமே அவளை உற்று நோக்கிய உண்மையை உணர்த்தினான்.

பேடியே... ஆண்மைக்கு அடையாளமாக என்னை அணையாது பேடி போல் நடந்து கொண்ட நீ, உண்மையில் ஆண்மையற்ற பேடியாகவே ஆகக்கடவாய்... என்று தன் ஆற்றாமையால் சாபம் இட்டாள். சாபம் அவன் சரித்திரத்தையே சரிய வைத்ததா? இல்லை. அதையே அவன் வரமாக்கிக் கொண்டான். எப்படி? அந்தச் சாபத்திற்கு கால எல்லை ஓராண்டு என்று இந்திரன் மூலம் எல்லை கட்டினான். வேண்டும் போது அந்தச் சாபத்தை அனுபவிப்பதாக வாக்கும் கொடுத்தான்.

# தமிழ் சினிமா வரலாறு

26

## பத்து வயதில் இசைத்தட்டில் பாடிய எம்.எஸ். சுப்புலட்சுமி

...பரணியில் பிறந்தார்

மதுரையில் வாழ்ந்த வீணை இசை மேதை சண்முக வடிவு அம்மையாரின் மகள்தான் சுப்புலட்சுமி.

தந்தை பெயர் சுப்பிரமணிய அய்யர். பிரபல வக்கீல். சங்கீதத்தில் மிகுந்த ஈடுபாடு உடைய அவர், சண்முகவடிவின் வீணைக் கச்சேரியைக் கேட்டு மனதைப் பறிகொடுத்து அவர் வாழ்க்கையிலும் இணைந்தார்.

இந்தத் தம்பதிகளின் மகளாய் 1916 ஆம் ஆண்டு செப்டெபர் 16 ஆம் திகதி பிறந்தார் சுப்புலட்சுமி.

தமிழில் புரட்டாசி மாதம் பரணி நட்சத்திரத்தில்.

பரணயில் பிறந்தவர்கள் தரணி ஆள்வார்கள் என்று கூறுவார்கள் அல்லவா? என் மகள் தரணியை ஆளாவிட்டாலும் இசை உலகில் அரசியாய் திகழ்வாள் என்று நினைத்தார் சண்முகவடிவு.

ஏனென்றால் அத்தகைய அற்புதமான இனிய குரலை எம்.எஸ்.க்கு இறைவன் அருளி இருந்தான்.

சிறுவயதில் குஞ்சம்மா என்ற செல்லப்பெயரில் அழைக்கப்பட்ட சுப்புலட்சுமி, தாயாரிடம் கொஞ்சும் சங்கீதம் கற்றுக்கொண்டார்.

என்றாலும் மதுரையில் அக்காலத்தில் புகழ்பெற்று விளங்கிய சீனவாச அய்யங்காரிடம் முறையான சங்கீதப் பயிற்சியைப் பெற்றார்.

அக்காலகட்டத்தில் தாயார் வீணைக்கச்சேரி செய்யும்போது சுப்புலட்சுமி கூடவே பாடுவது உண்டு.

எம்.எஸ்.சின் அண்ணன் பெயர் சக்திவேல். தங்கை வடிவாம்பாள்.



இளம் வயதில் எம்.எஸ்.

சக்திவேல் மிருதங்கம் வாசிப்பதில் நிபுணர். வடிவாம்பாளுக்கு நன்றாக வயலின் வாசிக்கத் தெரியும்.

அண்ணன் மிருதங்கம் வாசிக்க தங்கை வயலின் இசைக்க வீட்டிலேயே சுப்புலட்சுமி குட்டி இசைக் கச்சேரிகள் நிகழ்த்துவது உண்டு.

இந்நிலையில் எம்.எஸ்.சுக்கு எட்டு அல்லது ஒன்பது வயதாகும்போது மதுரை சேதுபதி பள்ளியில் நடந்த நிகழ்ச்சியின்போது எம்.எஸ்.தனியே அமர்ந்து தனது கச்சேரியை நடத்தினார். அதைத் தான் அவரது அரங்கேற்றம் என்று கூற வேண்டும்.

**10 வயதில் இசைத்தட்டு**

அப்போதுதான் கிராமபோன் ரிக்கார்டுகள் வெளிவரத் தொடங்கிய காலம்.

தன் மகளின் பாடல்கள் கிராமபோன் ரிக்கார்டுகளாக வரவேண்டும் என்று விரும்பினார் சண்முகவடிவு.

எம்.எஸ்சை சென்னைக்கு அழைத்துச் சென்றார். சிறுமி சுப்புலட்சுமியைப் பார்த்த இசைத்தட்டுக் கம்பெனிக்காரர்கள் இந்தச் சின்னப்பெண்ணால் என்ன பாடிவிட முடியும்! என்று நினைத்தார்கள்.




10 வயதில் எம்.எஸ். பாடி வெளிவந்த இசைத்தட்டு



தாயார் சண்முகவடிவு, தங்கை வடிவாம்பாள், எம்.எஸ்

ஆனால் மரகதவடிவும், செங்கதில் வேலும் என்ற முருகன் பாடலையும் விதிபோலுமிந்த என்ற திருப்புகழ் பாடலையும் எம்.எஸ். பாட, கிராமபோன் கம்பெனியார் அப்படியே அசந்து போய்விட்டார்கள்.

உடனே பாடல்கள் பதிவாகி, இசைத் தட்டு வெளிவந்தது. வந்த வேகத்திலேயே விற்றுத் தீர்ந்துவிட்டது.

அக்காலத்தில் பத்து வயதிலேயே இசைத் தட்டு மூலம் புகழ்பெற்றவர், அகில இந்தியாவிலும் எம்.எஸ். ஒருவரே.

*(தொடரும்)*

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 294

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

....அதிருப்தி இதயத்தில் இருந்து வர முடியாது. அது முழுவதும் மனதிலிருந்தே உற்பத்தியாகும் ஒரு பொருள்.

எப்பொழுதும் உங்களுக்கும், பிரபஞ்ச இருப்புத் தன்மைக்குமிடையே நிற்பது உங்கள் மனம் தான்.

அது உங்களை பிரபஞ்ச இருப்புத் தன்மையைக் கேட்பதிலிருந்தும் பார்ப்பதிலிருந்தும் உணர்விலிருந்தும் அதனுடன் உணர்ச்சிபூர்வமாய் இருப்பதிலிருந்தும் தடுக்கிறது.

ஒருமுறை உங்கள் மனதைக் கடந்து சென்று பிரபஞ்ச இருப்புத் தன்மையின் அழகைக் கண்டுவிட்டீர்களானால் நன்றியுணர்வே உங்கள் பிரார்த்தனையாகிவிடும்.

ஆனந்தம் உங்கள் இருப்புத் தன்மையாகிவிடும்! பிறகு நீங்கள் விடுதலையையும் நிரந்தரமான மகிழ்ச்சியையும் அனுபவிப்பீர்கள்!

உங்கள் மனதின் சலிப்படைய வைக்கும் தர்க்கத்தை விட்டு விட்டீர்களானால் தேர்ந்தெடுத்தல் இல்லாமலும் முயற்சியின்றியும் மகிழ்ச்சியாகவும் நீரோட்டத்தின் பிரவாகத்துடன் நீங்கள் ஒரு நதியைப் போலப் பாய்ந்து செல்வீர்கள்.

பிறகு நீங்கள் உங்கள் பாத்திரத்தைச் சரியாக நடித்து, ஒவ்வொரு கணத்தையும் மகிழ்ச்சியுடன் அனுபவிப்பீர்கள்.

பிறகுதான் நீங்கள் நீங்களும் ஒரு அற்புதமான நாடகத்தின் ஒரு பகுதி



தான் என்பதையும் நீங்கள் எந்த அளவிற்கு இதனை நடத்துபவர்க்கு உணர்வுபூர்வமாக இருக்கிறீர்களோ, அந்த அளவிற்கு உங்கள் பாத்திரத்தை நன்றாகவும் மகிழ்ச்சியாகவும் அனுபவித்தும் செய்ய முடியும் என்பதையும் புரிந்துகொள்வீர்கள்!

நீங்கள் நீரோட்டத்திற்கு எதிராகச் செல்லும் பொழுது முயற்சி செய்ய வேண்டியிருக்கிறது.

மேலும் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் நீரோட்டத்துடன் செல்லும் பொழுது எந்தவிதமான முயற்சியும் மேற்கொள்ள வேண்டியதில்லை.

களைப்படைய மாட்டீர்கள்; ஏமாற்றப்பட்டுவிட்டதாக எண்ண மாட்டீர்கள். இலகுவாகவும் மகிழ்ச்சியாகவும் மட்டுமே இருப்பீர்கள்! பிறகு உங்களுக்கு எல்லாமே அழகாகத்தான் தோன்றும்.

ஒரு சின்னக் கதை

நிதிய காந்தி ஒரு நீண்ட இரயில் பயணத்தில் இருந்தாள். அவள் பெரும்பாலான நேரத்தை இயற்கைக் காட்சிகளை இரசிப்பதில் செலவிட்டுக் கொண்டிருந்தாள். அவளருகில் அமர்ந்திருந்த ஒரு வயதான பெண்மணியிடம் காந்தி, பயணத்தில் சிறந்த பகுதி, அற்புதமான இயற்கைக் காட்சிகளை இரசிப்பதுதான் என்று சொன்னாள்.

அந்தப் பெண்மணி தலையாட்டிவிட்டு, அங்கு சிறிது நேரம் அமர்ந்து ஜன்னல் வழியாக வெளியே பார்த்துவிட்டு எழுந்து சென்றுவிட்டாள். சிறிது நேரம் கழித்து மீண்டும் வந்து சிறிது நேரம் அமர்ந்து ஜன்னல் வழியாக வெளியே பார்த்துவிட்டு எழுந்து சென்றுவிட்டாள். சிறிது நேரம் கழித்து மீண்டும் திரும்பி வந்து காந்தியின் பின்னால் அமர்ந்தாள். சில நிமிடங்களுக்குப் பிறகு காந்தியின் முதுகில் தட்டி என்னை மன்னிக்கவும் ஆனால் நீங்கள் நான் பார்க்காதது எதையாவது பார்க்கிறீர்களா? என்று கேட்டாள்.

*(தொடரும்)*

பரமஹம்ஸ சுவாமி

# பேரினவாத சக்திகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது

## அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு

**இன, மத முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையிலான செயற்பாடுகள் நாட்டின் எந்த மூலையில் இடம்பெற்றாலும் அதற்கு அனுமதி அளிப்பது என்பது நல்லிணக்க சூழலுக்கு பாதகம் விளைவிப்பதாகவே அமையும். கடந்த பல ஆண்டுகளாக இவ்வாறான இனவாத, மதவாத செயற்பாடுகளினால் எமது நாடு பெரும் அழிவுகளையும் இழப்புக்களையும் சந்தித்து வந்துள்ளது என்பது வரலாறாக உள்ளது என அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு நகரில் அமைநதுள்ள இந்து ஆலயம் ஒன்றில் தேர்த்திருவிழாவை இடைநிறுத்தும் வகையிலான செயற்பாடு தற்போது இடம்பெற்றுள்ளமை பெரும் கவலையளிக்கும் விடயமாக மாறியிருக்கின்றது.

கடந்த 5ம் திகதி மத்திய கொழும்பின் பாபர் வீதி என்ற மகா வித்தியாலய மாவத்தையில் 36 ஆம் தோட்டத்தில் அமைந்துள்ள இந்துக் கோவிலில் தேர்த்திருவிழா நடத்துவதற்கு அப்பகுதியைச் சேர்ந்த ஒரு குழுவினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதனால் முரணபாட்டை தவிர்க்கும்வகையில் ஆலய நிர்வாகத்தினர் தேர்த்திருவிழாவினை இரத்துச் செய்துள்ளனர்.

எமது நாடானது சகல இன, மத மக்களின் உரிமைகளையும் உறுதிப்படுத்தும் வகையிலான அரசியலமைப்பை கொண்டிருக்கின்றது. சகல மதத்தவர்களும் தமது மதக்கடமைகளை நிறைவேற்றுவதற்கு உரித்துடையவர்கள்.

இந்த நிலையில் தேர்த் திருவிழாவினை நடத்த வேணடாம் என்று ஒரு தரப்பினர் அச்சுறுத்தல் விடுத்துள்ளமையானது மதவாதத்தை தூண்டும் செயற்பாடாக அமைநது விடுமோ என்ற அச்சம் தற்போது ஏற்பட்டிருக்கின்றது.

மகாவித்தியாலய மாவத்தையில் அமைந்துள்ள இந்துக்கோவிலின் தேர்த் திருவிழா இடைநிறுத்தம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினை இன்று ஒரு தேசிய பிரச்சினையாக உருமாறிவருகின்றது. இத்தகைய நிலைமை இன்று இந்த நாட்டுக்கு உகந்ததல்ல. இந்த சூழலில் இது தொடர்பில் நாம் ஏட்டிக்குப் போட்டியாக செயற்படக் கூடாது.

எனவே இந்தப் பிரச்சினையை தீர்த்து வைக்கும் பொறுப்பை நான் தற்போது கொழும்பு மாநகர முஸ்லிம் சமூகத் தலைவர்களிடம் விட்டுள்ளேன். தற்போது நான் எடுக்கக்கூடிய பொறுப்புள்ள நிலைப்பாடு இதுதான் என நான் நம்புகின்றேன்.

இது தொடர்பில் இஸ்லாமிய மதத் தலைவர்களிடம் கலந்து பேசி முடிவெடுத்து இந்தத் தேர்த் திருவிழாவினை அனைவரும் இணைந்து நடத்தி நல்லிணக்க சகவாழ்வு சூழலை உருவாக்கித் தரும்படி அமைச்சர் பைசல் முஸ்தபா, இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம் பௌஸி, பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், கொழும்பு மேயர் ஏ.ஜே.எம். முஸம்மில் மற்றும் நல்லிணக்க இயக்கத் தலைவர் இராஜா முஹமத் ஆகியோரிடம் பொறுப்பை ஒப்படைத்துள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல மதங்கள், பல இனங்கள் வாழும் இந்த நாட்டில் பொலிஸ் பாதுகாப்புடன் மத விழாக்களை நடத்த முடியாது. இன்று இந்தத் தோட்டத்தில் உருவாகியுள்ள இந்த சூழல் நாட்டின் தேசிய நல்லிணக்கத்திற்கும் சக வாழ்விற்கும் ஊறுவிளைவிக்கின்றது.

கடந்த காலங்களில் இந்நாட்டில் கோவில்கள், பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் ஆகியவற்றுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட சம்பவங்களை இச்சம்பவம் ஞாபகப்படுத்துகின்றது.

மீண்டும் நாம் இருண்ட யுகத்திற்குள் போக விரும்புகின்றோமா? அல்லது முன்னோக்கி நகரப் போகின்றோமா என்பதை முடிவு செய்ய வேண்டிய நிலையில் நாம் உள்ளோம் என்றும் அமைச்சர் மனோ கணேசன மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7-10)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 140 | 150 | 160 | 160 |
| தக்காளி | 100 | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 |
| கோவா | 70 | 60 | 60 | 80 |
| கரட் | 80 | 60 | 120 | 70 |
| பூசணி | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 60 | 40 | 60 | 50 |
| வாழைக்காய் | 60 | 40 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 110 | 120 | 120 | 90 |
| பெரிய வெங்காயம் | 100 | 140 | 100 | 120 |
| பாகற்காய் | 100 | 100 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 100 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 80 | 70 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 | 80 |
| லீக்ஸ் | 60 | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 30 | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 60 | 60 | 100 | 50 |
| போஞ்சி | 150 | 160 | 200 | 170 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | 50 | 70 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 240 | 250 | 400 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-60 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 200 | 250 | – | – |
| வெங்காயப்பூ | 180 | 150 | 200 | 160 |
| முள்ளங்கி | 50 | 40 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 516


கவிதா




கோபிதாஸ்




கீர்த்தனா



மகான்




கேதீஸ்வரன்




பிரதாப்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# 2020 ஆம் ஆண்டில் சுதந்திரக் கட்சியின் அரசாங்கம் அமையும்

## பிரசன்ன ரணதுங்க நம்பிக்கை



**நாட்டு மக்கள் இன்னும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இருப்பதாக எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் சுதந்திரக் கட்சியின் அரசாங்கம் அமையும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

மினுவங்கொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் அதிகார சபைக் கூடடத்தில் பேசும் போதே அவர இதனை தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாத்து 2020 ஆம் ஆண்டில் எமது அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும்.

வடக்கு, கிழக்கில் யுத்தம் நடைபெற்ற போதே தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த நேரத்தில் அதனை செய்யவில்லை.

நாட்டின் மீதுள்ள அன்பால் தற்போதைய தேசிய அரசாங்கம் அமைக்கப்படவில்லை.

அமைச்சரவையின் எணணிக்கையை அதிகரிக்கும் சடடமூலமே முதலில் நாடாளுமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டது. அதனை நாங்கள் எதிர்க்கின்றோம்.

பெரும்பான்மை பலம் இல்லை என்று கூறி, 100 நாட்களில் நிறைவேற்ற போவதாக கூறிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. தற்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை கொண்டுள்ள போதிலும் பொருட்களின் விலைகளை குறைக்கவில்லை.

அத்துடன் நாடாளுமன்றத்தில் இன்று ஜனநாயகம் இல்லை. பொதுத் தேர்தலில் நாங்கள் தோல்வியடையவில்லை. தடைகளுக்கு மத்தியில் பின்னடைவுக்குள்ளானோம். எனினும் மக்கள் இன்னும் மகிந்த ராஜபக்ஷவுடன் உள்ளனர்.

மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்ததும் தேசிய அரசாங்கத்தில் இணைந்து கொண்டு மகிந்தவை விமர்சித்த போதும் மக்கள் மகிந்தவுடனேயே இருந்தனர் எனவும் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# சேயா கொலை வழக்கை சிக்கலாக மாற்றிவிட்டனர்

அரசியல்வாதிகள், ஊடகங்கள் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் கீழ் மட்ட விசாரணை அதிகாரிகளுக்கு கொடுத்த பாரதூரமான அழுத்தங்களே சிறுமி சேயா சௌதமி கொலை தொடர்பான விசாரணை சிக்கலாக காரணமென இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

நேரில் கண்ட சாட்சியங்கள் இல்லாத இவ்வாறு கொடூரமான கொலையொன்றில் அறிவியல் ரீதியான சாட்சியங்களேமிகவும் முக்கியமானது.

சந்தேக நபர்களை கணடறிய அறிவியல் ரீதியான சாட்சியங்களை உடனடியாக உறுதிப்படுத்த இலங்கையில் குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணைகளை நடத்தி வரும் அதிகாரிகளும் போதுமான தொழில்நுட்ப வசதிகளும் இல்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலங்களில் இவ்வாறான கொடூரமான சம்பவங்கள் நடந்த பின்னர் எவரையாவது கைது செய்வார்கள்.

அவருக்கு எதிராக சாட்சியங்களை உருவாக்குவார்கள்.

அதன் பின்னர் சந்தேக நபரை ஆயுதங்களை காட்ட அழைத்துச் சென்று சுட்டுக் கொல்வர்.

அப்படியில்லை என்றால் சந்தேக நபர்கள் கைவிலங்குடன் ஆற்றில் குதிப்பர்.

இப்படியான நடைமுறைக்கே பொலிஸ் அதிகாரிகளும் மக்களும் பழக்கமாகியிருந்தனர்.

தற்போது அது முடியாது. சரியான சாட்சியங்களுடன் குற்றவாளிகளை கண்டு பிடிப்பதில் எமது அதிகாரிகள இன்னும் பழக்கிக் கொள்ளவில்லை எனவும் பாலித ரங்கே பண்டார மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# அவன்கார்ட் ஆயுதக்கப்பல் விசாரணை அறிக்கையை கடற்படை கையளிக்கவுள்ளது

காலிதுறைமுகத்துக்கு அப்பால் கைப்பற்றப்பட்ட அவன்கார்ட் ஆயுதக்கப் பல் தொடர்பில் தமது விசாரணை அறிக்கையை கடற்படையினர் நிறைவு செய்துள்ள நிலையில் அறிக்கை, பாதுகாப்பு அமைச்சிடம் கையளிக்கப்படவுள்ளது.

கடற்படைத்தளபதி வைஸ அட்மிரல் ரவீந்திர விஜேகுணரட்ன இதனை தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளரின் பணிப்புரைக்கு அமைய இந்த விசாரணைகள் இடம்பெற்றன.

இந்தநிலையில் இந்த விசாரணையை விரைவில் அமைக்கப்படவுள்ள சுயாதீனக்குழு ஒன்று தொடர்ந்தும் மேற்கொள்ளவுள்ளது. இதே வேளை அண்மையில் காலி துறைமுக கடலில் 810 ஆயுதங்களுடன் கைப் பற்றப்பட்ட கப்பல் தொடர்பில் விசரணைகள் தொடர்ந்தும் இடம பெற்று வருகின்றன. (இ-7-10)

# கோட்டக்கல்விப் பணிப்பாளர் மீது பெண் ஆசிரியர் கடும் தாக்குதல்

(கொழும்பு)


அநுராதபுரத்தில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஒருவர் ஆசிரியை ஒருவரினால் தாக்கப்பட்டு அண்மையில் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான மேற்படி கல்விப் பணிப்பாளர் வேறு ஆசிரியர்கள் சிலருடனும் தகாத முறையில் நடக்க முற்பட்டதாகவும் இந்நிலையில் மேற்படி தாக்குதல் சம்பவம் நடைபெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னரும் ஆசிரியர் ஒருவரின் கணவர் பிரஸ்தாப கோட்டக்கல்விப்பணிப்பாளரை தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கைக்கு ஐரோப்பியர் வருகை 09



**...போ**ர்ச்சுக்கீசியர்கள் வசம் இருந்த இலங்கையை டச்சுக்காரர்கள் கைப்பற்றிக் கொண்டனர். கண்டி அரசனுக்கு ஆதரவாக இருப்பதுபோல் நடித்து பிறகு அவனை ஏமாற்றிவிட்டனர்.

### டச்சுக்காரர்கள் வருகை

கி.பி.1595 ஆம் ஆண்டு முதல், டச்சுக்காரர்கள் கீழ்த்திசை நாடுகளில் வணிகம் செய்யும் நோக்கத்தோடு கப்பல்களில் பயணம் செய்தனர்.

(இங்கிலாந்து நாட்டுக்குக் கிழக்கே, ஜேர்மனிக்கு மேற்கே உள்ளத் நெதர்லாந்து. இது ஹாலந்து என்றும் அழைக்கப்படுகிறது.

இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் டச்சுக்காரர்கள். டச்சு மொழி பேசுவதால் டச்சுக்காரர்கள் என்ற பெயர் வந்தது. இவர்களை இலங் கையைச் சேர்ந்தவர்கள் ஒல்லாந்தர் என்று குறிப்பிடுகிறார்கள்.)

1602 ஆம் ஆண்டு டச்சுக்கப்பல் ஒன்று மட்டக்களப்புக்கு வந்தது. அதில் இருந்த டச்சு வியாபாரிகள் கண்டி அரசனைச் சந்தித்து அந்தப் பகுதியில் வியாபாரம் செய்ய அனுமதி கோரினர்.

கண்டி அரசனுக்குப்போர்ச்சுக்கீசியர்கள் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்த காலகட்டம் அது. டச்சுக்காரர்களின் உதவியைப் பெற்று போர்ச்சுக்கீசியர்களை விரட்டலாம் என்று கண்டி மன்னன் எண்ணினான்.


### ஒப்பந்தம்

டச்சுக்காரர்களின் கோரிக்கைக்கு கண்டி அரசன் இணங்கி, அவர்களுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டான். இந்த ஒப்பந்தம் கி.பி. 1638 ஆம் ஆண்டில் கையெழுத்தானது.

அந்த ஒப்பந்தப்படி இருவரும் சேர்ந்து போர்ச்சுக்கீசியரை எதிர்த்தனர். அவர்களிடம் இருந்த பல பகுதிகளை மீட்டனர். அப்படி மீட்ட பகுதிகளை டச்சுக்காரர்கள் கண்டி அரசனிடம் கொடுக்காமல் அவனை ஏமாற்றி தங்கள் வசம் வைத்துக் கொண்டனர்.

போர்ச்சுக்கீசியர்களுக்கும் டச்சுக்காரர்களுக்கும் பல்வேறு இடங்களில் போர் நடந்தது. அதில் டச்சுக்காரர்கள் வெற்றி பெற்று இலங்கை முழுவதை தங்கள் ஆளுகையின் கீழ் கொண்டு வந்தனர். போர்ச்சுக்கீசியர் இலங்கையை விட்டுவிரட்டி அடிக்கப்பட்டனர்.

இலங்கையின் பொருளாதாரம் முழுவதும் டச்சுக்காரர்களின் கைக்கு வந்தது. காப்பித் தோட்டங்களைப் பெரும் அளவில் ஏற்படுத்தினர்.




இங்கிலாந்து, போர்ச்சுக்கல், நெதர்லாந்து (டச்சு) ஆகிய நாடுகளைக் காட்டும் படம்

உற்பத்தியாகும் பொருட்களில் பெரும்பாலானவற்றை அவர்களே எடுத்துக்கொண்டனர்.

### தோட்டத் தொழிலாளர்

தொன்று தொட்டு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே வியாபாரத்தொடர்பு இருந்து வந்தது. டச்சுக்காரர்களின் ஆட்சியின்போது அந்த வியாபாரம் குறைந்து போயிற்று.

(தொடரும்)

# டெங்குக் காய்ச்சல் குறித்து அவதானமாக இருங்கள்

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

டெங்கு நுளம்புகள் அதிகரிப்பு மற்றும் அதனால் ஏற்படும் காய்ச்சல் குறித்து பொது மக்கள் அவதானமாக இருக்க வேண்டுமென சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது. சுகாதார அமைச்சின் டெங்கு நோய் தடுப்பு பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மழைக்கு பிந்திய காலம் என்பதால், டெங்கு நோய் தற்போது வேகமாக பரவ ஆரம்பித்துள்ளமையினால் பொது மக்கள் அவதானமாக இருக்க வேண்டும். குறிப்பாக மேல் மாகாணத்தின் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் இந்த நோய் அதிகமாக காணப்படுகின்றது.

இதனிடையே குறித்த நோய் தொற்று காரணமாக இதுவரை நாடளாவிய ரீதியில் 20 ஆயிரம் பேர் வரையில் பாதிக்கப்பட்டுள்ளதோடு 50 பேர் வரையில் மரணித்துள்ளனர். இந்த நோய் பரவாமல் தடுப்பதற்கு தமது வீட்டுச் சூழலில் நீர் தேங்கி நிற்காத வண்ணம் சுத்தமாக பேணுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-7-10)




# கலப்பு நீதிமன்றம் நாட்டிற்குள் வராது

## அமைச்சர் சஜித் தெரிவிப்பு

**அரசாங்கம் எந்த காரணத்தை அடிப்படையாக கொண்டும் நாட்டின் நீதிமன்ற கட்டமைப்பை காட்டிக்கொடுக்காது என்பதுடன் கலப்பு நீதிமன்றம் ஒன்று நாட்டிற்குள் ஏற்படுத்தப்பட மாட்டாது என அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**



திஸ்ஸமஹாராம உடுவில பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கே மக்கள் ஆணை வழங்கினர். அந்த மக்கள் ஆணையின் மூலம் நாங்கள் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்துள்ளோம்.

தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளதால், நாட்டிற்கு எதிராக செயற்பட்ட நாடுகள் அதனை கைவிட்டுள்ளன. அன்று பல நாடுகள் இலங்கையை சுற்றிவளைத்து தாக்குதல் நடத்த தயாராகின.

பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அந்த நாடுகள் எமது நாட்டிற்கு எதிராக பொருளாதார தடைகளை விதிக்க தயாராகி வந்தன. எனினும் தற்போதைய தேசிய அரசாங்கம் அவற்றை முற்றாக தோற்கடித்துள்ளது.

ஜெனிவா நகரில் கடந்த சில வருடங்களாக இலங்கைக்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. எனினும் இம்முறை நாட்டில் செயற்பாட்டில் உள்ள நல்லாட்சிக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. நல்லாட்சிக்கு உலகத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

தேசிய அரசாங்கம், அரசியல், கருத்து சுதந்திரத்தை வழங்கியுள்ளதால், உலக நாடுகள், எமது நாட்டை ஏற்றுக்கொண்டுள்ளது. கடந்த காலத்தில் உலகின் புற்று நோயாளி என சர்வதேசம் இலங்கையை அடையாளப்படுத்தியது எனவும் அமைச்சர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# ஜெனிவா பிரேரணை தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மாநாடு

ஜெனிவா பிரேரணைக்கு இணக்கம் வெளியிட்டமையினால் அரசாங்கம் நாட்டினை தீவிர ஆபத்து நிலைமைக்கு மூழ்கடித்துள்ளமையை இட்டு மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் தேசிய மாநாடொன்று எதிர்வரும் 19ஆம் திகதி கொழும்பில் நடத்துவதற்கு கூட்டு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

கடந்த 9ஆம் திகதி பொரளை என்.எம்.பெரேரா நிலையத்தில் இடம்பெற்ற கூட்டு எதிர்கட்சி கூட்டத்தில் இத்தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இக் கட்சி தலைவர் கூட்டத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் எதிர்க் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி குமார வெல்கம மற்றும் டளஸ் அழகப்பெரும, மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஷ் குணவர்தன, தேசிய சுதந்திர முன்னணி தலைவர் விமல் வீரவன்ச, ஜயந்த சமரவீர, ஜனநாயக இடதுசாரி முன்னணி தலைவர் வாசுதேவ நாணயக்கார, பிவிதுரு ஹெல உறுமய தலைவர் உதய கம்மன்பில, லங்கா சமசமாஜக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் பிரதான செயலாளர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணகே, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் பிரதான செயலாளர் டியூ.குணசேகர ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர். (இ-10)

# தேசத்தின் அபிவிருத்திக்கு எம்மால் இயலுமானவற்றை செய்வோம்

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

பாதுகாப்பு எனும்போது சமூகப் பாதுகாப்பு, பொருளாதார பாதுகாப்பு, வேலை பாதுகாப்பு போன்ற பல்வேறு வகையான பாதுகாப்பு நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒரு விரிவான அர்த்தத்தைத் தருவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

நாம், பாதுகாப்பு அமைச்சு என்ற வகையில் அரசின் நோக்கத்திற்கமைவாக பல்வேறு சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளில் எம்மால் இயலுமானவற்றை செய்கிறோம் என பாதுகாப்புச் செயலாளர் சுட்டிக் காட்டியதுடன் கடந்த காலங்களில் நாட்டிற்காக முப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சமூக அபிவிருத்திக்கான பங்களிப்பினையும் இதன்போது நினைவுகூர்ந்தார். தெஹிவளையில், கடந்த சனிக்கிழமை (10) இடம்பெற்ற எஸ் டீ எஸ் ஜயசிங்க விளையாட்டு மைதான திறப்பு விழா நிகழ்வின் போது மேற்கண்டவாறு செயலாளர் தெரிவித்தார்.

தெஹிவளை - கல்கிசை மாநகர பிதா தனசிறி அமரதுங்க அவர்களின் அழைப்பின் பேரில் புதிதாக பல வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட்ட மைதானத்தை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. கருணாசேன ஹெட்டியாராச்சி மற்றும் மேல் மாகாண கௌரவ முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய ஆகியோர் பொதுமக்கள் பாவனைக்காக கையளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# தொழில் முயற்சியாளர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை

யாழ். வணிகர் கழகம் நடத்தும் தொழில் முயற்சியாளர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இல.165, மானிப்பாய் வீதியிலுள்ள யாழ். வணிகர் கழக பணிமனையில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தற்போதுள்ள தொழிற்துறை முயற்சியாளர்கள் மற்றும் தொழிற்துறை முயற்சிகளை ஆரம்பிக்க ஆர்வமுள்ளவர்கள் என பலதரப்பட்டவர்கள் தொழிற்துறையொன்றை ஆரம்பிக்கும் போது கவனிக்க வேண்டிய அம்சங்கள் பற்றியும் அரசாங்கத்திடமிருந்து பெறக்கூடிய சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வது பற்றியும் போதியளவு அறிந்திருக்காமை அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே யாழ். வணிகர் கழகம் இவ்வாறான தொழிற்றுறை முயற்சியாளர்களுக்கு தொழிற்றுறை முன்னேற்றம் தொடர்பான தெளிவூட்டல் கருத்தரங்கொன்றை நடத்த தீர்மானித்துள்ளது. இதற்கமையவே நாளைய தினம் மேற்படி விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதலீட்டுச்சபை அதிகாரி, கைத்தொழில் அபிவிருத்தி சபை அதிகாரி மற்றும் வங்கி அதிகாரிகள் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். (இ-5)

# இடமாற்றம் வழங்கக்கோரி ஆசிரியர்கள் கவனயீர்ப்பு



(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 வருடங்களிற்கு மேல் கடமையாற்றிய ஆசிரியர்கள் தமக்கு இடமாற்றம் வழங்கக்கோரி யாழிலுள்ள வடமாகாணகல்வியமைச்சு அலுவலகம் முன்பாக கவனயீர்ப்பு நடவடிக்கையொன்றினை நேற்று மேற்கொண்டிருந்தனர்.

முல்லைத்தீவு கல்வி வலயத்தினைச் சேர்ந்த 55 ஆசிரியர்களிற்கு இடமாற்றம் வழங்கப்பட்டு அதில் 22 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். 33 பேர் விடுவிக்கப்படாமல் உள்ளனர். இவ் இடமாற்றத்திற்கு இந்த 33 பேரும் தகுதி பெற்றுள்ள போதிலும் பல்வேறு காரணங்களுக்காக விடுவிக்கப்படாமல் உள்ளனர்.

இது தொடர்பில் மாகாண கல்விப்பணிப்பாளரிடம் கதைப்பதற்காக சென்றிருந்தோம் ஆனால் எங்களை சந்திப்பதற்கு அவர் இல்லாத காரணத்தினால், பின்பு கல்வியமைச்சரின் செயலாளரிடம் கதைப்பதற்கு சென்றிருந்தோம். இப்போது கதைக்க முடியாது எனக்கூறி கதைக்க மறுத்துவிட்டனர்.

ஒரு நிமிடமாவது கதைக்குமாறு கோரியிருந்தோம். அதனையும் கல்வி அமைச்சின் செயலாளர் மறுத்துவிட்டார். இவ்வாறுதான் மாகாண வலயக் கல்விப்பணிப்பாளர்களும் கூறிச் சென்றுள்ளனர் என கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

பாட பகுதிகளினை அடிப்படையாகக் கொண்டு இடமாற்ற கால எல்லையை கூற முடியாது.

இடமாற்ற சபையின் விதிகளுக்கமைய 6 வருடம் கஷ்டப் பிரதேசத்தில் கடமையாற்றிய அவர்களிற்கு இடமாற்றம் வழங்கப்பட வேண்டியது கட்டாயமாகும்.

எமது இக்கோரிக்கைகளுக்கு உரிய பதில் கிடைக்காவிட்டால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் ஆசிரியர்கள் கூறியுள்ளனர். (இ-4)




# பசி அடங்கா குருவிக் குஞ்சு

"...ஏன்..என்னைப் பார்த்து சிரிச்சே?" என்று கேட்டது குருவி.

சிரிப்பை அடக்கியபடி," இத்துனூண்டு குருவி நீ, உன்னோட வயிறு மட்டும் அண்டா மாதிரி இவ்வளவு பெரிசா இருக்கு!" என்றாள் அக்கா.

"என்னைப் பாத்தா ஒனக்குச் சிரிப்பு வருதா. ம்ம் நா நெனச்சேன், உன் குடத்தோட சேர்த்து, மொத்தக் குளத்துத் தண்ணீயையும் குடிச்சிடுவேன்" என்று கோபமாகச் சொன்னது குருவி.

'குஞ்சுகுருவிக்குக் கோபத்தைப் பாரேன்' என்று மனசுக்குள் நினைத்தபடி, "முடிஞ்சா குடிச்சுப் பாரேன்" என்றாள் அந்த அக்கா.

சொன்ன அடுத்த நிமிடமே தலையைச் சிலுப்பிய குருவி, 'லபக்' என்று அக்கா இடுப்பில் வச்சிருந்த குடத்தோட சேர்த்து, மொத்தக் குளத்துநீரையும் முழுங்கிவிட்டது.

அக்கா வெலவெலத்துப் போய் நின்றாள்.

அண்டா பொங்கல், குடத்தோட குளத்துநீரையும் குடித்த களைப்பில், பக்கத்தில் இருந்த வேப்பமரத்தடியில் லேசாய்க் கண்மூடிப் படுத்தது குருவி.

தூங்க முடியாமல் ஒரே சத்தம். வேப்பம்பழம் மரத்திலிருந்து 'பொத்.. பொத்..'தென்று தலையில் வேறு விழுந்தது.

கண்ணைத் திறந்துப் பார்த்தது குருவி. ஏகப்பட்ட குரங்குகள் வேப்பமரத்தில் விளையாடிக் கொண்டிருந்தன.

" நா தூங்கணும். வேற பக்கமாப் போயி விளையாடுங்க" என்று அதட்டியது குருவி.

குரங்குகள் எதுவும் சட்டை செய்யவில்லை. " நீ வேணா வேற பக்கமாப் போயப் படு" என்று சொல்லிவிட்டு, விளையாட்டைத் தொடர்ந்தன.

குருவிக்குப் பொல்லாத கோபம் வந்துவிட்டது. "இப்ப நீங்க போகலே, வேப்பமரத்தோட சேர்த்து, உங்களையும் முழுங்கிடுவேன், ஜாக்கிரதை" என்று மிரட்டியது குருவி.

"முடிஞ்சா முழுங்கிக்க!" என்றன குரங்குகள்.

படபடவென இறக்கையை அடித்த குருவி, வேப்பமரத்தோடு மொத்தக் குரங்குகளையும் சேர்த்து விழுங்கிவிட்டது.



'ச்சே கொஞ்ச நேரம் தூங்க முடியல ' என்று அலுத்துக கொண்டே, பக்கத்திலிருந்த கீற்றுக் கொட்டகை நிழலில் போய் உட்கார்ந்தது.

ஒரு கொல்லன் தனது பட்டறையில் அருவாளுக்குச் சாணை பிடித்துக் கொண்டிருந்தான். 'குர்குர்ர்..'ன்னு சாணைப் பிடிக்கிற சத்தமும், அதிலிருந்து கிளம்பிய நெருப்புப் பொறியும் குருவியின் கண்ணை உறுத்தின.

"ஐயா கொஞ்சம் வேலையை நிறுத்துங்க. எனக்குக் கண்ணு கூசுது" என்றது குருவி.

அந்தக் கொல்லனோ, " என்னோட வேலையே இதுதான். நீ வேற பக்கமா போ"ன்னு சொன்னார்.

"வேலையை நிறுத்தமாட்டீங்களா? நா நினைச்சா கையிலே இருக்கிற அருவாளோட சேர்த்து, இந்தப் பட்டறையை முழுங்கிடுவேன்" என்றது குருவி.

"ம் இத்துனூண்டு குருவி நீ. ஒனக்கு அவ்வளவு பலமா..? எங்கே முழுங்கு, பாக்கலாம்" என்றார் கொல்லன்.

கோபமாய் எழுந்த குருவி 'ஆ'வெனப் பெரிதாய் வாயைத் திறந்து, அருவாளோட சேர்த்து, மொத்தப் பட்டறையையும் விழுங்கியது.

கொல்லன் பயந்து போய் அங்கிருந்து சென்றுவிட்டார்.

ஒரே நேரத்தில் வயிறு முட்டமுட்ட நிறைய முழுங்கியதால், குருவிக்கு ஏப்பமாக வந்தது. திடீரென்று ஒரு பெரிய ஏப்பம் விட்டது குருவி. அவ்வளவுதான், வயிற்றுக்குள் இருந்த எல்லாமும் வெளியே வந்துவிட்டன. ,குரங்குகள் வெளியே வந்ததும் ஓடிவிட்டன. இப்போது குருவிக்கு வயிறு காலியாகிவிட்டது. குருவிக்கு மீண்டும் ஒரே பசி. அதற்குள் உணவு தேடிச் சென்ற அம்மா குருவி இரையோடு வந்து சேர்ந்தது. அது இரையைக் கொடுத்ததும், குருவிக்குஞ்சு வேகவேகமாக்ச் சாப்பிட்டது. "அவ்வளவுதானா, எனக்கு இன்னும் பசிக்குதே" என்றது குருவிக் குஞ்சு.



"சற்று பொறு. நான் உண வோடு வருகிறேன்" என்று பறந்துச் சென்றது அம்மா குருவி.

அம்மா குருவி சென்றதும், குட்டிக் குருவி அண்டா பொங்கல் எங்கேயாவது கிடைக்குமா என்று தேடப் போனது. (முற்றும்)




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 54 - உரோமப் பேரரசன் குளோடியஸ் அவனது நான்காவது மனைவியினால் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டதை அடுத்து அவனது மகன் நீரோ ரோமப் பேரரசனா னான்.
- 1492 - கொலம்பசும் அவரது குழுவினரும் பகாமாசில் தரையிறங்கினர்.
- 1582 - கிரெகொரியின் நாட்காட்டி அறிமுகப்படுத்தப் பட்டதை அடுத்து இத்தாலி, போலந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் புதிய நாட்காட்டியில் இவ்வாண்டின் இந்நாள் இடம் பெறவில்லை.
- 1792 - வெள்ளை மாளிகைக்கான அடிக்கல் வோஷிங்டன், டிசியில் இடப்பட்டது.
- 1884 - அனைத்துலக நேரம் கணிக்கும் இடமாக லண்டனில் உள்ள கிறீனிச் தெரிவு செய்யப்பட்டது.
- 1885 - ஜோர்ஜியா தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 1917 - யாழ்ப்பாணம் மாநகராட்சிப் பகுதி மத்திய, மேற்கு, கிழக்கு என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன.
- 1923 - துருக்கியின் தலைநகர் இஸ்தான்புலிருந்து அங்கா ராவுக்கு மாற்றப்பட்டது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: புதிய இத்தாலிய அரசு ஜேர்மனி மீது போரை அறிவித்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: லாத்வியாவின் தலைநகர் ரீகா சோவியத்தின் செஞ்சேனையினால் கைப்பற்ற ப்பட்டது.
- 1953 - இலங்கைப் பிரதமர் பதவியை டட்லி சேனநாயக்கா துறந்தார்.
- 1970 - பிஜி ஐக்கிய நாடுகள் அவையில் இணைந்தது.
- 1972 - உருகுவே விமானம் ஒன்று ஆர்ஜெண்டீனாவுக்கும் சிலிக்கும் இடையில் அந்தீசு மலைகளில் மோதியது. டிசம்பர் 23 ஆம் நாள் 45 பேர்களில் 16 பேர் மட்டும் மீட்கப்பட்டனர்.
- 1990 - சிரியப் படைகள் லெபனான் மீது தாக்குதலை ஆரம்பித்தது.

### பிறப்புகள்

- 1911 - அசோக் குமார், இந்திய நடிகர் (இ. 2001)
- 1925 - மார்கரெட் தாட்சர், ஐக்கிய இராச்சியத்தின் முன்னாள் பிரதமர (இ. 2013)
- 1948 - நுஸ்ரத் பதே அலிகான், பாகிஸ்தானியப் பாடகர் (இ. 1997)
- 1982 - இயன் தோப், ஆஸ்திரேலிய நீச்சல் வீரர்

### இறப்புகள

- 54 - குளோடியஸ், உரோமப் பேரரசன் (பி. கிமு 10)
- 1911 - நிவேதிதா, ஐரிய சமூகப் பணியாளர், எழுத்தாளர், ஆசிரியை (பி. 1867)
- 1987 - கிஷோர்குமார், இந்தி பின்னணிப் பாடகரும், நடிகரும், (பி. 1929)

சந்தோசமாக இருக்கும் நேரத்தில் குறுக்கே வந்து நிற்கும் முற்றுப்புள்ளி மனச்சாட்சி.
— ஸ்ராலின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தன் இனம் அழிக்கும் கோடரிப் பிடிகள்

இரண்டு பெரிய மரங்கள் தமக்குள் பேசிக் கொண்டன. ஆகா! எவ்வளவு மகிழ்வாக இருக்கிறது. எங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை. நாங்கள் மிகுந்த மகிழ்வாக தொடர்ந்தும் இருக்கலாம். இப்படியாக அந்த மரங்கள் பேசி சில மணி நேரமானதும் ஒருவன் கோடரியுடன் அங்கே வருகிறான்.

தான் கொண்டு வந்த கோடரியை ஒரு மரத்தில் சரித்து வைத்துவிட்டு மரம் வெட்டுவதற்காகத் தன்னை ஆயத்தம் செய்கிறான்.

அப்போது அந்த மரங்கள் மீண்டும் பேசிக் கொண்டன. இன்னும் சில மணி நேரத்தில் எங்கள் உயிர்கள் பறிபட்டுப் போகும். அதோ கோடரி! அதற்குத் துணை கோடரிப்பிடி. என்ன செய்வது? எம் இனம்தான் எங்களுக்கு எதிரி. தானும் அழிந்து எங்களையும் அழிக்கின்ற இந்தக் கொடுமை என்றுதான் தீருமோ? இப்படி அந்த மரங்கள் பேசிக்கொள்ளவும் மரம்வெட்டி அவற்றைத் தறிக்கவும் சரியாக இருந்தது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலையுடன் தொடர்புபடுத்தி கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) கைது செய்யப்பட்டுள்ளார்.

பிள்ளையானின் கைது என்பது சாதாரணமானது அன்று. அதற்குள் ஒரு பெரும் செய்தி உள்ளது. அதாவது இலங்கையில் சட்டம், நீதி ஒழுங்காக இருக்கிறது. அதனை நாட்டின் புதிய அரசாங்கம் சரியாக அமுல்படுத்தி வருகிறது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு அமைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த நடவடிக்கையில் ஒரு கட்டமே கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் பிள்ளையானின் கைதாகும் என்ற அறிவிப்பு சர்வதேசத்துக்கு ஏவப்படும்.

அதேநேரம் தமிழர்களைக் கொன்ற பெரும்பான்மையினரை காப்பாற்றுவதற்கு உள்ளகப் பொறிமுறை போதுமானது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷவை விசாரிப்பது என்றாலும் அவருக்குரிய கௌரவம் தாராளமாக வழங்கப்படும். கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்து விசாரித்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை.

ஆனால் பிள்ளையானின் கைது என்பது விலங்கிட்டதாக இருப்பதைப் பார்க்கும் போது, ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை என்பதற்கப்பால், விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து சிங்களவர்களுக்கு நீங்கள் செய்தவற்றுக்கு இப்படித்தான் தண்டனை வழங்கப்படும் என்பதைக் குறிப்பால் உணர்த்துவதாகவும் பிள்ளையானின் கைதைப் பார்க்கமுடியும்.

எதுவாயினும் போர்க்குற்ற விசாரணை என்பது படைத்தரப்பை பாதுகாப்பதாகவும் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு தண்டனை வழங்குவதுமாகவே இருக்கப் போவது தெரிகிறது.

ஆக, போர்க்குற்ற விசாரணை படையினருக்கு பொது மன்னிப்பாகவும் முன்னாள் போராளிகளுக்கு கடூழிய சிறைத் தண்டனைகளாகவும் அமையும்.

அதற்கான ஏற்பாடுகளையே கொழும்புத் தமிழ் அரசியல் தலைமையும் கனகச்சிதமாக செய்து முடித்துள்ளது.

சர்வதேச விசாரணை வேண்டாம் என்று மறுதலித்த இலங்கை அரசு, போர்க்குற்றம் என்றால் புலிகள் செய்தவையும் அடங்கும் என்பதில் மிகவும் இறுக்கமாக இருக்கும். அதேநேரம் விடுதலைப்புலிகள் அமைப்பை வேரோடு அழிப்பதற்கு புலிகள் அமைப்பில் இருந்த கோடரிப்பிடிகளை தமக்குச் சாதகமாக்கிய இலங்கை ஆட்சியாளர்கள் இப்போது உக்கிப்போன கோடரிப் பிடிகளை விறகாக்கி எரிமூட்ட ஆயத்தமாகி விட்டனர்.

# இலவச கல்வி மற்றும் சுகாதாரத்துக்கு வரவு செலவுத் திட்டத்தில் நிதி அதிகரிப்பு

## ஜனாதிபதி அறிவிப்பு

(நீர்கொழும்பு)

நாட்டின் இலவசக் கல்வி மற்றும் இலவச சுகாதாரத்துறைக்காக ஒதுக்கப்படும் நிதி அடுத்த வரவு செலவு திட்டத்தில் மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தற்போது இலவச சுகாதாரம் மற்றும் இலவசக் கல்விக்காக அரசாங்கம் பெருமளவு நிதியை ஒதுக்கீடு செய்துள்ள அதேநேரம் நாட்டு மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையைப் போன்று நாட்டில் உள்ள பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியையும் வழங்குவது புதிய அரசாங்கத்தின் நோக்கமாகும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

நீர்கொழும்பில் நேற்று பொது வைத்தியசாலையின் புதிய கட்டிடத் தொகுதியை திறந்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். 200 மில்லியன் ரூபாய் செலவில் சகல வசதிகளுடன் இந்த புதிய கட்டிடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இலங்கை பொறியியலாளர்களின் திறமையை வெளிப்படுத்தி 50 நாட்களில் இக்கருத்திட்டம் நிறைவுபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது, 2000ஆம் ஆண்டு காலப் பகுதியில் நீர்கொழும்பு மற்றும் கம்பஹா பிரதேச வைத்தியசாலை நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட கட்டிடங்கள் முறையான நியமங்களைக் கொண்டிருக்கவில்லை என்றும் இந்த நிலைமை நீர்கொழும்பு பொது வைத்தியசாலையின் இந்த புதிய கட்டடத் தொகுதியை திறந்து வைப்பதன் மூலம் நிவர்த்திக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

சுகாதாரம், கல்வி உள்ளிட்ட சேவைகளில் மாகாண சபையும் அரசாங்கமும் பிரிந்து செயற்பட முடியாது எனத் தெரிவித்த ஜனாதிபதி, அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் சகல தரப்பினரும் தமது பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும் எனத் தெரிவித்தார். (எ-11)

# வடக்கு வர்த்தகர்களுடன் இணைந்து அபிவிருத்தியை மேம்படுத்த வேண்டும்

## தமிழ்நாட்டு வர்த்தகர்கள் விருப்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் உள்ள வர்த்தகர்களுடன் இணைந்து பல்வேறுதுறை சார்ந்த வர்த்தக நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிப்பதற்கு தமிழ்நாட்டு வர்த்தகர்கள் ஆர்வமாகவுள்ளனர் என யாழ்.இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்நாட்டிலிருந்து முதல் முறையாக யாழ்.மாவட்டத்துக்கு 44பேர் கொண்ட வர்த்தகர் குழுவினர் வருகை தந்திருந்தமை வரவேற்கத்தக்க விடயம் ஆகும்.

போருக்கு பின்னரான காலப்பகுதியில் வட மாகாணத்தை பொருளாதாரம், வாழ்வாதார ரீதியில் அபிவிருத்தி செய்வதை முக்கிய நோக்கமாக கொண்டு அவர்களின் வருகை அமைந்திருந்தது.

குறிப்பாக சிறிய, நடுத்தர கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கே அவர்கள் ஆர்வமாக உள்ளனர். அதன் மூலம் பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுக் கொடுப்பதோடு பொருளாதார ரீதியில் ஒரு நிலையான வளர்ச்சியை அடையக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் இங்கு வருகை தந்த வர்த்தகர் குழுவினர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை திண்டுக்கல் மாவட்டத்தில் சந்தித்து வட மாகாணத்தில் எவ்வாறான வர்த்தகங்களை ஆரம்பிக்க முடியும் என்ற பட்டியலை தயாரித்து எமக்கு அது தொடர்பில் அறிவிக்கவுள்ளனர்.

அதன் மூலம் இங்கிருக்கும் வர்த்தகர்களுடன் கலந்துரையாடி வெகு விரைவில் நிலையான அபிவிருத்தியை பெறக்கூடிய வர்த்தகங்களை ஆரம்பிக்க முடியும்.

மேலும் அடுத்த வருடம் ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் இந்தியாவிலிருந்து ஏறத்தாழ 10 வர்த்தக நிறுவனங்கள் கலந்து கொள்ளவுள்ளன.

தமிழகத்துக்கும் வட மாகாணத்துக்கும் இடையிலான வர்த்தக உறவை பலப்படுத்த வேண்டும் என்பது எமது முக்கிய குறிக்கோள் ஆகும். வடக்கில் பொருளாதார வசதிகளையும் தொழில் வாய்ப்புக்களையும் அதிகரிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் நாம் தொடர்ந்து மேற்கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## மின்னல் தாக்கி பசுமாடு பலி

(யாழ்ப்பாணம்)

இடி மின்னல் தாக்கியதில் சினையுடன் கூடிய பசுமாடு ஒன்று பரிதாபமாக துடிதுடித்து உயிரிழந்தது.

நேற்று திங்கட்கிழமை பகல் 10.15 மணியளவில் மல்லாகத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மல்லாகம் நீலியம்பனை பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் உள்ள வயல் வெளியில் மேய்ந்து கொண்டிருந்த பசுமாடே பெரும் சத்தத்துடன் இடி மின்னல் தாக்கியதில் உயிரிழந்தது.

உயிரிழந்த பசுமாடு சுமார ஐம்பத்தையாயிரம் ரூபாய் பெறுமதியானது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-11)

## திடீர் காய்ச்சல்; யுவதி மரணம்

சங்கானைப் பகுதியில் ஒருவார காலமாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த யுவதி சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

சங்கானை ரி. சி ஒழுங்கையை சேர்ந்த பாலசுந்தரம் தர்சினி (வயது 30) என்ற யுவதியே உயிரிழந்தவராவார்.

கடந்த 10 நாட்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இவர் சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 2 நாட்கள் சிகிச்சை பெற்று வந்துள்ளார். நேற்று முன்தினம் திடீரென காய்ச்சல் ஏற்பட்டதும் சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக இரவு 7.30 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒரு மணி நேரத்தின் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்

குறித்த மரணம் தொடர்பாக நீதிமன்ற பணிப்புரைக்கமைய யாழ் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமாரினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பிரேத பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (எ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



இதயமே வெல்லும். மூளையல்ல. புத்தகங்களும் புலமையும் யோகமும் தியானமும் ஞானமும் அனைத்தும் அன்புடன் ஒப்பிடும்போது தூசிக்கு ஒப்பானவை. அன்பே அருட்சக்தி. அன்பே பக்தி. அன்பே ஞானம். அன்பே முக்தி. இதுவே வழிபாடு. மனித உருவில் வாழும் இறைவனின் வழிபாடு.

மனதிற்குப் பிடித்த வேலையை பரமமுட்டாள்கூட செய்துவிடலாம். ஆனால் எந்த வேலையையும் தனக்குப் பிடித்ததாக மாற்றி அமைத்துக்கொள்பவனே புத்திசாலி.

பரந்த மனம் கொண்ட நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் எல்லாவிதமான போக ஆசைகளையும் உதறித்தள்ளிவிட்டு வறுமை, அறியாமை ஆகிய சுழல்களில் மேலும் மேலும் மூழ்கிக்கொண்டிருக்கின்ற கோடிக்கணக்கான நம்நாட்டு மக்களின் நன்மையை மனம், சொல், உடல்மூன்றாலும் எப்போது விரும்புவார்களோ அப்போதுதான் பாரதம் விழிப்புறும்.

நான் வேதாந்தியுமல்ல, தத்துவ ஞானியுமல்ல, மகானும் அல்ல. நான் ஓர் ஏழை. ஏழைகளை நேசிக்கிறேன்.

அதிவேகத்தில் வேலைசெய்து கொண்டு போ. ஒருபோதும் பயம் வேண்டாம். நானும் வேலை செய்யத் தீர்மானித்துவிட்டேன். உடல் என்றாவது அழிய வேண்டியதுதான். அதில் சந்தேகமே இல்லை. அதை ஏன் சோம்பலில் கிடந்து அழியவிடவேண்டும்? துருப்பிடித்து தேய்ந்து போவதைவிட உழைத்துத் தேய்வதே நல்லது. நான் இறக்கும்போதும் கவலைப்படாதே. என் அஸ்தியே அற்புதங்களைச் செய்யும்.

செயல்களத்தில் அதிகமான உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது, வேலையைப் பாதிக்கும். வஜ்ரத்தைப் போல உறுதி, மலரைப்போல் மென்மை. இதுதான் சாரம்.

# 2015 முரளி கிண்ணம்

## கொழும்பு ஆனந்தா, நிட்டம்புவ மகளிர் சம்பியன்















2015 ஆம் ஆண்டு முரளி கிண்ணத்தில் ஆண்களுக்கான போட்டியில் கொழும்பு ஆனந்தாக்கல்லூரியும் பெண்களுக்கான போட்டியில் திட்டம்புவ மகளிர் அணியும் சம்பியனாகின.

முரளி கிண்ணக்கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

08 அணிகள் மோதிய பெண்களுக்கான இறுதிப் போட்டியில் கொழும்பு மாவட்ட பாடசாலைகளின் தெரிவு அணியும் நிட்டம்புவ அணியும் மோதிக்கொண்டன. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கொழும்பு மாவட்ட பாடசாலைகளின் தெரிவு அணி துடுப்பெடுத்தாட தீர்மானித்து இதன் படி நிட்டம்புவ ஆணி களத்தடுப்பிலீடுபட்டது.

அதனடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து ஓட்டங்களை 109 பெற்றதுகொழும்பு மாவட்ட பாடசாலைகளின் தெரிவு. 110 என்ற வெற்றியிலக்கோடு துடுப்பெடுத்தாடிய நிட்டம்புவ அணி 19.1 ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 112 ஓட்டங்களை பெற்று வெற் றியை தனதாக்கியது. தொடர்ந்து மாலை ஆண்களுக்கான இறுதிப் போட்டிகள் இடம்பெற்றன.

16 அணிகள் பங்கு பற்றிய ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணியும் காலி றிச்மன்ட் கல்லூரி அணியும் மோதிக்கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆனந்தாக்கல்லூரி அணி துடுப்பெடுத்தாட தீர்மானித் தது. காலி றிச்மன்ட் வித்தியாலய அணி களத்தடுப்பிலீடுபட்டது.

அதனடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்தது 137 ஓட்டங்களைபெற்றது கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி. 138 என்ற வெற்றியிலக்கோடு துடுப்பெடுத்தாடிய காலி றிச்மன்ட் வித்தியாலய அணி 18.5 ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 112 ஓட்டங்களை பெற்றது. இதனடிப்படையில் கொழும்பு ஆனந்தாக்கல்லூரி அணி வெற்றியை தனதாக்கியது.

இதனடிப்படையில் பெண் களுக்கான இறுதிப்போட்டியில் இரண்டாமிடம் பெற்ற கொழும்பு மாவட்ட பாடசாலைகளின் தெரிவு அணி மற்றும் 2015ஆம்ஆண்டுமுரளிகிண்ண வெற்றியாளரான நிட்டம்புவ அணி ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் இரண்டாமிடம் காலி றிச்மன்ட் கல்லூரி அணி மற்றும் 2015 ஆம் ஆண்டு முரளிகிண்ண வெற்றியாளரான கொழும்பு ஆனந்தாக்கல்லூரி அணிகளுக்கான வெற்றிக் கிண்ணங்கள் , சான்றிதழ்களை முத்தையா முரளிதரன் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகரக துணைத் தூதுவர் மற்றும் விருந்தினர்கள் வழங்கி வைத்தனர். (க-281)

## மானிப்பாய் இந்து வெற்றி

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டத்தில் 14 வயதுப்பிரிவினருக்கான ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது. ஏனைய பிரிவுகளில் (16வயது, 18வயது, 20 வயது) மானிப்பாய் இந்துக்கல்லூரி வெற்றி பெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெற்ற இந்த இறுதியாட்டங்களில் 14 வயதுப் பிரிவினருக்கான ஆட்டம் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் சமநிலையில் முடிவடைந்தது.

16 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 5:0 என்ற கோல் கணக்கிலும் 18 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 3:1 என்ற கோல் கணக்கிலும் 20 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 5:1 என்ற கோல் கணக்கிலும் வெற்றிபெற்றது. (க)

## திக்கம் இளைஞரை வென்றது வல்வெட்டித்துறை வல்வை



மைலோ கிண்ண உதைபந்தாட்ட தொடர் 2015 நேற்று கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

மைலோ நிறுவனத்தின் அனுசரணையில் தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக இந்த ஆண்டும் யாழ் மாவட்ட ரீதியாக 100 அணிகள் பங்கேற்கும் உதைபந்தாட்ட தொடர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த தொடரில் மூன்றாவது போட்டியில் வல்வெட்டித்துறை வல்வை விளையாட்டுக்கழகம் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து மோதியது. விறுவிறுப்புக்கு பஞ்சமின்றி நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் எதுவித கோல்களையும் பெறாது ஆட்டம் சமநிலையில் முடிவு பெற்றது. சமநிலை தவிர்ப்பு உதையில் 3 - 1 என்ற கோல் கணக்கில் வல்வெட்டித்துறை வல்வை விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. இவ்வெற்றியின் மூலம் வல்வை விளையாட்டுக்கழகம் 100 அணிகளில் அடுத்த சுற்றுக்கு தெரிவாகவுள்ள 12 அணிகளில் ஒன்றாக தெரிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

## தமிழ் அரசி...

விடுதலையை வேண்டி உண்ணாவிரதப் போராட்டத்தை 12.10.2015 திங்கட்கிழமை ஆரம்பித்துள்ளனர். சுமார் 250 கைதிகளுக்கு மேல் சாவா? வாழ்வா? என்னும் போராட்டத்தில் இறங்கவுள்ளனர்.

யுத்தம் முடிவடைந்து 6 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. இந்நிலையில், தற்போது நல்லாட்சி நடந்துகொண்டிருக்கும் காலம் எனக் கூறிக்கொண்டிருக்கும் அரசானது செய்ய வேண்டிய நல்லிணக்க வேலைகளில் ஒன்றான அரசியல் கைதிகள் விடயத்தில் பாராமுகமாக இருந்த காரணத்தினாலேயே கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு அரசாலேயே தள்ளப்பட்டுள்ளார்கள்.

பல தடவைகள் அதிகாரத்தில் இருக்கும் அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி பல மனித உரிமை அமைப்பினரும் மற்றும் சமய குருமார்களும் கடிதங்கள் அனுப்பி இருந்தார்கள்.

அரசியல்வாதிகளான எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், தேசிய கலந்துரையாடல் அமைச்சர மனோ கணேசன், வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் உட்பட பலரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட அதிகாரத்தல் இருக்கும் அதிகாரிகளை நேரில சந்தித்தும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திக் கூறியிருந்தார்கள்.

அத்தோடு மன்னார் ஆயர் இராயப்பு யோசப்பும் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக வந்தவுடன் நேரில் சந்தித்து அரசியல் கைதிகளை விடுதலை செய்யும்படி கேட்டுக்கொண்டார். இதன்போது 6 மாத காலத்திற்குள் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்வதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்குறுதியளித்திருந்தார். ஆனால், மதகுருவிற்குக் கொடுத்த வாக்கைக்கூட இதுவரை ஜனாதிபதி மைத்திரிபால நிறைவேற்றவில்லை.

அதேபோன்று சிறையில் வாழும் அரசியல் கைதிகள் தங்களின் கையெழுத்திட்டு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு ஊடாக ஜனாதிபதியிடம் விடுதலை செய்யுமாறு கேட்டிருந்தனர்.


01.10.2015 அன்று சிறுவர் தினத்தை சந்தோஷமாகக் கொண்டாட முடியாத அரசியல் கைதிகளின் பிள்ளைகள் ஊர்வலமாகச் சென்று வடக்கு மாகாணசபை முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஊடாக ஜனாதிபதிக்கு தங்களின் தந்தையர்களை விடுதலை செய்யும்படி மகஜர் அனுப்பி கேட்டுக்கொண்டார்கள். இப்படியான பல முயற்சிகள் செய்தும் பலன் அளிக்கவில்லை. அப்படியிருந்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது நம்பிக்கை வைத்து தங்கள் விடுதலையை வலியுறுத்தி அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கின்றனர்.

யுத்தம் முடிவடைந்த அந்தக் காலப்பகுதியில் 14 ஆயிரம் போராளிகளுக்கு விடுதலைக்கு வழிவகுத்து கொடுத்தது போன்று இப்போது சிறைகளிலே வாடிக்கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என்பதே அரசியல் ஆய்வாளர்களின் கருத்து. அதேபோன்று தான் சர்வதேச முக்கிய பிரதிநிதிகளும் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர்.

ஆனால் இப்படியான கருத்துக்களுக்கு கூட மதிப்பளிக்காமல் நல்லாட்சி நடப்பதாக தெரிவிக்கும் ஆட்சியாளர்களின் கருத்துக்கள் ஏற்றதாக தெரியவில்லை. மீண்டும் மீண்டும் தமிழ் மக்களின் உணர்வுகளை புரிந்துகொள்ளாத ஆட்சியாளர்களாகவே இருக்கின்றார்கள். தமிழ் அரசியல் கைதிகளுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ் மக்களையே ஏமாற்றும் ஒரு வாடிக்கையாகவே கொண்டுள்ளார்கள். இவ்வாறு இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)


**வலம்புரி**
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## டேவிட் ஐயா காலமானார்



(யாழ்ப்பாணம்)

காந்தியவாதியும் தமிழர் உரிமை சார் விடயத்தில் தன்னை அர்ப்பணித்து உழைத்தவருமாகிய சொலமன் அருளானந்தம் டேவிட் நேற்று முன்தினம் இரவு கிளிநொச்சியில் காலமானார். அவருக்கு வயது 90.

மிகச்சிறந்த கட்டிடக் கலைஞராகிய டேவிட், காந்தியத்தின் மீது ஈடுபாடு கொண்டிருந்தார். ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகக் கொண்ட டேவிட் அவர்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் கற்றார்.

வெலிக்கடைச் சிறையிலும் இவர் அடைபட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவரின் இறுதிக்கிரியைகள் நாளை கிளிநொச்சியில் நடைபெறும். (ந)

## கடும் கோபத்தில்...

நடைமுறைப்படுத்தும் பங்காளரான இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் பாலியல் இலஞ்சம் கோருவதாக, கணவனை இழந்த பெண் ஒருவர் எழுத்து மூலம் முறைப்பாடு செய்துள்ளார்.

எனினும், இத்தகைய 30 வரையான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக, கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்க செயலர் தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடு குறித்த தகவல் கடந்தவாரம் புதுடெல்லிக்கு கிடைத்தது.

இது சவுத் புளொக்கிற்கு கடுமையான கோபத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் இந்த விவகாரத்தை தீவிரமாகவும் எடுத்துக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து, விசாரணைகளை ஆரம்பிக்கும்படி கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹாவுக்கு உடனடியாக, பணிப்புரை விடுத்துள்ளார் இந்திய வெளிவிவகாரச் செயலர் எஸ்.ஜெயசங்கர்.

அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை எதிர்கொள்ளும் அதிகாரிகள் எவரையும், விசாரணைகள் முடியும் வரையில் நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கக் கூடாது என்று, இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹா, இலங்கை வெளிவிவகார அமைச்சிடம் கோரியுள்ளார்.

அதிகாரிகள் தப்பிச் செல்வதை நாங்கள் விரும்பவில்லை. எனவே இலங்கை வெளிவிவகார அமைச்சு மற்றும் அவர்களின் குடிவரவு அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்துள்ளோம் என்று இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை, இந்த விசாரணைகளை மேற்கொள்ள எந்த காலக்கெடுவும் விதிக்கப்படவில்லை என்றும், எனினும், விசாரணைகள் விரைவாகவும், முழுமையாகவும் நடத்தப்படும் என்றும் மற்றொரு இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இத்தகையதொரு குற்றச்சாட்டு முதல் முறையாக எழுந்திருப்பதாகவும், இது புதுடெல்லியின் மோடி அரசாங்கத்தை பெரிதும் சீற்றத்துக்குள்ளாக்கியிருப்பதாகவும் புதுடெல்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

## வெட்டுப்புள்ளி...

மாவட்ட ரீதியான வெட்டுப்புள்ளிகள் 151 முதல் 160 வரையில் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதிகளவில் புள்ளிகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும் இதனை குறைக்க வேண்டுமெனவும் ஆசிரியர் சங்கங்களும் பெற்றோரும் கல்வி அமைச்சரிடம் கோரியிருந்தனர்.

இந்த கோரிக்கையின் அடிப்படையில் வெட்டுப் புள்ளிகள் குறைக்கப்படும் என மக்கள் மத்தியில் நிலவி வரும் கருத்து குறித்து பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம், சிங்கள ஊடகமொன்று கேள்வி எழுப்பிய போது, அவர் அதனை மறுத்துள்ளார்.

வெட்டுப் புள்ளிகள் பற்றிய தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## நீதிமன்ற வளாக வீதி...

மனு விண்ணப்பம் கடந்த 7ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது,

பொதுச்சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம், சட்டவிரோத கூட்டம், நபர்களுக்கு ஏற்பட்ட காயங்கள், நீதிமன்று முன்பாக மேற்கொண்ட கலகம் ஆகியவற்றை கருத்திற் கொண்டு நீதி நிர்வாகத்தின் கண்ணியத்தையும் நீதிபதிகள், சட்டத்தரணிகள், உத்தியோகத்தர்கள், சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் சிறப்பு சட்டத்தரணிகளின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு நீதிபதி மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்

மேலும் யாழ் நீதிமன்ற வளாகத்துக்கு அருகே 200 மீற்றருக்கு உட்பட்ட பகுதிகளில் அமைதியாகவோ வன்முறையாகவோ ஊர்வலங்கள் நடத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்ற முன் வீதிகள் அருகில் இணையும் கண்டி வீதி, நீதிமன்றுக்கு பின்னேயுள்ள குறுக்கு வீதிகள் ஆகியவற்றில் சகலவிதமான ஊர்வலங்கள் நடாத்துவதற்கு மறு அறிவித்தல் வரும் வரை அல்லது நீதிமன்ற கட்டட தாக்குதல் வழக்கு முடியும்வரை தடைசெய்யப்பட்டுள்ளது .

மத்திய கல்லூரி, தேவாலயம் ஆகியன பொது மக்களின் பாவனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் கண்டி வீதியில் இருந்து 150 மீற்றர் வரையான வீதி பாவனைக்கு தடை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்ற உத்தியோகத்தர் ஆகியோருக்கு நீதிமன்ற நேரத்தில் அவ் வீதி பாவனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவர் உத்தரவிட்டார். (எ-9)

## ஜஸ்ரின்...

சௌந்தரநாயகம் ஆண்டகையால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும்.

யாழ்.மறைமாவட்டத்தின் ஆயராக நியமிக்கப்பட்டுள்ள அருட்தந்தை ஜஸ்ரின் பி.ஞானப்பிரகாசம் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகியுவற்றின் அதிபராகக் கடமையாற்றியதுடன் யாழ்.ஆயர் இல்லத்தின் குரு முதல்வராகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்ககது. (ந)

## கீரிமலை...

குறிப்பிட்ட இடத்தில் இருந்த மிகுதியான இரண்டு வீடுகள் மற்றும் இரண்டு தனியாருக்கு சொந்தமான காணிகளும் வலி வடக்கு பிரதேச செயலாளர் க.ஸ்ரீமோகனனிடம் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து வீடுகள் காணிகள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வில் வலி வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சோ.சுகிர்தன், பிரதேச செயலக அபிவிருத்தி அலுவலர்களும் கலந்து கொண்டார்கள். (எ-4)

## இராணுவத்தை காக்க...

போரின் போது மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் இலங்கை இராணுவம் மீதான போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஆராய கலப்பு விசாரணைப் பொறிமுறையை உருவாக்க ஐ.நா அழுத்தம் கொடுத்தாலும் இன்னும் அது எவ்வாறான பொறிமுறையாக இருக்க வேண்டும், யாரை உள்ளடக்குவது என்ற தீர்மானங்கள் எடுக்கப்படவில்லை.

அரசாங்கம் இந்த விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து வருகிறது. இறுதிப் போரில் மோசமான மனித உரிமை மீறல்கள் எவையும் இடம் பெறவில்லை என்பதே உண்மையாகும்.

எனினும் ஒருசில சந்தர்ப்பங்களில் ஏதேனும் நடந்திருந்தால் என்ற தர்க்கத்துக்கு அமையவே அரசாங்கம் இந்த விசாரணைகளை மேற்கொள்கிறது.

அதேபோல் எமது இராணுவத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பில் எமது இராணுவத்தை நியாயப்படுத்த வேண்டும். இந்த பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுகளில் தத்தமது தரப்பை நியாயப்படுத்த ஒவ்வொருவரும் முயற்சிக்கின் றனர். எனினும் இராணுவத்தை பாதுகாக்கவும் இராணுவத்தை நியாயப்படுத்தவும் நாம் மட்டுமே உள்ளோம்.

ஆகவே எமது தரப்பை பலப்படுத்த வேண்டியது எமது கடமையாகும். அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

அந்த வகையில் போர்க்குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் இராணுவ தரப்பிற்கான சட்ட உதவிகளை வழங்கவும், அதற்கான செலவுகள் அனைத்தையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ளவும் தயாராக உள்ளது.

அதேபோல் எமது சட்ட வல்லுனர்களை இந்த செயற்பாடுகளுக்கு பயன்படுத்தவும் தயாராக உள்ளோம்.

ஆகவே இந்த சிக்கல்களை எதிர்கொள்ளும் இராணுவ தரப்பினர் எந்த சந்தர்ப்பத்திலும் எம்மை நாட முடியும்.

ஜெனிவாவில் நிறைவேற்றியுள்ள தீர்மானம் தொடர்பில் பாதுகாப்புத் தரப்பிற்கு தெளிவூட்டும் பொறுப்பை ஜனாதிபதியும் பிரதமரும் எனக்கு கொடுத்துள்ளனர்.

அதற்கமைய நான் இராணுவ அதிகாரிகளுடனும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருடனும் இணைந்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றேன்.

இந்த விடயங்களை சமாளித்து எமது இராணுவத்தை பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

மேலும் இப்போது இலங்கை எதிர்கொள்ளும் சிக்கல் போர்க்குற்றம் அல்ல. அதையும் தாண்டி நாட்டில் நல்லிணக்கத்தையும் நிரந்தர சமாதானத்தையும் பலப் படுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## இலங்கை உயர்மட்ட குழு...

கப்பட்ட உண்மை, நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ளவே இலங்கை அரசின் உயர் மட்டக் குழு அங்கு செல்லவுள்ளது.

இலங்கையில் உருவாக்கப்படவுள்ள இந்த உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவில், மதத் தலைவர்களைக் கொண்ட ஒரு கருணைச் சபையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடுகளை வழங்குவதற்கான ஒரு குழுவும் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன் இந்த உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு உட்பட்டே காணாமற் போனோரைக் கண்டுபிடிப்பதற்கான நிரந்தர பணியகமும் அமைக்கப்படவுள்ளது.

காணாமற்போனோர் குறித்த பணியகத்துக்கு அனைத்துலக செஞ்சிலுவைக் குழுவின் ஆலோசனையும் பெறப்படவுள்ளது. இது குறித்த பேச்சுக்கள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையே, உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவையும், அதன் கீழ் அமைக்கப்படும் பொறிமுறைகளையும் உருவாக்குவது தொடர்பான சட்டமூலங்கள், அடுத்த ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்திற்கு முன்னதாக, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-11)

## தொடர் விசா...

பிரிவிற்கு அழைக்கப்பட்டார்.

அதற்கமைய நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் பிள்ளையான் குற்றப் புலனாய்வு பிரிவில் ஆஜராகிய நிலையில் முதற்கட்ட வாக்குமூலம் பெற்றுக் கொண்டதன் பின்னர் அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட முன்னாள் முதலமைச்சரை தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை குறித்த கொலை தொடர்பில் தமிழீழ மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளர் பிரதிப் மாஸ்டர் எனப்படும் எட்வின் சில்வா மற்றும் ரங்கசாமி கனகநாயகம் என்ற இருவரும் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# தமிழ்க் கை...

ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் வருமாறு, ஜனாதிபதி அவர்களே, சிறைச்சாலைகளில் உள்ள தமிழ்க் கைதிகள், தங்களை நீண்ட காலமாகத் தடுத்து வைத்திருப்பதை வெளிப்படுத்தும் முகமாக இன்று (நேற்று) உண்ணா விரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்திருக்கின்றார்கள்.

கடந்த காலங்களில் இடம்பெற்றதைப்போன்று, இந்த உண்ணா விரதத்தை சிறைச்சாலை அதிகாரிகள் கடுமையான முறையில் கையாளக்கூடும் என்று அஞ்சப்படுகின்றது.

விசாரணைகளின்றி ஆண்டுகள் கணக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள துரதிர்ஷ்டவசமான மனிதர்களின் இந்த பிரச்சினையானது, ஒரு மனிதாபிமான விடயமாகும். எனவே, இரக்கத்துடனும், அனுதாபத்துடனும் இந்த விடயம் அணுகப்பட வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் இந்தப் பிரச்சினைக்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என உறுதி யளிக்கப்பட்டால், அவர்கள் திருப்தியடைவார்கள் என்று நான் நம்பு கிறேன்.

இது விடயத்தில் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என்பதைத் தங்களின் உடனடி கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

❖என்ன காரணததிற்காக இவரகள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக் கின்றார்கள் என்பதை அவர்கள் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்களை வகைப்படுத்தி பட்டியல் ஒன்றைத் தயாரிக்கலாம். இதனை ஒரு வார காலப்பகுதியில் செய்து முடிக்கலாம்.

❖தகவல் தெரிவிக்கவில்லை என்பது போன்ற சிறிய குற்றங்கள் செய்தார்கள் என்பதற்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து கைதிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்கலாம். அல்லது அவர்களை உடனடியாகப்பிணையில்செல்ல அனுமதிக்கலாம்.

❖வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் உள்ள, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வருவதாக சந்தேகிக்கப்படுகின்ற அனைத்து கைதிகளுக்கும், உரிய வகையில் பிணை வழங்கலாம். நீண்ட காலமாக வழக்கு தாக்கல் செய்யாமல், வெறும் சந்தேகத்தின் அடிப்படையில், ஆட்களைத் தடுத்து வைத்திருப்பது என்பது அவர்களுடைய மனித உரிமைகளை மீறுகின்ற செயலாகும்.

❖சட்டமா அதிபர்திணைக் களத்திற்கும் பொலிசாருக்கும் குறிப்பிட்ட காலப பகுதியில் குற்றப்பத்திரிகைகளைத் தாக்கல் செய்யுமாறு அவசர ஆணையிடலாம். நீண்டகாலமாக அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதனால், நியாயமான முறையில் ஒரு மாதத்திலோ அல்லது இரண்டு மாதங்களிலோ அவர்களுக்கான குற்றப்பத்திரங்களைத்தாக்கல் செய்யலாம்.

❖பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்டுள்ள தாகச் சொல்லப்படுகின்ற ஒப்புதல் வாக்கு மூலம் என்ற ஒரேயொரு சாட்சியத்தின் அடிப்படையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பவர்கள் மற்றும் அவ்வாறான வழக்கு நிலுவையில் உள்ளவர்களுக்குப்பிணை வழங்கலாம.

இவ்வாறான ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில், குற்றம் சாட்டப்பட்டிருப்பதை, சர்வதேச சட்டங்களும், சர்வதேச மற்றும் உள்ளுநர் வழக்கறிஞர்களும், காலத்துக்குக் காலம் மீண்டும் மீண்டும் முகச் சுழிப்புடன் நோக்கியிருக்கின்றனர்.

❖தேவையான ஏனைய சாட்சியங்களுடன் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பவர்களுககுப் போதுமான சட்ட உதவிகளை வழங்கி, முன்னுரிமை அடிப்படையில் அவர்களுடைய வழக்குகளை முடிவுக்குக் கொண்டு வரலாம். இதற்கு காலக் கெடு ஒன்ற நிர்ணயிப்பது பொருத்தமானதாக இருக்கும்.

❖ நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுடைய வழக்குகளை நாளாந்த அடிப்படையில் விசாரணை செய்யுமாறு நீதிச் சேவை ஆணைக்குழுவின் ஊடாக நீதிபதிகளுக்குப் பணிப்புரை விடுக்கலாம். அதிகமாகத் தாமதப்படுத்தப்படுகின்ற வழக்குகளில் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்குப் பிணை வழங்குவதற்கான தெரிவை வழங்கலாம்.

தமிழ் சிறைக்கைதிகளின் உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக, அவர்களுடைய பிரச்சினை இரக்கத்துடனும், அனுதாபத்துடனும் அணுகப்படுகின்றது என்ற உத்தரவாதத்தை வழங்குவதற்காக உரிய அவசர நடவடிக்கைகளை எடுப்பீர்கள் என்று நம்புகிறேன் என அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

இக் கடிதத்தின் பிரதிகள் நீதியமைச்சு மற்றும் உச்ச நீதிமன்றங்களின் அமைச்சர் விஜேதாச ராஜபக்சவிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, யாழ்ப்பாணம், அநுராதபுரம், போகம்பரை உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களிலும் சிறைகளில பல ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 200க்கும் மேற்பட்ட தமிழ்க் கைதிகள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)


O/L உடன் 30,000/= உடன் ஆரம்பித்து சுவிஸ்,நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியாவில் மாதம் 3 இலட்சத்துக்கு மேல் உழைக்கக்கூடிய
Business & Hotel Management With ENGLISH COURSE Free
புதிய பிரிவு ஆரம்பம் 15-10-2015, வியாழன் 10 மணி
Leading to University of Sunderland UK
கற்கைநெறிக் காலத்தில் ரூ.15,000 வரை வருமானம்

6 மாதங்களில் விரும்பிய நாடு வெல்லும் 100% உத்தரவாதம்
SIKARAM Any Visa to Any Country
மேலதிக விபரங்களுக்கு www.sikaram.lk
இதுவரை கற்கைநெறியில் இணைந்த 13 பேருக்கு வெளிநாட்டு விசா ஏற்பாடு
MONEY BACK 100% GUARANTEE
3 மாதங்களில் ஆங்கிலத்தில் பேசும் திறன் & தொழில்வாய்ப்பு பெறும் உத்தரவாதம்
077 36 16 798, 021 222 0011
(C-2445)
School of Hospitality &English
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m


## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினசிங்கம் இராஜேஸ்வரி



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் டச்சு வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினசிங்கம் இராஜேஸ்வரி (11.10.2015) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை தில்லையம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இரத்தினசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் சந்திரசேனா, காலஞ்சென்றவர்களான கணநாதன், துரைசிங்கம், மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராஜசிங்கம் (சுவிஸ்), விமலகுமாரி (ஆசிரியை, உடுவில், முருகமூர்த்தி வித்தியாலயம்), ஈசன் (சுவிஸ்), ஜெயம் (லண்டன்), சுகந்தன் (சுவிஸ்), சீலன் (உரிமையாளர் இரத்தினம் கிறீம் கவுஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கலாவதி (சுவிஸ்), தயானந்தம், பாமினி (சுவிஸ்), கீதாஞ்சலி (லண்டன்), கோமளா (சுவிஸ்), காயத்திரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

டச்சு வீதி, உடுவில். (C-2038) தகவல் : குடும்பத்தினர்

# வன்முறைக் கும்பலை கலைப்...

சட்டத்தில் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு ரௌடித்தனத்தில் ஈடுபடும் இளைஞர்கள் இடமளிக்கக் கூடாது என யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் எச்சரிக்கை செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத தின் மீது தாக்குதல் நடத்தியமை, அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை என்ற குற்றச்சாட்டுக்கள் சம்பந்தப்பட்ட 20 வழக்குகளின் சந்தேக நபர்களுக்கான பிணை விசாரணையின் முடிவில் யாழ்ப்பாணம் மேல் நீதி மன்ற நீதிபதி அளித்த தீர்ப்பின்போதே இந்த எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கின்றது.

கடும் நிபந்தனைகளுடன் பிணை வழங்கப்பட்டுள்ள இந்த வழக்குகளில் நீதிபதி இளஞ்செழியன் அளித்துள்ள தீர்ப்பில் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வன்செயல்களில் யாரேனும் ஈடுபட்டால், சம்பவ இடத்திற்கு நேரடியாகச் சென்று, அந்தக் கும்பலைக் கலைப்பதற்கு, மாவட்ட நீதிவானுக்கும் அரச அதிபருக்கும் குற்றவியல் நடவடி சட்டக் கோவையின் 95ஆம் பிரிவின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதே போன்று பொலிஸ் அத்தியட்சகரும் சம்பவ இடத்திற்குச் சென்று கட்டளை பிறப்பிக்க முடியும்.

இந்தச் சட்ட விதியின்படி, நிலைமைக்கு அமைய, தேவை ஏற்பட்டால், பொலிஸாரே கலகக்காரர்களை அல்லது வன்செயல் கும்பலைக் கலைப்பதற்கான கட்டளையைச் செயற்படுத்தும்படி உத்தரவிடுவதற்கு மாவட்ட நீதிபதிக்கும், அரசாங்க அதிபருக்கும் இந்தச் சட்டத்தின் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

தேவை ஏற்படின் இராணுவத்தை வரவழைத்து கட்டளையைச் செயற்படுத்தும்படி, நடவடிக்கை எடுப்பதற்கும் சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அவசியம் ஏற்படும் பட்சத்தில், பொது மக்களுக்குக்கூட, கட்டளை பிறப்பித்து வன்செயலாளரைக் கட்டுப்படுத்துவதற்து அல்லது கலைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் சட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றது.

நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சி செய்தபோது நீதிபதி மற்றும் அரசாங்க அதிபர்களினால் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. ஆங்கிலேயர் நாட்டைவிட்டு சென்றதன் பின்னர் மாவட்ட நீதிபதிகளும், அரசாங்க அதிபர்களும் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில்லை. ஏனெனில் பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் பிரகாரம், பாதுகாப்புப் படையினருக்கும், பொலிசாருக்கும் இந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

ஆகவே, இவ்வாறு வன்செயல்களில் ஈடுபடுபவர்களைக் கலைப்பதற்கான சட்டத்தை பயன்படுத்தும் நிலைக்கு மாவட்ட நீதிபதியையோ அல்லது அரசாங்க அதிபரையோ தள்ள வேண்டாம் என்று யாழ்ப்பாணத்தில் ரௌடித்தனங்களில் ஈடுபடும் இளைஞர்களுக்கு, இந்த பிணை விசாரணை வழக்கில் அளித்துள்ள தீர்ப்பில், நீதிபதி இளஞ்செழியன் எச்சரிக்கை செய்துள்ளார். (எ-4,9)


A/L 2016
புவியியல் - N.பாபு
PAPER CLASS
★ அலகு ரீதியிலான மீட்டல் வகுப்பு
★ புதிய வெளி மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்
DMI- யாழ்ப்பாணம் சனி,ஞாயிறு - 12மணி
C.C.A- சுன்னாகம் சனி,ஞாயிறு - 5மணி
H.A.C- மீசாலை வியாழ.வெள்ளி- 4மணி
ஆட்ஸ் அக்கடமி - புத்தூர் திங்கள்,புதன்- 4.30 PM
(2040)



இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம். இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு
அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு தினங்களில் பதிவுகள் மேற்கொள்ளப்படும்
இன்னும் ஒருசில தினங்களில் பதிவுகள் நிறைவடைகின்றன. இறுதி சந்தர்ப்பம் - உடனே விரையுங்கள்
அமெரிக்க லொத்தர் விசா
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.
யாழ்ப்பாணம். 49A,சப்பல் லேன், 0768226241
கிளிநொச்சி A9 வீதி, (பழைய ஆஸ்பத்திரிக்கு முன்னால்) 0768226240
நெல்லியடி. முடக்காட்டு சந்தி, 0776699892
வல்வெட்டித்துறை. யாழ் வீதி,வல்வெட்டி, 0776697960

V2 TRAVELS & TOURS
(C-2444)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.